Mithus Jewellery
322-324 London Rd., Croydon CR0 2TJ
Ph: 020 8683 1756 Fax: 0208683 1792
OPEN 7 DAYS A WEEK
DIAMOND PALACE
Ph: 0208767 5333 Fax: 02087675814
76 Tooting High St., London SW17 0RN

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

SUN TV
+44(0) 208 33 56780
WWW.SUNTVUK.COM

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk
UN-43 May. 2005
For News & Advertising: 020 8952 5677

# தமிழ் பகுதிகளில் தொழிற்கட்சிக்கான ஆதரவு தொடர்கிறது. மீண்டும் ரொனி பிளயர்

மூன்றாவது தடவையாக மீண்டும் ரொனி பிளயர் குறைந்த பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்துள்ளார். 645 பாராளுமன்றத் தொகுதிகளுக்கான தேர்தலில் 356 ஆசனங்களைப் பெற்று தொழிற்கட்சி ஆட்சி அமைத்துள்ளது. இரண்டாவது இடத்தில் உள்ள கொன்சவேடிவ் கட்சி 197 ஆசனங்களையும் அடுத்து வந்த லிபிரல் டெமகிரட் கட்சி 62 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

தொழிற்கட்சி கடந்த தேர்தலுடன் ஒப்பிடும் போது இத்தேர்தலில் 47 ஆசனங்களை இழந்துள்ளது. கொன்சவேடிவ் கட்சி 33 ஆசனங்களையும் லிபிரல் டெமகிரட் கட்சி 11 ஆசனங்களையும் மேலதிகமாகப் பெற்றுள்ளன. 113ஆக இருந்த தொழிற்கட்சியின் பெரும்பான்மைப் பலம் தற்போது 67ஆகக் குறைக்கப்பட்டு உள்ளது.

தமிழர்களின் வாக்குகள் எந்தக் கட்சியையும் பதவியில் இருத்தவோ பதவியில் இருந்து வெளியேற்றவோ பலமுடையது அல்ல. ஆனால் தமிழர்கள் செறிந்து வாழும் 50 வரையான தொகுதிகளில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய பலம் தமிழ் வாக்காளர்களுக்கு இருந்தது. ஆனால் தமிழ் வாக்காளர்கள் பெரும்பாலும் தமது வாக்குகளை வழமைபோல் தொழிற்கட்சிக்கே அளித்துள்ளனர். பாரம்பரியமாக தொழிற்கட்சியின் ஆதரவு சக்தியாக இருக்கும் சிறுபான்மை இனங்கள் கடந்த இரு தடவை தொழிற்கட்சி ஆட்சியின் போதும் அக்கட்சியால் கைவிடப்பட்டிருந்த நிலையிலும் மீண்டும் அக்கட்சிக்கே வாக்களித்து உள்ளனர்.

சர்ச்சைக்குரிய ஈழபதிஸ்வரர் ஆலயம் தொடர்பான பிரச்சினையில் தொழிற்கட்சிக்கு எதிரான பிரச்சாரத்தை விடுதலைப் புலிகளின் ஆதரவு சக்திகள் முடுக்கி விடப்பட்ட போதும் மீண்டும் தொழிற்கட்சியே அப்பகுதியை (பிறன்ற் நோத்) வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தோற்றுப் போகும் கட்சிக்கு வாக்களிப்பதில் என்ன பயன் என்று எண்ணியும் கொன்சவேடிவ் கட்சி மீதான பயத்தினாலும் தமிழர்கள் தொழிற்கட்சிக்கே வாக்களித்து உள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இவர்களிடையே சூழ்நிலை மாற்றத்துக்கு ஏற்ப வாக்களிக்கும் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவில்லை என்றும் லிபிரல் டெமகிரட் கட்சியினர் இச்சமூகங்களுக்குள் செல்வாக்கைப் பெற்றுக் கொள்ளத் தவறியுள்ளனர் என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (போட்டியிட்ட கட்சிகள் 12ம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் போட்டியிட்ட தமிழ்ப் பெண்

### மிச்சம் - மோடன் தொகுதியில் சுயேட்சை ரதி அழகரட்ணம் ?



மே 5 நடைபெற்ற பிரித்தானியப் பாராளுமன்றத்துக்கான தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகக் களம் இறங்கிய ரதி அழகரட்ணம் தோல்வியடைந்தார். தமிழ் மக்கள் குறிப்பிடத்தக்க அளவு வாழும் மிச்சம் - மோடன் தொகுதிகளில் போட்டியிட்ட ரதி அழகரட்ணம் வடமராட்சியை பூர்வீகமாகக் கொண்டவர். இவர் பிறந்து வளர்ந்தது மலேசியாவில். தான் தெரிவு செய்யப்பட்டால் தமிழர்களைப் பாதிக்கும் விடயங்களை பாராளுமன்றம் வரை கொண்டு சென்று போராடுவேன் என உறுதியளித்திருந்தார்.

இவரது தோல்வி தேர்தலுக்கு முன்னரேயே உறுதியாக இருந்த போதிலும் துணிச்சலாக களம் இறங்கி இருந்தார். மேற்படி தொகுதியில் தொழிற்கட்சி வேட்பாளரான Siobhain Mcdonagh 56.4 வீதமான 22,489 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். ரதி அழகரட்ணம் முன்னாள் தொழிற்கட்சி உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. ரொனி பிளயர் தலைமையிலான தொழிற்கட்சி கொன்சவேடிவ் கட்சியின் வலதுசாரிக் கொள்கைகளையே கடைப்பிடிப்பதாகக் குறிப்பிடும் இவர் (தொடர்ச்சி 2ம் பக்கம் .....)

Party Bookings Available
THE ISLANDERS CLUB
Bar and Restaurant
(Sri Lankan and Indian Cuisine)
* Catered for all occasions
* Big Screen TV with Live coverage
* Pool table
* 10% discount for takeaway over £15
* We Specially prepare vegeterian dishes
* 120 seat capacity for parties
Tel: 020 8203 9428
8/9 Sentinel Square, Brent Street, Hendon London NW4 2EL
BEHIND HSBC BANK
Email: theislandersclub@amserve.com
Website: www.theislandersclub.co.uk

MIDDX TYRES LTD
SPECIALISTS IN PERFORMANCE TYRES
NEW, PARTWORN & REMOULDS
MOT PREPARATIONS. STEERING EXHAUSTS. WHEELS
SUSPENSION. 4 WHEEL ALIGNMENTS. BRAKES
Starter Motors, Alternators and Batteries
41-43 THE GREEN SOUTHALL MIDDLESEX
TEL & FAX: 020 8813 9154

Paul Bakers
Specialists in Egg & Eggless Cakes for all occasions
Also Bread, Baps, Rolls, etc.
CALL 020 8813 8322
SOUTHALL 020 8574 8388
32, SOUTH ROAD, / 143, NORWOOD ROAD
ALSO IN FELTHAM & ISLEWORTH

IDEAL GLAZING
With over 20 years of experience
MANUFACTURERS & INSTALLERS OF uPVC AND ALUMINIUM
FOR FREE ESTIMATE CALL
020 8574 8342

TVS
TVS CASH & CARRY
Importers & wholesalers of ethnic foods.
Specialists in Afro-Caribbean, African, Indian, Chinese, Sri Lankan & Halal food products.
All branded grocery & drinks available at competitive prices.
Major credit cards accepted, Cheque facility subject to conditions.
For details, Contact Us on
0208 965 2885
TVS HOUSE 63 Minerva Road, Park Royal, London NW10 (Opposite ASDA)

C & S Builders Merchants (Stamford Hill) Ltd.
NEW SUPER STORES over 1 acre site
SKIPS FOR HIRE
Special Offers on Boilers
1. Vaillant £510.00 + VAT
2. Biast £208.00 + VAT
OPEN 7 DAYS A WEEKS
Call: 020 8498 2000
C & S HOUSE: 151, Blackhorse lane, London E17 5QU, Tel: 020 8498 2000
276-286 Stamford Hill, London N16 6TY, Tel: 020 8809 5373
122-126 Grove Green Road, London E11 4EL, Tel: 020 8539 2391
E-mail: sales@csbuildersmerchants.co.uk www.csbuildersmerchants.co.uk
Also at LEYTON & STAMFORDHILL

Man & Co Estate Agents
SALES - LETTINGS - MANAGEMENT - FINANCIAL SERVICES
3 Fryent Way, Kingsbury, London NW9 9ER
Tel: 020 8206 9930 Fax: 020 8206 9931
Web: www.manandco.co.uk
Email: info@manandco.co.uk
Future Finance
020 8206 9939

# மண்டபத்துக்கு உள்ளே சுனாமி நிகழ்வு வெளியே வெட்டுக் கொத்து

கிழக்கு இலண்டன் தமிழ் யுவதிகள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுனாமி நிதிசேகரிப்பு நிகழ்வில் ஈஸ்ற்ஹாம், வோல்தம்ஸ்ரோ குழுக்கள் மோதிக் கொண்டன. இச்சம்பவம் வங்கி விடுமுறை தினமான மார்ச் 28ல் இடம்பெற்றது. வோல்தம் பொறஸ்ற் ரவுன் ஹோல் மண்டபத்துக்கு உள்ளே இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் உரையாற்றிக் கொண்டிருக்கையில் மண்டபத்தின் கதவோரம் வால் வெட்டுக்கு இலக்கான நபர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார்.

இத்தாக்குதலில் 19 வயது இளைஞருக்கு தலையில் கடுமையாக காயம் ஏற்பட்டது. மற்றுமொரு இளைஞரின் கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. இரு இளைஞர்களும் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

உள்ளே நுழைவாயில்கள் அனைத்தும் மூடப்பட்ட நிலையில் பாதுகாவலர்கள் நிறுத்தப்பட்டு சுனாமி நிகழ்வு சுமூகமாக நடைபெற்றது. மோதலில் ஈடுபட்டவர்கள் யாரும் உள்ளே வர அனுமதிக்கப்படவில்லை. சுனாமி நிகழ்வில் சாந்தன் உட்பட விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

50 வரையான இளைஞர்கள், நிகழ்ச்சி நடைபெற்ற வோல்தம்பொறஸ்ற் மண்டபத்தின் முன்னால் மோதிக் கொண்டனர். இம்மோதலில் உயிர் பறிக்கும் பல ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாக இச்சம்பவத்தை விசாரணை செய்யும் அதிகாரி ஆண்டி பெற்றி தெரிவித்தார். சாமுராய் வாள், கத்திகள், பொல்லுக்கட்டைகள் போன்றன தாக்குதலில் பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி பாதசாரிகள் முறையிட்டதை அடுத்து பொலிசார் சம்பவ இடத்துக்கு 5:30 அளவில் விரைந்தனர். அப்போது மண்டபத்தின் கார் பார்க்கில் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் குப்பையாக பரவி இருந்தது. கைத்துப்பாக்கி, கொக்கி விளையாடும் தடிகள், கிரிக்கட் துடுப்பாட்ட மட்டை என்பன கார்பார்க்கில் சிதறிக் கிடந்தது. இத்தாக்குதலில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவம் இடம்பெறுவதற்கு முதல் வாரமும் இடம்பெற்ற பின்னும் இதே போன்ற தாக்குதல் சம்பவங்கள் கிழக்கு இலண்டனில் இடம்பெற்று உள்ளது. ஈஸ்ற்ஹாம், வோல்தம்ஸ்ரோ இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையே இத்தாக்குதல்களுக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மண்டபத்தினுள் இருந்தவர்கள் பலர் வெளியே இடம்பெற்ற கலவரத்தை அறிந்திருக்கவில்லை. நிகழ்ச்சிகள் எந்த விதத் தடையுமின்றி சுமூகமாக இடம்பெற்றது.

## அப்பாவி இளைஞர் ரொறன்ரோவில் சுட்டுக் கொலை

தனது சுகவீனமான தாயை பார்க்கச் சென்ற அப்பாவி இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் பெப்ரவரி 16, ரொறன்ரோவில் இடம்பெற்றது. செல்வகுமார் செல்லையா (27) என்ற இளைஞர் வெல்ஸ்லியில் பிளீக்கர் விதியில் உள்ள அப்பாட்மண்ட்டுக்கு தனது தயாயைப் பார்க்கச் சென்ற போது படிகளில் வைத்துச் சுடப்பட்டார். றெஸ்ரோறன் ஒன்றில் சமையல் பிரிவில் பணியாற்றும் செல்வகுமார் எந்த கிரிமினல் பதிவும் அற்றவர் என்றும் எந்த வன்முறைக்குழுக்களுடனும் தொடர்புகளற்றவர் என்றும் சம்பவத்தை விசாரணை செய்யும் புலன்விசாரணை அதிகாரி Joel Klumatycki தெரிவிக்கிறார்.

கனடியப் பிரஜையான செல்வகுமாருக்கு இரு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உள்ளனர். சம்பவம் இடம்பெற்ற அப்பாட்மெண்டில் இருந்த நோயாளியான தாயை கவனிப்பதற்காக செல்வகுமார் அங்கு சென்றிருந்தார். செல்வகுமாரின் கொலைக்கான காரணத்தை பொலிசார் உறுதிப்படுத்தவில்லை. ஆனால் களவெடுக்க வந்தவர்கள் இக்கொலையைச் செய்திருக்கலாம் என நம்புகின்றனர்.

சம்பவம் இடம்பெற்ற அப்பாட்மென்ட்டில் இவ்வாறான சம்பவங்கள் வழமையானது என்றும் பொலிசாருக்கு தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அங்கு வசிப்பவர்கள் குற்றம்சாட்டுகின்றனர். அப்பாட்மென்டில் வசிக்கும் பெரும்பாலானவர்கள் நன்னடத்தை கொண்டவர்கள் என்றும் ஆனால் படிகளில் வசிப்பவர்கள் பற்றிய பிரச்சினை காணப்படுவதாகவும் பொலிசாருக்கு தெரிவிக்கப்பட்டது. படிக்கள் கொண்டம், பியர் ரின்கள் போன்றவற்றால் குப்பையாக இருப்பதாக அங்கு வாழ்பவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

**கொலை வழக்கு :** 4மாதத் தமிழ் குழந்தை ஆயிசாவின் கொலை வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு வந்துள்ளது. இக்கொலை தொடர்பாக அவரது பெற்றோர் மீது பொலிசார் குற்றம்சாட்டியுள்ளனர்.

## போலி ஆவணங்கள் சமர்ப்பித்தவர்கள் விளக்கமறியலில்

போலி அவணங்களை சமர்பித்து வெல்ல முயன்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டு மார்ச் 4 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இலங்கையில் உள்ள பிரான்ஸ் தூதரகத்தில் விசா பெறுவதற்கு போலி ஆவணங்களைச் சமர்ப்பித்த முத்தையா சிவராஜா, ருவந்திகா ரணவீர மற்றும் போலிச் சான்றிதழ்கள் தயாரித்த ராஜேந்திரன் செல்லத்துரை ஆகிய மூவரையும் கொழும்பு பிரதம நீதவான் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

பிரான்ஸ் செல்வதற்காக போலித் திருமண ஆவணங்களைத் தயாரித்து தூதரக அதிகாரிகளிடம் சமர்ப்பித்தவேளை இவர்கள் தூதரக அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டனர். இவர்கள் பின்னர் இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.

## ஒப்பிரேசன் மக்ஸிம் : ஈமெயில்

குடிவரவு, பாஸ்போட், ஆட்கடத்தல் குற்றங்களை கட்டுப்படுத்த உருவாக்கப்பட்ட ஒப்பிரேசன் மக்ஸிம், தற்போது பொது மக்களிடம் இருந்து தகவல்களைப் பெறுவதற்கு மெற் பொலிஸ் இணையத்தளத்தில் புதிய தளம் ஒன்றை இணைத்து உள்ளது. www.met.police.uk/op_maxim என்ற புதிய தளம் ஏப்ரல் 20 முதல் பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டு உள்ளது. ஒப்பிரேசன் மக்ஸிம் தொடர்பான விபரங்கள் இதில் கொடுக்கப்பட்டு உள்ளது. பொலிஸிற்கு தகவல் கொடுக்க விரும்புபவர்கள் தங்களை வெளிப்படுத்தாமல் இணைய அஞ்சல் மூலமாகவும் தகவல்களை வழங்க முடியும்.

## ஆசிய மில்லியனர் பட்டியலில் ஒரு தமிழர்

ஆசிய மில்லியனர் பட்டியலில் துரைசாமி பத்மநாபன் (54) 69 இடத்தைப் பிடித்து உள்ளார். கடந்த ஆண்டில் £17.5 மில்லியனாக இருந்த அவரது நிதி மதிப்பு இவ்வாண்டு £29 மில்லியனாக உயர்ந்து உள்ளது. ஆசிய மில்லியனர் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரே ஒரு தமிழர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. தகவல் தொடர்பு தொழில்நுட்ப வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இவர் தீபம் தொலைக்காட்சியின் முக்கிய பங்காளர் என்பது குறிப்பிடத்தக்கது.



மேலும் இரு இலங்கையர்கள் இப்பட்டியலில் இடம்பெற்று உள்ளனர். கொம்பியுட்டர் தேர்ச்சியாளர்களை வழங்கும் சேவை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இவரின் நிதி மதிப்பு £6.2 மில்லியன். இவர் 221வது இடத்தில் உள்ளார். டேஸ் குணவர்த்தன £4.0 மில்லியன் நிதி மதிப்புடன் 283வது இடத்தில் உள்ளார். இவர் சிறந்த உணவகங்களை நடாத்தி வருகிறார்.

## இரட்டை இழப்பு



வெம்பிளி பார்க் அண்டகிரவுண்ட் ஸ்ரேசனில் கொலை செய்யப்பட்ட பிரசன்னாவின் நட்டஈட்டு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு உள்ளது. நான்கு குழந்தைகளின் (படம்) தந்தையான பிரசன்னா தென்னிலங்கையைச் சேர்ந்தவர். இக்குடும்பத்தின் வருமானத்தை பெறும் ஒரே நபரையும் இழந்த நிலையில் வாழ்ந்த அக்குடும்பத்தின் நட்ட ஈட்டு விண்ணப்பமும் தற்போது நிராகரிக்கப்பட்டு உள்ளது. பிரசன்னாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்கான விசாவை வழங்கவும் பிரித்தானிய அரசு மறுத்திருந்தது. தற்போது அவர்களுக்கான நட்ட ஈடும் மறுக்கப்பட்டு உள்ளது.



மே 2ல் அண்டகிரவுண்ட் ஸ்ரேசனில் சிறுவன் ஒருவனின் காலில் தெரியாமல் மிதித்துவிட்டதால் அச்சிறுவனின் தந்தை பிரசன்னாவை தாக்கினார். அதனால் மூளையில் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் உயிர்காக்கும் இயந்திரத்தில் பொருத்தப்பட்டார். நினைவு திரும்பாத நிலையில் அவரது உயிர்காக்கும் இயந்திரம் நிறுத்தப்பட்டு பிரசன்னா (படம்) மே 5ல் உயிரிழந்தார். மான்சுலர்ரர் குற்றம் நிருபிக்கப்பட்டு 3 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

முற்பக்கத் தொடர்ச்சி ....



ஈராக் மீதான யுத்தம் போன்ற காரணங்களால் தான் தொழிற்கட்சியில் தொடர விரும்பவில்லை என்று தெரிவித்தார். தமிழர் உட்பட்ட சிறுபான்மையினங்களை தொழிற்கட்சியினர் கைவிட்டுவிட்டதாக அவர் குற்றம்சாட்டினார்.

வெற்றி தோல்வி பற்றியெல்லாம் கவலைப்படாமல் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் தமிழர்கள் சுயேட்சையாகப் போட்டியிட வேண்டும் என்றும் ரதி அழகரட்ணம் கூறியிருந்தார். அதுவே புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் அரசியல் விழிப்படைய உதவும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

பிரித்தானிய அரசியல் கட்டமைப்பில் இணைந்துள்ள முதற் தமிழ் பெண்ணாக செல்வி எலிசபத் மஅன் உள்ளார். இவர் லிபிரல் டெமகிரட் கட்சியின் கவுன்சிலராக உள்ளார். தற்போது இலண்டனில் 5 தமிழ் கவுன்சிலர்கள் உள்ளனர். ரதி அழகரட்ணம் வெற்றி பெற்றிருந்தால் பிரித்தானியப் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட முதல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வரலாற்றுப் பெருமையை அவர் பெற்றிருப்பார். ரதி அழகரட்ணம் 186 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். வெற்றி தோல்விகளுக்கு அப்பால் இவ்வாறான முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டும். ஆனால் கட்சிகளின் ஆதரவுடன் களம் இறங்குபவர்களே வெற்றி அடைவதற்கான வாய்ப்புகளை பெரும்பாலும் பெறுகின்றனர்.

**Palm Restaurant**
Srilankan & South Indian Cuisine
சுவை, சிக்கனம், சேவை, நிறைவு
VEG or NON VEG
*Party orders Welcome From anywhere*
Kandiah Rajarathnam
(T) 020 8520 7465
102, Palmersston Road, Walthamstow E17 6PZ


**T.C.S. TUTORIAL COLLEGE**
Celebrating 10 years of Education Excellence
Offers first class education in small classes
- GCSE's - full and part-time subjects
- Computing courses
- EFL and ESOL English classes - all levels
- Saturday School for Children
- Full-time GCSE studies for 14-16yrs old.

Call Now:
Tel: 020 8206 2988
Email: tcs_school@tiscali.co.uk
TCS Tutorial College, Alpine House, Honeypot Lane, Kingsbury, London NW9 9RX

**SHOP FOR SALE**
Shop for sale in East London
News, Grocery and Off Licence
New Lease 16 years
Takings£6/7000 per week
Rent £13000 p/a with accommodation
£65,000 ONO
Call: 079 0431 7029
or
079 3149 1157
for details

# ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் இருந்து சிவயோகம் வெளியேற்றப்பட்டது
# £25,000யைச் செலுத்துமாறு சிவயோகத்துக்கு நீதிமன்றம் உத்தரவு

**எழுதியவர்கள் :**
**ரி கொன்ஸ்ரன்ரைன், த ஜெயபாலன், அரவிந்தன்**



தீர்ப்பின்பின் நீதிமன்றத்தில் இருந்து சீவரத்தினம் வெளியேறுகிறார்.

ஈழபதீசுஸ்வரர் ஆலயத்தில் இருந்து சிவயோகத்தை நீதிமன்றம் வெளியேற்றியது. ஏப்ரல் 7ல் உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற மூன்றரை மணிநேர வாதாட்டத்தின் பின் ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் இருந்து சீவரத்தினம் தலைமையிலான சிவயோகத்தை உயர் நீதிமன்ற நீதிபதி Tugendhat வெளியேற உத்தரவிட்டார். காலை 10:30 இற்கும் ஆரம்பமான வழக்கின் நீண்ட தீர்ப்பு மதியம் ஒரு மணியளவில் வழங்கப்பட்டது. ஈழபதீஸ்வரர் ஆலயத்தை சிவயோகத்தின் நிர்வாகம் தொடர்வதை நீதிமன்றம் அனுமதிக்க மறுத்ததை அடுத்து அதே தினம் மாலை 5:30 க்கு ஈழபதீஸ்வரர் ஆலயம் கை மாற்றப்பட்டது. ஆலயத்தின் திறப்பு, ஆலயத்தில் இருந்து எடுக்கப்பட்ட நகைகள் மற்றும் பெறுமதியான பொருட்கள், ஆலயத்தின் வங்கி ஆவணங்கள் என்பன ஜெயதேவனின் ஆலய நிர்வாகத்துக்கு கை மாற்றப்பட்டது. வழக்கின் செலவுத் தொகை £25,000 யைச் செலுத்துமாறும் சிவயோகத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. (பார்க்க : ஈழபதீஸ்வரர் காலக் குறிப்பு. )

### வழக்கின் பின்னணி :

ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் நிர்வாக உறுப்பினர்களான ஆர் ஜெயதேவன், விவேகானந்தன் ஆகியோர் இலங்கை சென்றிருந்த போது விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டனர். விவேகானந்தன் விடுவிக்கப்பட்டு இலண்டன் வந்து ஆலயத்தின் நிர்வாகத்தை சீவரத்தினம் தலைமையிலான சிவயோகத்துக்கு கை மாற்றினார். ஆலயம் கை மாற்றப்பட்ட பின்னர் ஜெயதேவனும் விடுவிக்கப்பட்டு இலண்டன் வந்தார். அதனை அடுத்து ஈழபதீஸ்வரர் ஆலயம் இயங்கிய கட்டிடத்தை கட்டிடச் சொந்தக்காரர்களான உள்ளூர் தொழிற்கட்சியினர் பூட்டி அதன் பூட்டை மாற்றினர். மறுநாள் காலை ஆலயத்துக்கு வந்த சிவயோகம் அணியினர் பூட்டை உடைத்து கட்டிடத்துக்குள் நுழைந்ததை அடுத்து கட்டிடச் சொந்தக்காரர்கள் பொலிஸாருக்கு அறிவித்து கட்டிடத்துக்குள் இருந்து சிவயோகம் அணியினரை வெளியேற்றினர். கட்டிட உரிமையாளர்களும் ஏற்கனவே அதனை குத்தகைக்கு எடுத்திருந்த ஆர் ஜெயதேவன் அணியினரும் ஈழபதீஸ்வரர் ஆலயத்துக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என சிவயோகம் அணியினர் இன்ஜங்சன் எடுத்தனர். வழிபாட்டுக்கான சுதந்திரம் என்ற அடிப்படையில் தற்காலிகமாக சிவயோகம் ஆலயத்தை நடத்த அனுமதிக்கப்பட்டது. இருவாரங்கள் ஆலயம் சிவயோகத்தால் நடத்தப்பட்டது. ஏப்பிரல் 7ல் இந்த இன்ஜங்சன் வழக்கு முழுமையாக விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

### சிவயோகம் V பவிற் ஹோல் கவனர்ஸ் வழக்கு விசாரணை :

சிவயோகத்தால் பவிற் கோல் கவனர்ஸ்க்கு எதிராகத் தொடுக்கப்பட்ட இன்ஜங்சன் வழக்கு உயர் நீதிமன்ற நீதிபதி ருகென்கற்க்கு முன்னிலையில் நடைபெற்றது. சிவயோகத்தின் வாதத்துடன் வழக்கு ஆரம்பமானது. சிவயோகத்துக்கும் ஜெயதேவனது நிர்வாகத்துக்கும் இடையே உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது என்றும் விவேகானந்தன் ஜெயதேவனது நிர்வாகத்தின் சார்பில் கையெழுத்திட்டதாகவும் சிவயோகத்தினர் வாதிட்டனர். ஆகவே ஆலயத்தின் நிர்வாகத்தை சிவயோகமே பரிபாலிப்பதாகவும் கட்டிடச் சொந்தக்காரர்களுக்கு வாடகை என்பன செலுத்தப்படும் என்றும் அதனால் கட்டிடச் சொந்தக்காரர்களுக்கு நிதிப் பிரச்சினை ஏற்படாது எனவும் சிவயோகம் சார்பில் வாதிடப்பட்டது. சிவயோகம் தொடர்ந்து அங்கு செயற்பட அனுமதிக்கப்படாவிட்டால் ஆலயம் மூடப்படும் அபாயம் இருப்பதாகவும் அதனால் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் சிவயோகத்தின் சட்டப்பிரதிநிதி வாதிட்டார். இவற்றின் அடிப்படையில் பவிற் ஹோல் மண்டபத்தில் ஈழபதீஸ்வரர் ஆலயத்தினை சிவயோகம் நிர்வகிப்பதை அனுமதிக்க வேண்டும் என சிவயோகம் கேட்டுக் கொண்டது.

அதனைத் தொடர்ந்து தமது வாதத்தைத் தொடர்ந்த ஜெயதேவனின் நிர்வாகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பின்ட்மான்ட் பாட்னேஸ் சட்டவாதி பவிற் கோல் ஜெயதேவனது நிர்வாகத்துக்கே கையளிக்கப்பட்டதாகவும் அவர்களே ஆலயத்தின் நிர்வாக விடயங்களை கவனித்து வந்ததாகவும் குறிப்பிட்டார். அதனையே கட்டடி உரிமையாளர்களும் விரும்புவதாகவும் ஜெயதேவனது சட்டவாதி சுட்டிக்காட்டினார். அங்கு பவிற் கோல் கவனரும் சமூகமளித்து இருந்தார். தனது குறுகிய நேர வாதத்தில் கட்டிட உரிமையாளர்களுக்கு வாடகை மற்றும் நிதியில் அக்கறை இல்லை என்று குறிப்பிட்ட சட்டவாதி யார் கட்டிடத்திற்குள் நுழைவதற்கு உரிமை உடையவர்கள் என்பதே முக்கியமானது என்று குறிப்பிட்டார். ஆலயம் ஜெயதேவனது நிர்வாகத்துக்கு கையளிக்கப்பட்டால் பூட்டப்படும் என்ற வாதம் அர்த்தமற்றது என்று சுட்டிக்காட்டிய சட்டவாதி கடந்த ஆறு வருடங்களாக ஆலயத்தை நல்ல முறையில் நடத்திய ஜெயதேவனது நிர்வாகத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளுமா அல்லது மூன்று வாரங்கள் ஆலயத்தை நடத்திய சிவயோகத்தை ஏற்றுக் கொள்ளுமா என அவர் கேள்வி எழுப்பினார்.



தீர்ப்பின்பின் நீதிமன்றத்தின் முன் கூடி தமது வெற்றியைத் தெரிவிக்கின்றனர் ஜெயதேவன் - விவேகானந்தன் அணியினர்.




மேலும் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாகிகள் ஜெயதேவன் மற்றும் விவேகானந்தனது கையெழுத்துக்கள் அவர்களை வன்னியில் தடுத்து வைத்து பலாத்காரமாகப் பெறப்பட்டது என ஜெயதேவனது சட்டவாதி அங்கு குறிப்பிட்டார். இது பற்றிய ஆவணங்கள் பாதுகாப்பு அமைச்சில் இருந்தும் வெளியுறவுத்துறை அமைச்சில் இருந்தும் தனக்கு கடைத்துள்ளதாகக் குறிப்பிட்ட நீதிபதி இது மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டு என்றும் அதனை இந்நீதிமன்றத்தில் விசாரிக்க முடியாது என்றும் நீதிபதி சுட்டிக்காட்டினார்.

### தீர்ப்பு :

சிவயோகத்தின் சட்டப்பிரதிநிதியின் வாதத்தின் போது பல தடவைகள் குறுக்கிட்டார் நீதிபதி. வழக்கின் ஆரம்பத்திலேயே ஆலயம் என்ற சொல்லை பயன்படுத்த முடியாது என்று குறிப்பிட்ட அவர் இவ்வழக்கில் அதற்கு சட்டவரைவிலக்கணம் இல்லை என்றும் ஆலயம் என்ற சொல்லைப் பயன்படுத்த முடியாது என்றும் குறிப்பிட்டார். வாதப் பிரதிவாதங்களை முழுமை யாக ஆராய்ந்த நீதிபதி இவ்வழக்கு நிலச்சொத்துடமைச் சட்டத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும் எனக் குறிப்பிட்டார். ஆவணங்கள் எப்படி மாற்றப்பட்டது ஆலயம் எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது போன்ற விடயங்கள் இங்கு கருத்தில்

## தீபம் : வலம் வரும் வதந்திகள்

இலண்டனில் அரசியல் சார்பற்று இயங்கும் தீபம் தொலைக் காட்சிக்கு எதிரான வதந்திகள் திட்டமிட்ட முறையில் பரப்பப்பட்டு பரபரப்பை ஏற்படுத்தியது. தீபத்தை விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசியல் அமைப்பான ஈபிடிபி அமைப்பு வாங்கி விட்டதாக இந்த வதந்தி பரப்பப்பட்டது. இதன் மூலம் தீபம் அரசியல்சார்பற்ற தொலைக்காட்சி அல்ல அது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடைய தொலைக்காட்சி என வதந்தியைக் கிளப்பியவர்கள் அரசியல் சாயம் பூச முற்பட்டனர். இவ்வதந்தியைக் கண்டித்த தீபம் அது முற்றிலும் பொய்யானது எனத் தெரிவித்து உள்ளது. தீபம் தொலைக்காட்சியின் ஆரம்ப நாட்களில் அது இந்தியத் தொலைக்காட்சி என்ற வதந்தி திட்டமிட்ட முறையில் பரப்பப்பட்டிருந்தது. அதனால் அதன் உரிமையாளர்கள் செல்வகுமார், பத்மநாபன் ஆகி யோரை மக்கள் முன் அறிமுகப்படுத்தி அவர்களது பின்னனியை தெரியப்படுத்தினார் அறிவிப்பாளர் பி எச் அப்துல் கமீத்.

அண்மையில் தனது சந்தாக் கட்டணத்தை £60களுக்கு குறைத்ததன் மூலம் ஆயிரக்கணக்கான புதிய சந்தாதாரர்களை பெற்ற தீபம் தொலைக்காட்சி கூடிய பார்வையாளர்களைக் கொண்ட தமிழ் தொலைக் காட்சியாக முன்னணிக்கு வந்துள்ளது. இதனால் ஏற்பட்ட காழ்ப்புணர்வும் போட்டியுமே இந்த அரசியல் சாயம் பூசும் நடவடிக்கையின் பின்னணியெனத் தெரியவருகிறது. தீபத்தின் பக்க சார்பற்ற செய்திகள் மற்றும் பதிவுகள், எதிரொலி போன்ற பக்க சார்பற்ற அரசியல் ஆய்வுகள் அதன் தனித்துவத்தை தொடர்ந்தும் பேணுகிறது. கலாநிதி மு நித்தியானந்தன், எம் என் எம் அனஸ், ஜானகி செல்லத்துரை, உதயகுமார் கண்ணன் ஆகியோரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே தனது தொலைக்காட்சிச் சேவையை அரசியல் நெருக்குதல்கள் காரணமாக நிறுத்திக் கொள்வதாக அறிவித்த வெக்ரோன் தமிழ் ஒளிபரப்பு சில தினங்களின் பின் மீண்டும் தனது இலவச ஒளிபரப்பை ஆரம்பித்து உள்ளது.

## இளைஞர் சந்திப்பு : வன்முறை வேண்டாம்

இளைஞர்களுக்கிடையேயான குழு மோதல்களைத் தவிர்ப்பதற்கான மற்றுமொரு சந்திப்பு ஈஸ்ற்காமில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் அப்பகுதி இளைஞர்களுடன் கவுன்சிலர் போல் சத்தியநேசன், வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயத் தலைவர் கோபால் ஆகியோர் கலந்து கொண்டனர். வன்முறையில் தங்களுக்கு எந்த நாட்டமும் இல்லை என்று தெரிவித்த அப்பகுதி இளைஞர்கள் இளைஞர் குழுக்களுக்கிடையேயான பிரச்சினைகளை அனைத்து குழுக்களையும் இணைத்தே தீர்க்க முடியும் என்று தெரிவித்து உள்ளனர். ஒரு சில குழுக்களை மட்டும் பொது இடத்துக்கு அழைத்து பேசுவதைக் காட்டிலும் சம்பந்தப்பட்ட எல்லா இளைஞர் குழுக்கயையும் அழைத்து சுமூகமாக பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். தீர்க்கப்பட முடியும் என அவ்விளைஞர்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சந்திப்புகள் நம்பிக்கையை ஏற்படுத்தவதாக கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். அண்மைக் காலத்தில் கிழக்கு இலண்டனில் வோல்தம்ஸ்ரோ - ஈஸ்ற்காம் இளைஞர்களுக்கிடையயான மோதல் அப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தி இருந்தது. இரு தரப்பினருடனும் தனித்தனியாக பேசியதில் அவர்கள் தாங்களுக்கு வன்முறையில் எந்த நாட்டமும் இல்லை எனத் தெரிவித்து உள்ளனர்.

தமிழ் இளைஞர் குழுக்களுக்கிடையேயான மோதல்களில் கடந்த 5 ஆண்டுகளில் 15க்கும் மேற்பட்ட இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். நூற்றுக் கணக்கான வன்முறைச் சம்பவங்களில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவ்விளைஞர்கள் தொடர்பாக தமிழ் சமூகம் அமைப்புகள் தொடர்ந்தும் பராமுகமாகவே உள்ளன.

## மகாராணி கலந்து கொள்ளும் சுனாமி ஞபகார்த்த நிகழ்வு

சுனாமி ஞபகார்த்த நிகழ்வு ஒன்றை பிரித்தானிய அரசு ஏற்பாடு செய்துள்ளது. மே 11ல் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரித்தானிய மகாராணியும் கலந்து கொள்கிறார். ஞாபகார்த்த நிகழ்வில் மலர்களைக் கொண்டு சென்று ஞபகார்த்த பீடத்தில் வைப்பதற்கு பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இரு தமிழர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். கலாச்சார, ஊடக, விளையாட்டுத்துறைத் திணைக்களம் Department for Culture, Media, and Sport (DCMS) இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. இதில் கலந்துகொள்வதற்கு தமிழ் பிரதிநிதிகள் சிலரும் அழைக்கப்பட்டு உள்ளனர். தலைநகரில் உள்ள St Paul's Cathedral தேவாலயத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

# இலங்கையர்களுக்கு பிரித்தானியா விசா அறிமுகப்படுத்தி 20 ஆண்டுகள்

மே 30ல் பிரித்தானிய அரசு இலங்கைக்கு விசா முறையை அறிமுகப்படுத்தி 20 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. பொதுநலவாய நாடுகளில் இலங்கைக்கே முதல் முதலாக விசா முறையை பிரித்தானிய அரசு அறிமுகப்படுத்தியது. அதனைத் தொடர்ந்து பெரும்பாலும் பொதுநலவாய அமைப்பில் அங்கத்துவம் பெறும் மூன்றாம் உலக நாடுகள் அனைத்துக்கும் விசாமுறை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. 1985ல் இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகளின் பின் இவ்விசாமுறை நடைமுறைக்கு வந்தது. இனக்கலவரத்தை அடுத்து தமிழர்கள் புலம்பெயர முற்பட்ட போது அதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இது அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் ஏனைய நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

சட்டப்படி விசா பெற்றுவர தடைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து போர்ச் சூழலில் இருந்து தப்பிக் கொள்ள பலரும் உயிரைப் பணயம் வைத்து பயணத்தை மேற்கொண்டனர். ஆவ்வாறான புலம் பெயர்வு தொண்ணூறுக்களில் பல ஆயிரங்களாக இருந்தது. இன்று சமாதான நடவடிக்கைகளாலும் பிரித்தானியாவின் நூழைவாயில்கள் தொடர்ந்தும் இறுக்கமடைவதாலும் புலம்பெயரும் தமிழர்களின் எண்ணிக்கை சில நூறுகளாக குறைந்து உள்ளது.

தற்போது பிரித்தானியாவிலும் ஐரோப்பாவிலும் உழைக்கும் மக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியை அடுத்து வளர்முக நாடுகளில் இருந்து உழைக்கும் மக்களைக் கவரும் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போதைய தேர்தலை அடுத்து இறுக்கப்பட்டுள்ள விசா கெடுபிடிகள் தேர்தலுக்குப் பின் தளர்த்தப்படலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. அகதி அந்தஸ்து கோரி அரசில் தங்கி இருக்காமல் சட்டப்படி விசா பெற்று வருவதை ஊக்கப்படுத்தி திறை சேரியை வளர்க்கவே அரசு விரும்புகிறது.

# பிரித்தானியாவில் தமிழர்கள் இரு தசாப்தங்கள்

பிரித்தானியாவுக்கு தமிழர்கள் புலம்பெயர்ந்து 20 ஆண்டுகளைக் குறிக்கும் மாபெரும் நிகழ்வு ஒன்றை ஒழுங்கு செய்ய பிரித்தானிய பல்கலைக் கழகங்கள் முன் வந்துள்ளன. ஒக்ஸ்பேட் பல்கலைக்கழகம், கிங்ஸ்கொலீஜ் லண்டன், கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகம் என்பன இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்ய உள்ளன.

இதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் மேற்கொண்டு வருகிறார்.

கடந்த இருபது ஆண்டுகளில் தமிழர்கள் சமூக, கலாச்சார, பொருளாதார, அரசியல் விடயங்களில் எவ்வாறு வளர்ச்சி அடைந்துள்ளார்கள், மற்றைய சமூகங்களுக்கு முன் மாதிரியாக உள்ளார்கள் மறுபக்கம் பிரித்தானியாவில் தமிழ் சமூகம் எதிர்நோக்கும் இளைஞர்களின் வன்முறை, குடும்ப உறவுகளின் விரிசல், சமூகத்தில் பெண்களின் பங்கெடுப்பு என்பனவற்றை எல்லாம் வெளிப்படுத்தும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட உள்ளது. தமிழ் பொது அமைப்புகள், ஆலயங்கள், வர்த்தக நிறுவனங்கள், ஊடகங்கள், பள்ளிகள் என்பன இந்நிகழ்வில் பங்குபற்றும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் கல்வியியல், சமூகவியல், கொள்கைவகுப்பு போன்ற வெவ்வேறு பிரிவுகளில் இருந்து சர்வதேச பிரதிநிதிகளும் கலந்துகொள்ள உள்ளனர். கடந்த 20 ஆண்டுகளில் தமிழர்களின் நிலையை எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்வாக இது அமையும் என கவுன்சிலர் போல் சத்தியநேசன் தெரிவித்தார்.

# புள்ளட் விஜய் சுனாமியில் மரணம்?

இளம் பெண்ணொருவரின் கொலை தொடர்பாக கனடாவில் தேடப்பட்ட 'புள்ளட் விஜய்' சுனாமியில் இறந்துவிட்டதாக உறவினர்கள் கனடிய பொலிசாருக்கு தெரிவித்தனர். ஆனால் இலங்கை, கனடியப் பொலிஸார் அத்தகவல் பொய்யாக இருக்கலாம் என சந்தேகம் கொண்டுள்ளனர். கொலைக் குற்றத்தில் இருந்து தப்பிக்கவே இப்படி ஒரு பொய்தகவல் வழங்கப்பட்டு இருப்பதாக அவர்கள் நம்புகின்றனர்.

கனடாவில் இளம் பெண்ணொருவரின் கொலை தொடர்பாகத் தேடப்படும் 'புல்லட் விஜெய்' இங்கிலாந்தில் தலைமறைவாகி இருக்கலாம் என முன்னர் கனடியப் பொலிசார் சந்தேகித்தனர். இலங்கைத் தமிழரான விஜயராஜ் மாணிக்கவாசகர் (23) என்ற 'புள்ளட் விஜெய்'க்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது. இவ்விளைஞர் புல்லட் மற்றும் விஜேய் போன்ற புனை பெயர்களுடன் நடமாடியதாக கனடிய பொலிசார் தெரிவிக்கின்றனர். இவர் போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கை, இங்கிலாந்து அல்லது அவுஸ்திரேலியாவிற்குத் தப்பிச் சென்றிருக்கலாம் எனவும் கனடியப் பொலிசார் சந்தேகித்தனர்.

அக் கொலை தொடர்பாக கனடிய நீதிமன்றில் இலங்கையைச் சேர்ந்த நவநீதன் குணநாதன் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த ஜெயராம் சிங் ஆகியோர் ஒக்ரோபர் 22ல் ஆஜர் செய்யப்பட்டனர். கனடாவின் பிரம்ரன் நகரில் மார்ச் 19ல் 20 வயது யுவதியொருவரின் படுகொலை தொடர்பாக இவ்விருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர்.

# பிரித்தானியத் தேர்தலும் அகதிகள் பிரச்சினையும்

12ம் பக்கத் தொடர்ச்சி

எந்த உரிமையும் இல்லை.

இது பழங்கதை என்று ஒதுக்கினாலும் இன்றைக்கு நடப்பது என்ன? மாதம் 3000 ருபாய்க்கு (£15) வேலை செய்யும் இலங்கைத் தொழிலாளி தயாரிக்கும் ஒரு (Marks & Spencer) காற்சட்டையை £220 பவுண்களுக்கு மேலாக பிரித்தானியாவில் விற்கும் கொள்ளைக் காரத்தனத்தை என்னவென்று சொல்வது. ஆசிய, ஆபிரிக்க வேலையாட்கள் இல்லாவிட்டால் இன்றைக்கு பிரித்தானியப் பொருளாதாரம் படுத்துவிடும் நிலை தான். இங்கிலாந்து தமிழர்கள் வெறும் உழைப்பு அடிமைகள் அல்ல. இந்த நாட்டில் இருப்பதற்கும் ஏன் இந்த நாட்டின் தலைவிதியை மாற்றுவதில் பங்கெடுக்கவும் எங்களுக்கு உரிமை உண்டு. உங்கள் வாக்குகளை சிறிய கட்சிகளாக இருந்தாலும் உங்கள் நலனைப் பற்றிப் பேசும் கட்சிகளுக்கு வழங்கி ஏனைய பிரதான கட்சிகளுக்கு ஒரு எச்சரிக்கையை வழங்க வேண்டும். அடுத்து வரும் தேர்தல்களிலாவது அதனைச் செய்ய வேண்டும்.

# முத்திரை பதிக்கும் வெள்ளாவி




இலண்டனில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளரான விமல் குழந்தைவேலின் வெள்ளாவி நாவலை இந்தியா ருடே சஞ்சிகை ஈழத்தின் ஒரு முக்கிய படைப்பாக கண்டுள்ளது. இந்தியா ருடேயில் நூல் ஆய்வை மேற்கொண்ட தோப்பில் முகம்மது மீரான் என்ற விமர்சகர் சில தலித் படைப்புகளில் காணப்படும் பிரச்சார நெடி ஏதும் இல்லாமல் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைப் போராட்டங்களை அவர்களுடைய மொழிநடையில், மிக இயல்பாக பதிவு செய்திருக்கும் ஒரு முக்கிய படைப்பு இது எனக் குறிப்பிட்டு உள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள தீவுக்காலைக் கிராமத்தில் வாழ்ந்த சமூகத்தின் கதையை அம்மக்களின் சொந்த மொழியிலேயே நாவலாக்கி இருந்தார் விமல். கலையும் இலக்கியங்களும் மக்களுக்காகவா அல்லது கலைக்காகவா என்ற விவாதம் இருந்து கொண்டே உள்ளது. ஆனால் எவை மக்களுக்காகப் படைக்கப்படுகின்றனவோ, எவை சமூகப் புரட்சிக்கு வித்திடுகின்றனவோ, அவையே சிறந்த இலக்கியங்களாக அமைகின்றன. அந்த வகையில் விமலின் வெள்ளாவி இன்று பலராலும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பாராட்டுக்களைப் பெற்றுள்ளது.

# பெற்றோருக்கு மீள் கருத்தரிப்பு சிகிச்சை

சுனாமியால் தமது குழந்தைச் செல்வங்களைப் பறிகொடுத்த பெற்றோர் கருத்தடை செய்திருந்தால் அவர்களை மீளவும் கருத்தரிக்க வைக்கும் சிகிச்சையை இலவசமாக வழங்க தமிழ்நாடு அரசு முன் வந்தள்ளது. பாதிக்கப்பட்ட பெற்றோர் அரச மருத்துவமனைகளுக்கு சென்று இச்சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அல்லது சிகிச்சைக்கான செலவைப் பெற்று தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தமிழக அரசு தெரிவித்து உள்ளது. சுனாமியால் தமிழகத்தில் 10,000 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 2,500 பேர் குழந்தைகள்.

தெற்காசியாவை தாக்கிய சுனாமியால் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகளும் பெண்களுமே. இலங்கையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 40,000 வரை உயர்ந்தது. இவர்களில் மூன்றில் ஒருவர் குழந்தைகள். சுனாமி பேபி 81க்கு எட்டுக் குடும்பங்கள் உரிமைகோரி மரபணுப் பரிசோதனை மூலமே பெற்றோரிடம் குழுந்தை ஒப்படைக்கப்பட்டது. இச்சம்பவம் பாதிக்கப்பட்ட பெற்றோர் எவ்வளவு தூரம் உளவியல் தாக்கத்துக்கு உள்ளாகி இருந்தனர் என்பதை வெளிப்படுத்தியது. இக்குழந்தை குட் மோர்னிங் அமெரிக்கா என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள கிழக்கிலங்கையில் இருந்து அமெரிக்கா சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

"தம் குழந்தைகள் அனைவரையும் இழந்த பல தாய்மார்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டுள்ளனர். இவர்கள் மருத்துவர்களிடம் இப்போது பிள்ளைவரம் கேட்கின்றனர்" என்று மீண்டும் இலண்டன் திரும்பிய போது உதயனுக்கு தெரிவித்திருந்தார் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ மட்டக்களப்பு சென்றிருந்த டொக்டர் மைதிலி ஜெயசுந்தரம். மட்டக்களப்பில் நாவலடி, முகத்துவாரம், டச் பார், அமிர்தகழி, கல்லடி முகத்துவாரம் ஆகிய பகுதிகளில் ஜனவரி நடுப்பகுதிவரை தங்கி உளவியல் பணிகளில் ஈடுபட்டிருந்தார். இலங்கையில் குடும்பக் கட்டுப்பாட்டு முறை பெருமளவில் வளர்ச்சி அடைந்திருந்ததால் சுனாமியால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான தாய்மார்களுக்கு மீள் கருத்தரிப்பு அவசியமாகலாம் எனத் தெரியவருகிறது.

# பெண்களும் அர்ச்சகர்களாகலாம்

தமிழக இந்து ஆலயங்களில் பெண்களும் அர்ச்சகர்கள் ஆகலாம் என இந்து அறநிலையத் துறை அமைச்சர் பி சி இராமசாமி அறிவித்துள்ளார். ஆகமக் கல்லூரியில் படித்த இந்துக்கள் அவர்கள் பெண்களாக இருந்தாலென்ன எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலென்ன அர்ச்சகர்களாக வரலாம் என்று சட்டத்தில் இருப்பதாக அமைச்சர் ராமசாமி தெரிவித்துள்ளார். பெண்கள் ஆலய நிர்வாகத்தை கண்காணிக்கலாமே தவிர அவர்கள் ஆகமவிதியில் தலையிட முடியாது என விஷ்வஹிந்துபரிஷத்தின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் ஆர்.பி.வி.எஸ் மணியன் தெரிவிக்கிறார். பெண்கள் அர்ச்சகர்களாக்கப்பட்டால் தாம் அதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

கிராமப் புறங்களில் சிறு தெய்வ வழிபாட்டுத் தலங்களில் பெண்கள் பூஜை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த போதும் பெரிய ஆலயங்களில் அவர்கள் பூஜைகளுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. மேலும் இந்து மதம் சாதிப் பிளவுகளை தன்னகத்தே வைத்துக் கொண்டுள்ளதால் இந்துக்கள் பலரும் அவர்களது மதத்தாலேயே புறக்கணிக்கப்படும் நிலை உள்ளது.

இந்த வெற்றிடங்களை நிரப்பி நிராகரிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களையும் குறிப்பாக பெண்களையும் உள்வாங்கும் மதக் கூறுகள் தற்போது வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. மேல் மருவத்தூர் அம்மன் போன்ற மதக் கூறுகளின் வளர்ச்சி இதனையே காட்டுகிறது. இந்து மதம் தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யாத விடத்து அதனைப் பூர்த்தி செய்யக் கூடிய பிரிவுகள் தோற்றம் பெறுவது தவிர்க்க முடியாதது. மேல் மருவத்தூரிலும் ஆண் ஒருவரே பெண்தெய்வமாகக் கொள்ளப்படுகிறார். மேலும் சாயிபாபா மற்றும் மதக் கூறுகளை உருவாக்கியவர்களும் ஆண்களாகவே உள்ளனர். ஆனால் ஒரு பெண்ணே ஒரு மதப் பிரிவு ஒன்றை உருவாக்கி அவரைக் கும்பிடும் நிலை விரைவில் உருவாகும்.

www.imperial-world.com
The Furniture Warehouse
For all your furniture needs
Sofas, Dining Sets, Beds + mattresses, Desks, coffee tables, Wardrobes + Chests
Stores - Wimbledon, Hayes & Perivale
020 8998 7344

We DISCOUNT our PRICES not our QUALITY
DISCOUNT (CONSTRUCTION) DOUBLE GLAZING
FENSA Registered Company
Over 20 Years Experience
Selling direct to Public
VISIT OUR SHOWROOM and see our VAST RANGE of
QUALITY CONSERVATORIES
Visit our website: www.dconsdgltd.co.uk
Email: bhudia@freeuk.com
Call 020 8514 0819
844 Romford Rd, Manor Park, London E12 5JP

BRIGHT WINDOWS LTD www.brightwindows.co.uk
Manufacturers, Suppliers & Installers of Double Glazing, UPVC and Aluminium Windows, Doors, Patio Doors & Porches
Trade & Retail Welcome
020 8459 8811
www.brightdoubleglazing.co.uk Fax: 020 8459 8844
202 Church Road, Willesden, London NW10 9NP

V.J.CARPETS Ltd.
Full 3 Bedroom house Carpets
Contact us on
(T) 020 8574 9033
(M) 07958 681 009
110, The Green, Southall, Middx. UB2 4BQ

# இளைஞர்கள் குழுக்களின் தகவல்கள் சேகரிக்கப்படுகிறது

வன்செயல்கள் மற்றும் மோசடிகளில் தொடர்புடைய பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு கோவைப்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்குள் தமிழ் இளைஞர் குழுக்களின் வன்முறையைக் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்ட ஒப்பிரேசன் என்வர் புலனாய்வுப் பிரிவினரே இத்தகவல் சேகரிப்பை தீவிரமாக்கி உள்ளனர். இதுவரை 500க்கும் அதிகமானவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு பொலிஸ் கணனியில் பதிவாகி உள்ளது.

நபர்கள் பற்றிய முழுமையான விபரங்களுடன் குழுப்பெயர்கள், தொடர்பில் உள்ளவர்கள், பயன்படுத்தும் வாகனம்(ங்கள், தங்குமிடங்கள் என பல்வேறு தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளது. தமிழ் இளைஞர் குழுக்களின் தலைவர்கள் மற்றும் முக்கியமானவர்களின் விபரங்கள் தற்போது பொலிசாரிடம் உள்ளது. இலண்டனில் வன்முறை மற்றும் மோசடிகளில் ஈடுபடும் பெரும்பாலா னவர்கள் இதற்குள் அடங்குவதாக இதற்கு பொறுப்பான அதிகாரி தெரிவிக்கிறார்.

இந்தப்பட்டியலை இன்னும் உறுதியாக்க குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய விபரங்களை தங்களுக்கு வழங்கும் படி அவ்வதிகாரி கேட்டுக்கொண்டார். தகவலை இரகசியமாக தமிழில் வழங்க விரும்புபவர்கள் தமிழ் ஹொட் லைன் (0800 587 2935) நம்பரைப் பயன்படுத்த முடியும். இப்புலனாய்வுத் தகவல்கள் மூலம் குற்றவாளியை இலகுவாக இனம் காணவும் குற்றத்தை நிரூபிக்க இலகுவாக இருப்பதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

தற்போது மேற்கொள்ளப்படும் ஒப்பிரேசன் என்வர் நடவடிக் கைகள் இந்தத் தகவல்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப் படுவதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# ஒரே கல்லில் இரு மாங்காய்கள் தமிழ்ப் பேரணி

ஏப்ரல் இறுதிப் பகுதியில் 10 டவுனிங் ஸ்ரீற் ஊடாக தமிழ் மக்கள் பேரணியாகச் சென்றனர். தஞ்சம் மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படும் நிலையில் உள்ளவர்களுக்கு தொடர்ந்தும் வதிவிட உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கோரி இப்பேரணி நடாத்தப்பட்டது. இப்பேரணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். அண்மைய தேர்தல்களை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இப்பேரணியில் அகதிகள் விடயத்துடன் இலங்கை கட்சி அரசியல் விடயங்களும் புகுத்தப்பட்டமையினால் ஏற்பாட்டாளர்களிடையே சிறு விசனம் நிலவியது. தாயக கட்சி அரசியலைக் கலப்பது அகதிகள் விடயத்தை 2ம் பட்சமாக்கும் எனச் சிலர் கருதினர். ஒரே கல்லில் இரு மாங்காய்த்தத்துவம் அகதிகள் விடயத்தில் வெற்றியளிக்காது என பேரணியில் கலந்துகொண்ட தஞ்சம் நிராகரிக்கப்பட்ட அகதியான சுதர்சன் தெரிவித்தார்.

# ஒரே பள்ளியில் 58 மொழிகள்

ரொற்றனம், வைட் காட் லேனில் உள்ள Comprehensive பள்ளியில் தமிழ், சிங்களம் உட்பட 58 மொழிகளைப் பேசும் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இம்மாணவர்கள் 50 நாடுகளில் இருந்து வந்துள்ளனர். மாணவர்களைப் போன்று ஆசிரியர்களும் 33 நாடுகளில் இருந்து வந்துள்ளனர். இங்கு கற்கும் பெரும்பாலான மாணவர்களுக்கு ஆங்கிலம் இரண்டாவது மொழியாக உள்ளது. இன்னும் சிலர் பள்ளியில் சேரும் போது முற்றிலும் ஆங்கிலம் தெரியாதவர்களாகவே சேர்ந்து உள்ளனர். இம்மாணவர்கள் பெரும்பாலும் அகதிகளாக புலம் பெயர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பள்ளி உண்மையிலேயே சர்வதேச பல்மதப் பள்ளி, இது வைட் காட் லேன் குடும்பம் என்கிறார் இதன் தலைமை ஆசிரியர் டேவிட் டானியல்.

2000 ஆண்டில் இப்பாடசாலை நன்னடத்தையிலும் பெறுபேறுகளிலும் சராசரியைக் காட்டிலும் மிகவும் குறைவாகக் காணப்பட்டது. அத்னால் தேசியப் பட்டியலில் இப்பாடசாலை மிகவும் பலவீனமான பள்ளியாக முத்திரை குத்தப்பட்டது. ஆனால் தற்போது இப்பாடசாலை வேகமாக முன்னேறி வருகிறது.

## மற்றுமொரு சினிமா முயற்சி : இரு உள்ளங்கள்

புலம்பெயர்ந்த தமிழர்களின் மற்றுமொரு சினிமா முயற்சியாக இரு உள்ளங்கள் என்ற இரு மணி நேரத் திரைப்படம் தயாராகி வருகிறது. இளம் தலைமுறை காதல் ஜோடிகளுக்கிடையே மலரும் காதல், ஊடல், ஏற்படும் சந்தேகம், பிரிவுகள் என திரைக்கதை செல்கிறது. யூலை மாதமளவில் திரைக்கு வரவுள்ள இப்படத்தினை 25 வயது இளைஞரான ஷாருக் இயக்கி உள்ளார். திரைக்கதை, வசனம் ஆகியவற்றையும் அவரே செய்துள்ளார். விரைவில் வெளிவரவுள்ள 'துள்ளுற வயசு' படத்தில் ஷாருக் இணைந்து பணியாற்றி உள்ளார். சில காட்சிகளிலும் தோன்றி உள்ளார்.

40க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்றுள்ள இத்திரைப்படத்தில் ஷாருக் கதாநாயகனாகவும் ஜெயமாலினி (18) என்ற குஜராத்திப் பெண் கதாநாயகியாவும் நடித்துள்ளனர். பிரபல தென்னிந்தியப் பாடகர் ஸ்ரீராம் பாடல்களைப் பாடியுள்ளார். இசை கே கங்கை, பாடல்கள் தினேஷ். காந்த லக்ஷ்மி புரடக்ஷன், கெ ரமணன், எஸ் அன்ரனி ஆகியோர் படத்தைத் தயாரித்து உள்ளனர். £20,000 செலவில் இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டு உள்ளது.

## ஜேர்மனியில் மண் சஞ்சிகையின் 15வது ஆண்டு விழா

ஜேர்மனியில் இருந்து வெளிவரும் மண் சஞ்சிகையின் 15வது ஆண்டு விழா ஏப்ரல் இறுதியில் இடம்பெற்றது. விழாவில் உரையாற்றியவர்கள் சஞ்சிகை ஆசிரியர் சிவராஜாவின் முயற்சிகளைப் பாராட்டினர். இச்சஞ்சிகையின் உதவியுடன் தாயகத்துக்கு ஆண்டுதோறும் உதவி நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# இன நட்புறவு வலியுறுத்தப்பட்டது இலங்கை நண்பர்கள் வட்டத்தின் கலந்துரையாடல்

பிரண்ட்ஸ் ஒப் ஸ்ரீலங்கா அமைப்பின் சார்பில் டொக்டர் நிக்கலஸ்பிள்ளை ஏற்பாடு செய்த சுனாமிக்குப் பின் சமாதானமும் வளர்ச்சியும் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் பெப்ரவரி 23ல் பாராளுமன்ற பொதுக்கூடத்தில் இடம்பெற்றது. தமிழ், சிங்கள மக்கள் இதில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வெளியிட்டனர். இயுரஸ் பெரேராவின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்வுக்கு எட்மண்டன் பா உ ஆன்று லவ் தலைமை தாங்கினார். கவுன்சிலர்கள் போல், தயா இடைக்காடர், பிரியந்த கமகே, பேராசிரியர் கோபன் மகாதேவா, டொக்டர் டேவா சில்வா ஆகியோர் அங்கு உரையாற்றினர்.

வேறுபாடுகளை மறந்து ஐக்கிய இலங்கையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என பெரேரா தனது வரவேற்புரையில் குறிப்பிட்டார். மக்கள் நிவாரண உதவிகளில் தங்கி வாழ விரும்பவில்லை என தயா இடைக்காடர் தனது உரையில் குறிப்பிட்டார். சுனாமி தாக்கியது இலங்கை மக்களுக்கு இரட்டிப்புப் பாதிப்பு என்று கவுன்சிலர் போல் குறிப்பிட்டார். சர்வதேச நாடுகள் சொல்லியபடி உதவிகளை வழங்குவதில்லை என்று குறிப்பிட்ட அவர் உதவிகள் குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் குறித்த வழியில் செலவிடப்பட வேண்டும் என்று கூறினார். மேலும் அபிவிருத்தியும் சமாதானமும் இணைக்கப்படுவதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில் அபிவிருத்தி என்பது கட்டிடங்களைக் கட்டுவது மட்டுமல்ல சமூகத்தை கட்டி எழுப்புவதாக அமைய வேண்டுமெனத் தெரிவித்தார்.

நிதி தவறான வழியில் சென்றுவிடக் கூடாது என்பதை பிரியந்த கமகே சுட்டிக்காட்டினார். அவர் மேலும் குறிப்பிடுகையில் நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது மிகவும் அவசியம் எனக் குறிப்பிட்டார். மேலும் குறிப்பிடுகையில் பாதிக்கப்பட்ட மக்களின் உள்ளங்களையும் இதயங்களையும் வெல்வதுடன் உதவிகள் சுமூகமாக சென்றடைய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அங்கு ரிஆர்ஓ வுக்கு நிதி வழங்குவது பற்றி சிலர் வாக்குவாதப்பட்டனர். ஆனால் சிங்களப் பிரதிநிதிகள் தலையிட்டு அதனை முடிவுக்கு கொண்டு வந்தனர். மீள்கட்டுமானத்தை செய்யும் பொழுது ரீஆர்ஓ சம்பந்தப்பட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தினர். டொக்டர் மூர்த்தி சிங்கள மருத்துவக் குழுக்கள் தமிழ் பகுதிகளில் மேற்கொண்ட சேவையைப் பாராட்டினார். டொக்டர் நிக்கலஸ்பிள்ளையின் நன்றியுரையுடன் சந்திப்பு நிறைவு பெற்றது.

# சர்வதேச நூல்கள் தமிழ் பகுதிகளுக்கு விநியோகம்

ஐக்கிய இராச்சியத்தில் ஸ்கொட்லாந்தில் அபர்டீன்ஷையரில் தனது மத்திய அலுவலகத்தைக் கொண்டுள்ள புக்ஸ் அப்ரோட் (Books Abroad) நிறுவனம் 1982இல் LINK என்ற பெயரில் தொண்டுள்ளம் கொண்ட Keith Brunskill என்ற ஒரு கல்லூரி ஆசிரியரின் முயற்சியில், ஆபிரிக்கா கண்டத்தில் பின்தங்கிய கிராமங்களின் பள்ளி மாணவர்களுக்கான நூல்களை அபிவிருத்தி அடைந்த நாடுகளிலிருந்து பெற்று அனுப்பி வைக்கும் பணியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வமைப்பின் வளர்ச்சிப்பணியின் ஒரு மைல்கல்லாக 1991இல் அபர்டீன்ஷெயர் கவுன்சில் Rhynie பகுதியில் வழங்கிய கட்டட வசதி அமைந்தது. இக்காலகட்டத்தில் LINK என்ற பெயர் Books Abroad என்று மாற்றப்பட்டது.

இவ்வமைப்பு தற்போது ஆபிரிக்காவில் மாத்திரமன்றி, ஆசியா, கிழக்கு ஐரோப்பா, கரீபியன், அட்லாண்டிக் தீவுகள் என்று தனது வழங்கலை விரிவுபடுத்தியுள்ளது. இலங்கையிலும் காலி, கொழும்பு, மிகிந்தலை ஆகிய மூன்று பிரதேசங்களிலுள்ள ஆறு இடைநிலைப் பாடசாலைகளுக்கு சிறுவர்களுக்கேற்ற ஆங்கில நூல்களை ஆண்டுதோறும் அனுப்பி வைத்து வருகின்றது.

தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் இதுவரை சாவகச்சேரி அறவழிப்போராட்டக் குழுவின் நூலகத்துக்கு இடைக்கிடை தரைப் போக்குவரத்து நடைமுறையில் இருந்த காலகட்டங்களில் நூல்களை அனுப்பி வந்துள்ளது. அண்மையில் நூலகவியலாளர் என். செல்வராஜா Books Abroad அமைப்பினருடன் தொடர்பு கொண்டு தமிழ் பகுதிக்கான நூல் வழங்கலை விரிவுபடுத்தி உள்ளார். வன்னியின் யோகபுரம் மகாவித்தியாலயம், கிழக்கின், காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி, சாய்ந்தமருது மல்ருஸ் ஷம்ஸ் மகாவித்தியாலயம், வடக்கில் புங்குடுதீவு சர்வோதய மத்திய நூலகம் ஆகியவற்றுக்கு தலா 6 பெட்டிகள் வீதம் பாடசாலைச் சிறார்களுக்கு ஏற்ற ஆங்கில நூல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விஷேட வழங்கல் திட்டத்தின் கீழ் Books Abroad அமைப்பினரால் யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் பாவனைக்கென 3 பலட்களில் 143 பெட்டி நூல்கள் அனுப்பிவைக்கப்பட்டு அவை அங்கு சென்றடைந்துள்ளன.



TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT D 011 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, WOODGREEN, LONDON N22 6XJ

SIGN ★ A ★ RAMA
"WHERE THE WORLD GOES FOR SIGNS"
For all your Signage needs
Shop Fascias, Window Graphics, Pavement Boards and much more
0800 634 0096
220 Church Lane, Kingsbury
London NW9 8SN
www.signking.net
ISO 9001 REGISTERED FIRM
Reg. No. 8876



## ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் இருந்து சிவயோகம் வெளியேற்றப்பட்டது 3 ம் பக்கத் தொடர்ச்சி .....

எடுக்கப்படவில்லை. இது விடயங்களில் நீதிபதி தீரபளிக்கவில்லை. ஆனால் முக்கியமாக தான் கண்டு கொண்ட விடயங்களை அங்கு குறிப்பிட்டார்.


இரு பகுதியினரும் ஆலயத்தை திறந்து வழிபாட்டுக்கு உதவ முன்வந்ததை ஏற்றுக் கொண்ட நீதிபதி ஆறு வருடங்களாக ஆலயத்தை நிர்வகித்த ஜெயதேவனது நிர்வாகமே ஆலய நிர்வாத்தை தொடர அனுமதிக்க வேண்டும் என்று திர்ப்பளித்தார். சிவயோகத்தின் மூன்று வார இருப்பு தற்காலிகமா னது என்று குறிப்பிட்ட நீதிபதி குத்தகை ஒப்பந்தத்தில் ஆலயத்துக்கு வழக்கப்பட்டதான எந்தக் குறிப்பும் இல்லை என்று சுட்டிக்காட்டினார். ஆகவே ஆலயம் தொடர்பான எந்த அவணமும் பயனற்றது அர்த்தமற்றது எனறு நீதிபதி குறிப்பிட்டார்.

கட்டிட உரிமையாளர்களான் பவிற் கோல் கவனேஸ்க்கும் வாடகை இருப்பாளர்களான ஜெயதேவனது நிர்வாகத்துக்கும் இடையிலாக குத்தகை ஒப்பந்தமே நடைமுறையில் உள்ளது இருவரையும் கட்டுப்படுத்தும் இணைக்கும். சிவயோகம் சில ஆவணங்களில் கையெழுத்திட்ட போதும் சிவயோகத்துக்கு எவ்வித உரிமையும் கையளிக் கப்படவில்லை. உரிமையாளர்க ளும் வாடகை இருப்பாளர்களும் தொடர்ந்தும் ஒரே நிலைப்பாட்டில் இருப்பதால் ஜெயதேவனது நிர்வாகமே தொடர முடியும் என நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். இதன் அடிப்படை யில் சிவயோகத்தின் விண்ண ப்பம் நிராகரிக்கப்பட்டது. மேலும் இவ்வழக்குக்கு ஏற்பட்ட செலவுகளைச் செலுத்து மாறு சிவயோகத்துக்கு உத்தரவிடப்ப ட்டது. இத்தொகை £25,000 க்கும் அதிகமாகும் என பின்ட்மான்ட் பார்ட்னேஸ் சட்டப்பிரதிநிதிகளின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

### சிவயோகத்தின் நிலைப்பாடு :

இத்தீர்ப்பினை அடுத்து வில்சன் கவுன்ரி கோர்டில் சிவயோகம் தொடர இருந்த வழக்கை மீளப் பெறப்போவதாக சிவயோகத்தின் சட்டப் பிரதிநிதிகள் தெரிவித்து உள்ளனர்.

## ஈழபதீஸ்வரர் ஆலயம் : காலக் குறிப்பு



1990 க்களில் ஆர் ஜெயதேவன் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளராக இருந்தார். தமிழ் பொது அமைப்புகள், பள்ளிகள் என்பவற்றை ஜெயதேவன் போன்ற விடுதலைப் புலிகளின் ஆதரவு சக்திகள் கைப்பற்றின.

1999 இல் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களினால் ஈழபதீஸ்வரர் ஆலயம் பவிற் கோல்லில் ஆரம்பிக்கப்பட்டது.

2000 இல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் பிரித்தானியாவில் தடை செய்யப்பட்டனர்.

2001 இல் விடுதலைப் புலிகளின் தடையை நீக்க ஜெயதேவன் எடுத்த முயற்சிக்கு அன்ரன் பாலசிங்கம் முட்டுக்கட்டை போட்டதை அடுத்து அவர்களிடையே கசப்புணர்வு ஏற்பட்டது. ஆலயத்தின் நிர்வாகிகளிடையேயும் கசப்புணர்வு ஏற்பட்டது.

2002 முற்பகுதியில் நிர்வாகத் தலைவர் மு சிவராஜாவும் செயலாளர் ஆர் ஜெயதேவனும் முழு யுத்தம் ஒன்றுக்கு தயாராகினர். இருபக்கத்தில் இருந்தும் கண்டன அறிக்கைகள் பறந்தன. விடுதலைப் புலிகளின் ஆதரவு சக்திகளிடையே பிளவு ஏற்பட்டது வெளிப்படையானது.

2002 மே 10ல் ஈழபதிஸ்வரர் ஆலயத்தில் சிவராஜா 250க்கும் மேற்பட்ட ஆதரவாளர்களுடன் ஏற்பாடு செய்த பொதுக் கூட்டத்தை ஜெயதேவன் சாமர்த்தியமாகக் கலைத்தார். ஆலயம் அல்லோ கல்லோலப்பட்டது.

2002 மே சம்பவத்துக்குப் பின் மொட்டைக் கடிதங்கள் மொட்டைப் பிரசுரங்கள் இலண்டனில் பிரபல்யம் அடைந்தன.

2003 இறுதிப் பகுதியில் ஜெயதேவன் விடுதலை என்ற விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான செய்திப் பத்திரிகையை இந்திரகுமார் என்பவருடன் இணைந்து வெளியிட்டார். அதில் தனது எதிரிகள் மீது தனிநபர் தாக்குதலை நடத்தினார்.

2004 முற்பகுதியில் ஜெயதேவன் வெளியிட்ட விடுதலை பத்திரிகை ஆறாவது இதழுடன் நின்று விட்டது.

2004 பிற்பகுதியில் சிவராஜா மற்றுமொரு பொதுக் கூட்டத்தைக் கூட்டி ஆலயத்தை கைப்பற்ற முயற்சித்தார். ஆனால் பலனளிக்கவில்லை.



2004 டிசம்பர் 26ல் தெற்காசியாவை சுனாமி தாக்கியது.

2004 டிசம்பர் 27ல் ஏற்கனவே திட்டமிட்டு இருந்தபடி ஜெயதேவன் வி.புலிகளைச் சந்திக்க கொழும்பு பயனமாணார்.

2005 ஜனவரி 5ல் ஜெயதேவனது நண்பரும் ஆலய நிர்வாக உறுப்பினருமான ஏ கெ விவேகானந்தன் சுனாமி நிவாரண நிதியையும் எடுத்துக் கொண்டு கொழும்பு சென்றார்.


ஜனவரி 8ல் ஜெயதேவனும் விவேகானந்தனும் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளைச் சந்தித்தனர்.

ஜனவரி 8 சந்திப்புக்குப் பின் ஜெயதேவனும் விவேகானந்தனும் வன்னியில் தடுத்து வைக்கப்பட்டனர்.

மார்ச் 2ல் ஈழபதீஸ்வரர் ஆலயம் சிவயோகத்தால் பொறுப்பெற்கப்பட்டதாக சிவயோகம் செய்திக் குறிப்பை வெளியிட்டது. அங்குபணியில் இருந்தவர்கள் நீக்கப்பட்டு சிவயோகத்தின் பூசகர்கள் மற்றும் பணியாளர்கள் அமர்த்தப்பட்டனர்.

மார்ச் 5ல் விவேகானந்தன் வன்னியில் விடுவிக்கப்பட்டார்.

மார்ச் 7ல் ஜெயதேவனது மாமனாரின் இறுதிக் கிரியைகள் ஜெயதேவன் இல்லாமலேயே நடைபெற்றது. விடுவிக்கப்பட்ட விவெகானந்தனைச் சந்தித்து தனது மருமகனின் உடல்நிலையைக் கேட்டறிந்த அவர் இலண்டனில் மாரடைப்பால் காலமானார். அதே தினம் ஈழபதீஸ்வரர் ஆல்யத்தின் பெயர்ப் பலகை கீழிறக்கப்பட்டு சிவயோகத்தின் பெயர்ப் பலகை மேலேற்றப்பட்டது. கட்டிடச் சொந்தக்காரர்களான பவிற் கோல் கவனேஸ் சர்ச்சையைக் கிளப்ப சிவயோகம் பெயர்ப் பலகையும் கீழிறங்கியது.



மார்ச் 8ல் பிரித்தானிய உளவுத்துறை விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை எச்சரித்ததாக செய்திகள் வெளியாகியது. பிரித்தானிய உளவுத்துறையினர் தன்னை சந்திப்பது சகஜம் என்று குறிப்பிட்ட பாலசிங்கம், அவர்கள் தன்னை எச்சரித்ததை மறுததார்.

மார்ச் 9ல் ஜெயதேவன் இரண்டு மாத தடுப்புக் காவலின் பின் விடுவிக்கப்பட்டார்.

மார்ச் 12ல் ஜெயதேவன் இலண்டன் வந்தடைந்தார்.

மார்ச் 22 இரவு பூஜை முடிந்து அனைவரும் சென்ற பின் பவிற் கோல் உரிமையாளர்கள் கட்டிடத்தின் பூட்டுக்களை மாற்றினர்.

மார்ச் 23ல் மாற்றப்பட்ட பூட்டுக்களை உடைத்து சிவயோகம் குழு கட்டிடத்துக்குள் பிரவேசித்ததை அடுத்து பொலிசார் சிவயோகம் குழுவினரை வெளியேற்றி கட்டிடத்துக்கு பாதுகாப்பு வழங்கியது. ஆலயம் பூட்டப்பட்டதற்கு எதிராக சிவயோகம் கையெழுத்து வேட்டை நடத்தியது.

மார்ச் 24ல் கட்டிட உரிமையாளர்களுக்கு எதிராக சிவயோகம் இன்ஜஙசன் பெற்றது. இதன் மூலம் ஆலயத்தை தற்காலிகமாக நடத்த சிவயோகத் துக்கு அனுமதி வழங்கப்பட்டது.

மார்ச் 31ல் சிவயோகம் பவிற் கோல் உரிமையாளர்களுக்கு எதிராகத் தொடுத்த இன்ஜஙசன் விண்ணப்பம் உயர் நீதிமன்றத்திர் விசாரணைக்கு வந்தது. இரு தரப்பனரும் அவகாசம் கேட்டதால் வழக்கு ஏப்ரல் 7க்கு ஒத்திவைக்கப்பட்து.

ஏப்ரல் 7ல் சிவயோகத்தின் விண்ணப்பம் நிராகரிக்கபட்டு வழக்குக்கு ஏற்பட்ட செலவுத் தொகை £25,000 செலுத்தும்படி சிவயோகத்துக்கு உத்தரவிடப்பட்டது. அன்று மாலை ஆலயத்தின் திறப்புகள், நகைகள் மற்றும் பொருட்கள், வங்கி ஆவணங்கள் என்பன ஜெயதேவனிடம் கையளிக்கப்பட்டது.

## தமிழ் கடை மீது £4,000 நீதிமன்றம் அபராதம்

ரெய்னர்ஸ் லேனில் இயங்கும் ஆங்கிலோ ஏசியன் வர்த்தக நிறுவனம் மீது கரோ மஜிஸ்ரேட் நீதிமன்றம் அபராதம் விதித்து உள்ளது. பாதுகாப்பற்ற மின் விளக்குகளை விற்பனை செய்ததற்காக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும், வகைப்படுத்தப்படாத டிவிடிகளை விற்பனை செய்ததற்காக விடியோ பதிவுச் சட்டத்தின் கீழும், வர்த்தக குறியீட்டு சட்டத்தின் கீழும் ஜனவரி 4ல் குற்றங்கள் நிருபிக்கப்பட்டு, ஆங்கிலோ ஏசியன் கடையின் உரிமையாளர் தயாபரன் கணேசலிங்கத்துக்கு £4,000 அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. £1,642 சட்டச் செலவீனத்தையும் £2,400 அபராதமும் செலுத்தும்படி கணேசலிங்கம் பணிக்கப்பட்டு உள்ளார்.

பிறன்ற் மற்றும் கரோ வர்த்தக தரக் கட்டுப்பாட்டு அலுவலர்கள் கடந்த ஆண்டு பெப்ரவரியில் ஆங்கிலோ ஏசியன் கடை பொருட்களை பரிசோதிக்கச் சென்றனர். கடையின் பின்னுள்ள விடியோக்களை சோதணையிடச் சென்ற போது அவர்கள் பாவனைக்கு பாதுகாப்பற்ற மின் விளக்குகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். இம்மின் விளக்குகள் இரு செருகிகளை உடையதாக இருந்தது இந்நாட்டு சட்டப்படி மின் விளக்குகள் 3 செருகிகளைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் பார்வைக்கு வைக்கப்பட்ட சில டிவிடிக்கள் எவ்வயதினர்க்கு என வகைப்படுத்தப்படாமல் காணப்பட்டது.

ஆனால் மேற்குறிப்பிட்டவை எதுவும் பொதுமக்களுக்கு விற்கவோ அல்லது வாடகைக்கு வழுங்கவோ இல்லை என்று கணேசலிங்கம் குறிப்பிட்டார். மின் விளக்குகள் சாம்ள்பிகள் எனவும் சட்ட அனுமதி பெற்ற டிவிடிக்களை தெரிவதற்காகவே கடையில் டிவிடிக்கள் வைக்கப்பட்டிருந்ததாகவும் கணேசலிங்கம் தெரிவித்திருந்தார்.

பாதுகாப்பற்ற மின் பொருட்களை விற்பனை செய்ததற்காக கணேசலிங்கம் ஏற்கனவே £1,700 அபராதமும் செலீனமும் செலுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரெயினர்ஸ் லேனில் உள்ள மற்றுமொரு தமிழ் கடையான ரிஎஸ்கேயை £2,200 செலுத்தும் படி நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது. £1,200 அபராதமும் £1,000 சட்டச் செலவீனமும் ரிஎஸ்கே உரிமையாளர் சூரியகுமார் தர்மலிங்கத்துக்கு விதிக்கப்பட்டது. வர்த்தக விளக்கல் சட்டத்தின் கீழும் வர்த்தகக் குறியீட்டுச் சட்டத்தின் கீழும் குற்றங்கள் நிருபிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

## சர்வதேச அபிவிருத்தி


சர்வதேச அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல் நியூஹாம் ரவுன்ஹோலில் மார்ச் 7ல் இடம்பெற்றது. அரசின் சர்வதேச அபிவிருத்திச் செயலர் பா.உ ஹில்ரி பென் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அவருடன் அமைச்சர் ஸ்ரீவன் ரிம்சும் கலந்து கொண்டார். சில தமிழ் பிரதிநிதிகள் உட்பட பல்லினத்தவர்களும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். வறுமையை ஒழிப்பதில் பிரித்தானிய அரசாங்கம் முன்னோடியாக இருப்பதையும் பிரித்தானிய அரசின் தாராள மணப்பாண்மையையும் அமைச்சர் பென் விரித்துரைத்தார்.

அந்தந்த நாட்டு மக்களை ஊக்குவித்து; அவர்கள் மூலமே அவ்ரசுகளை செயற்திறனுடையதாக்க வேண்டும் என உதயன் பத்திரிகையின் கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார். வளரும் நாடுகளுக்கான உதவிகள் திட்டமிட்டு ஒழுங்காக கிடைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். ஈராக், இலங்கை, அப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் பற்றியதாகவே பெரும்பாலான கேள்விகள் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

# காலம் சென்ற போப்பும் காலமாகாத சிந்தனைகளும்

எழுதுபவர் : அரவிந்தன்

கால் நூற்றாண்டு காலமாக பாப்பரசராக இருந்து சர்வதேச அரங்கில் தாக்கத்தை ஏற்படுத்திய 2வது ஜோன் போல் இறுதியாக மரணத்தைத் தழுவிக் கொண்டார். உலகில் வாழும் ஒரு பில்லியனுக்கும் மோலான கத்தோலிக்கர்களினால் நேசிக்கப்பட்ட 2வது ஜோன் போல் ஆரம்பம் முதல் சர்வதேச அரங்கில் சர்ச்சைக்குரிய ஒரு நபராகவும் இருந்துள்ளார். தற்போது அவருடைய இடத்துக்கு 78 வயதான அடிப்படைவாதக் கருத்துக்களில் மிகவும் உறுதியான ஜேர்மன் நாட்டவரான பெனடிக்ற் XV1 தெரிவு செய்யப்பட்டு உள்ளார். கத்தோலிக்க சமயம் ஆபிரிக்காவில் வேகமாக வளர்ந்து வருவதால் ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் ஆச்பிசப் பிரான்ஸிஸ் அறின்செ என்பவரே பாப்பரசராக வரலாம் என எதிர்பார்க்கப்பட்டது. அடுத்து ஐம்பது வீதமான கத்தோலிக்கர்களின் இல்லமாக உள்ள லத்தீன் அமெரிக்காவின் சாஓ போலோ ஆச்பிசப் குளோடியோ கியூம்ஸ் 2வது இடத்தில் நின்றார். ஆனால் இவர் சமூகப் பிரச்சினைகள் பொருளா-தார நீதி பற்றி வெளிப்படையாக பேசுபவர் என்பதால் இவர் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்பட்டது.



பாப்பரசரின் தெரிவு என்பது வெறுமனே கத்தோலிக்க மதத் தலைவர் என்பது மட்டுமல்லாமல் சர்வதேச அரசியல் சம்பந்தப்பட்ட தெரிவாகவும் அமைகிறது. முதலாளித்துவ மேற்கு நாடுகள் தமது அரசியல் தளத்தை மதத்தினூடாக பலப்படுத்துவதற்கு பாப்பரசர்களை பயன்படுத்தும் உத்தி கொம்யூனிச வளர்ச்சியுடன் உருவானது. அந்த வகையில் தெரிவு செய்யப்பட்டவரே காலம்சென்ற 2வது ஜோன் போல். தள்ளாடும் வயதில் உள்ள இத்தாலியர் ஒருவரே வழமையாக பாப்பரசராக வந்து கொண்டிருக்கும் முறையை உடைத்து 58 வயதான கொம்யூனிச நாடான போலந் நாட்டவர் ஜோன் போல் (படம்) கடுமையான போட்டியின் பின் 1978ல் பாப்பரசராக அறிவிக்கப்பட்டார்.

2வது ஜோன் போலின் மக்களைக் கவர்ந்து இழுக்கும் திறன் அபாரமானது. மற்றைய பாப்பரசர்களைப் போலல்லாது இவர் 129 நாடுகளுக்குச் சென்று தனது கருத்துக்களைப் பரப்பியுள்ளார். ஏனைய மத வழிபாட்டுத் தலங்களுக்கும் சென்றுள்ளார். இவருடைய காலத்தில்



புதிய பாப்பரசர் பெனடிக்ற் XV1

கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை 250 மில்லியனாக உயர்ந்தது.

நவீனத்துவத்தை ஏற்றுக் கொள்ள மறுத்த 2வது ஜோன் போல் கருக்கலைப்பு, குடும்பக் கட்டுப்பாடு, பெண்களின் மத சமத்துவம் என்பவற்றை கடுமையாக எதிர்த்தார். அவருடைய தீவிர கொம்யூனிச எதிர்ப்பு கிழக்கு ஐரோப்பிய கொம்யூனிச நாடுகளை ஆட்டம் காண வைத்தது. போலந்தில் கொம்யூனிசத்தின் வீழ்ச்சியில் 2வது ஜோன் போலின் பங்கு குறிப்பிடத்தக்கது. கொம்யூனிச ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்ய மபியா தலைவர்களுக்கூடாக 32 மில்லியன் அமெரிக்க டொலர்களை போலந் கிளர்ச்சியாளர்களுக்கு வழங்கினார். 2வது ஜோன் போலின் முயற்சியால் போலந்தில் கொம்யூனிசம் வீழ்ச்சி அடைந்தது. ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் அதே நிலை ஏற்பட்டது. கொம்யூனிசத்தின் வீழ்ச்சியை அடுத்து ஊழல், மோசடிகள் மலிந்து பாலியல் முறைகேடுகள் தலைவிரித்தாடியது. கருக்கலைப்பு அதிகரித்தது. இத்தன்மைகள் கிழக்கு ஐரோப்பா முழுவதும் பரந்தது. அதனை தன் வாழ்நாளிலேயே 2வது ஜோன் போல் கண்டுகொண்டார்.

ஈராக் யுத்தத்திற்கு எதிராக குரல் எழுப்பியதும், கொம்யூனிச நாடான கியூபாவுக்குச் சென்று பிடல் கஸ்ரோவைச் சந்தித்ததும் 2வது ஜோன் போலின் குறிப்பிடத்தக்க அம்சங்கள்.

2வது ஜோன் போல் காலம் சென்ற போதும் அவருடைய மத அடிப்படைவாதக் கருத்துக்களைக் காப்பாற்றக் கூடிய இன்னுமொரு அடிப்படைவாதியை வத்திக்கான் தெரிவு செய்துள்ளது. கருத்தடை சாதனங்களை பயன்படுத்த வேண்டாம் என குடும்பக்கட்டுப்பாட்டை எதிர்த்தும் வரும் வத்திகான் ஆபிரிக்காவில் பல மில்லியன் எய்ட்ஸ் நோயாளிகள் உருவாகக் காரணமாக இருந்துவருகிறார். நவீனத்துவத்தை ஏற்க விரும்பாத இம்மதத் தலைவர்கள் உலகின் மூலைமுடுக்குகளில் வாழும் பாமர மக்களின் வாழ்வை தலைகீழாக்கும் பழமைவாதத்தை மதத்தின் பெயரால் திணிக்கின்றனர். வாழ்வின் இறுதி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கையில் பதவிக்கு வரும் இவர்கள் தங்களுக்கு முன் பலரை பரலோகத்தில் உள்ள பரம பிதாவிடம் அனுப்பி விட்டே தாங்கள் செல்கின்றனர்.

## தமிழக சஞ்சிகையின் குற்றச்சாட்டு

தமிழகத்தில் இருந்து வெளி வரும் இடதுசாரி சஞ்சிகையான புதிய ஜனநாயகம் தனது மே மாத இதழில் போப் ஜோன்போல் பற்றி கடுமையான குற்றம்சாட்டை வைத்துள்ளது.

பனிப்போர் நடவடிக்கைகளில் மட்டுமல்ல, எதிர்புரட்சி நடவடிக்கைகளில், குறிப்பாக கத்தோலிக்க பழமை வாதத்துக்கு எதிராகத் தோன்றிய விடுதலை இறையியல் என்ற பெயரில் நடந்த தென் அமெரிக்க எழுச்சியை ஒடுக்குவதில் போப் இரண்டாம் ஜோன் போலும் அமெரிக்க அதிபர் ரெனால்ட் ரீகனும் கூட்டணி அமைத்துக் கொண்டு செயற்பட்டனர் அச்சஞ்சிகை குற்றம்சாட்டி உள்ளது. மேலும் கத்தோலிக்கப் பாதிரியார்களின் பாலியல் குற்றங்களை விசாரிக்க மறுத்து, போப் ஜோன் போல் மூடிமறைத்தார். குறிப்பாக சிறுவர்களிடம் ஓரினச்சேர்க்கை - பாலியல் வன்முறைக் குற்றம் புரிந்த பாதிரியார்களைப் பாதுகாத்தார் என அக்குற்றச்சாட்டு தொடர்கிறது.

புதிய பாப்பரசர் பெனடிக்ற் 16 பற்றிக் குறிப்பிட்டுள்ள அச்சஞ்சிகை கம்யூனிச எதிர்ப்பில் ஊறியவர் மட்டுமல்ல கிட்லரின் நாஜி இளைஞர் அமைப்பில் பணியாற்றிய பெருமையும் அவருக்கு உண்டெனக் குறிப்பிட்டு உள்ளது.

## கவுன்சில் நிதி சேகரிப்பின் போது வெளியேற்றம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக நிதிசேகரிக்கும் அமெரிக்க முறையிலான ஒக்சன் நிகழ்வு வோல்தம்ஸ்ரோவில் இடம்பெற்றது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வெவ்வேறு அமைப்புகள் இதில் கலந்து கொண்டன. தமிழ் சமூகம் சார்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டது. £20 நுழைவுச் சீட்டைச் செலுத்தி இதில் கலந்து கொண்ட தமிழர்கள் ஒக்சன் முறையிலான நிதி சேகரிப்பில் கலந்து கொள்வில்லை எனவும் ஆனால் சேகரிக்கப்பட்ட நிதியில் பங்கெடுப்பதில் ஆர்வம் காட்டியதாகவும் அதில் கலந்து கொண்ட ஒருவர் தெரிவித்தார். இவ்வாறான நிதி சேகரிப்பு முறைகள் தமிழர்களுக்கு புதியது எனத் தெரிவித்த அவர் ஏற்பாட்டாளர்கள் இது பற்றி முறையாக விளக்கத்தை கொடுத்திருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். ஒக்சன் நிதி சேகரிப்பு ஆரம்பித்ததும் கலந்து கொண்ட தமிழர்கள் நிகழ்வில் இருந்து வெளியேறியதாக கூறப்படுகிறது.

## பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்




புவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் என்ற புதுவை இரத்தினதுரையின் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா மார்ச் 28ல் ரூற்றிங் சிவயோகம் மண்டபத்தில் இடம்பெற்றது. வைத்தியகலாநிதி ஆனந்தி கருணைலிங்கம் மங்கள விளக்கேற்றி வைக்க ஆரம்பமான விழாவில் ஆ யோ பற்றிமாகரன் சிறப்புரை ஆற்றினார். ஆனந்தி சூரியப்பிரகாசம், ஏ சி தாசிஸியஸ், கருணானந்தராஜா ஆகியோர் மதிப்பீட்டுரை வழங்கினர்.

கடந்த 12 ஆண்டுகளாக கவிஞர் புதுவை படைத்த 155 கவிதைகள் பேராசிரியர் க சிவத்தம்பியின் 28 பக்க முன்னுரையுடனும் ஓவியர் ரொட்ஸ்கி மருது வரைந்த கவிஞரின் கோட்டு ஓவியத்துடனும் இத்தொகுப்பு வெளிவந்து உள்ளது. "தமிழ் மொழி வெறிக் கவிதைகள் இத்தொகுப்பில் இல்லை. ஆண்ட பரம்பரைக் கதைகளும் இத்தொகுப்பில் இல்லை" எனக் குறிப்பிடும் பத்திரிகையாளர் சேயோன், "தமிழீழப் போரை வெறுமனே மொழிப் போராகக் குறக்கிவிடாது, தேசிய விடுதலைப் போராக உலகுக்குக் காட்டுவதற்கு புதுவையின் கவிதைகள் பெரும் உதவி புரிகின்றது" என்று குறிப்பிட்டார்.

Financial Services
- Personal Accounts
- Sole Proprietorships, Partnership Businesses & Solicitors Accounts
- Company Accounts
- Project Reports & Management Information
- Budgets & Corporate Plans

**Esther Abayasekara – ACMA**
21 years experience in several industries
Tel: - 020 8952 8606
Mobile: – 07837 956 182
Fax: – 020 8952 9606
Email: esther_abay@yahoo.co.uk
Grosvenor House, 3rd Floor
1 High Street, Edgware, Middlesex, HA8 7TA

**Manu Travels**
QATAR AIRWAYS
VALID FROM 10JAN-20MAR
£290.+taxes
BOMBAY
VALID FROM 07JAN-20MAR
£335.+taxes
TRIVANDRUM, KOCHI
HYDERABAD
MUSCAT / BAHRAIN / ABU DHABI / KUWAIT
£205.+taxes
KUALA LUMPUR / MANILA
£360.+taxes
SHANGHAI / BEIJING
£330.+taxes
SriLankan £360.+taxes
CALICUT / TRICHI / HYDERABAD / TRIVANDRUM
KOCHI / MADRAS / BOMBAY / DELHI
Manu Travels 306-308 High Street North, Manor Park, London E12 6SA
Tel: 020 8471 1919 Fax: 020 8471 4333

**Khosla & Co.**
Chartered Certified Accountants
For your Accounting and Taxation needs
Call
Tel: 020 8548 8899
Fax: 020 8548 8846
412 Katherine Road
London E7 8NP

**INDIAN FUNERAL DIRECTORS**
We now operate from our new, modern & fully equipped premises on Mollison Way, Edgware.
Our comprehensive service includes:-
- Large prayer room (Mandir) for performing the last funeral rites or for paying the last respects
- All religious rites, ceremonies and wishes respected and administered
- Modern, fully equipped washing & dressing facilities
- Funeral ceremony items provided

Tel: 020 8952 5252
SANJAY or BHARAT SHAH (formerly of Kenton Road)
44 South Parade, Mollison Way, Edgware,
Middlesex HA8 5QL.
MOBILE: 0777 030 66 44

**RehncyShaheen**
Chartered Accountants
www.rehncyshaheen.com
Our Services include
* Auditing
* Cashflow & Management Accounting
* Client Accounting Services
* Business Start-up
* Back Duty Investigation (Tax & VAT)
* Taxation
For Information:
Mr. Rehncy MA FCA FCCA CTA ABT MCMI ACIArb
Middx. Offices: 020 8864 9065 020 8813 8324
1276/1278 Greenford Road, Greenford, Middx UB6 0HH.
Mr. A M Shaheen MA LLB ACEA MCMI
South London Office 020 7223 8221
189 Lavender Hill, London SW11 5TB

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

MASSIVE SALE




MASSIVE SALE

# ELITE

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

(collect same day)

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway,**
**West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

# வரலாற்று நூல்கள் : தமிழ் மக்களிடையே வரலாற்றை ஆவணப்படுத்தும் வெளியீடுகள் வெளிக் கொண்டுவரப்பட வேண்டும். அவை ஊக்குவிக்கப்பட வேண்டும்

ஒரு இனத்தின் தனித்துவத்தைத் தீர்மானிப்பதில் அவ்வினத்தின் வரலாறு மிகுந்த செல்வாக்கைச் செலுத்துகிறது. தனது வரலாற்றை சரியாக தெரிந்து கொள்ளாத இனம் நீண்டகாலத்துக்கு தனது தனித்துவத்தைப் பேண முடியாது. இது வரலாற்று நியதி. கடந்த கால்நூற்றாண்டு காலமாக தனது விடுதலைக்காகப் போராடி வரும் தமிழ் இனம் தனது வரலாற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியம். குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் நாம் எமது வரலாற்றைப் புரிந்து கொண்டு அதனை அடுத்த தலைமுறையினருக்கு சரியான முறையில் கையளிக்காது விட்டால் அவர்களுக்கு எமது வரலாற்றுப் பாரம்பரியம் தெரியாமல் போய்விடும். தங்களை எங்கு அடையாளப்படுத்துவது என்ற குழப்பம் ஏற்படும். விளைவு எமது இனத் தனித்துவத்தை அவர்களால் தக்க வைக்க முடியாது போய்விடும்.

அந்தந்தத் துறைகள் பற்றிய ஆழமான புரிதலுடன் பொறுப்புணர்வுடன் புலம்பெயர்ந்த மண்ணில் இருந்தே தரமான வரலாற்று நூல்கள், பதிவு கள் வெளிவந்துள்ளன. அவ்வரிசையில் யூன் 2001ல் வெளிவந்த யாழ்ப்பாணப் பொது நூலகம் : ஒரு வரலாற்றுத் தொகுப்பு, யூன் 2003ல் வெளிவந்த RISING FROM THE ASHES : Tragic Episode of the Jaffna Library என்ற நூலகவியலாளர் என் செல்வராஜாவின் நூல்கள் யாழ் நூலகத்தின் வரலாற்றை ஆவணப்படுத்தி உள்ளது. யூன் 2004ல் வெளியிடப்பட்ட சார்ள்ஸ் சோமசுந்தரம் அவர் களின் Glimpses of the Eelam Tamil Heritage என்ற நூல் யூலை 2004ல் வெளியிடப்பட்டது. கலாநிதி எஸ் தியாகராஜாவின் வரலாற்றுத் தொகுப்பு இப்போது வெளிவர உள்ளது. மேலும் கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்களின் தமிழ் தேசியவாதம் என்ற நூல் இலங்கைத் தமிழர்கள் பற்றிய சில புதிய தகவல்களை வெளிக்கொண்டு வந்து உள்ளது. இந்நூல்கள் அவை தாங்கியுள்ள வரலாறுகளை அடுத்தடுத்த நூற்றாண்டு களுக்கும் காவிச்செல்லும்.

தமிழ் மக்கள் மத்தியில் இலக்கிய நூல்கள் குறிப்பாக கவிதைத் தொகுப்புகள், சிறு கதைத் தொகுப்புகள் தாராளமாகவே வெளிவந்துள்ளது. ஆனால் வரலாற்று நூல்கள் மிகவும் அருமையாகவே வெளிவருகின்றது. இக்குறை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். தரமான ஆதாரபூர்வமான வரலாற்று நூல்கள் வெளிக் கொணரப்பட வேண்டும். அது ஊக்குவிக்கப்பட வேண்டும்.


MARKANDAN & SHARMA
Solicitors and Administratord for oaths
Nathan & Chelva
Solicitors
Mr. M. Markandan L.L.B (Hons)
available for consultation on:
079 5638 6576
Bow Business Centre
153-159 Bow Road
London E3 2SE
Tel: 020 8981 5330
Fax: 020 8981 5350
or
169 Tooting High Street
Tooting
London SW17 0SY
Tel: 020 8672 1800
Fax: 020 8672 0105

FUNTASIA
FANCY DRESS & PARTY SHOP
SPECIALIST IN PARTY GOODS
ESTABLISHED SINCE 1984
BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
HELIUM HIRE PACKAGE
PARTY WARE NOVELTIES
BRIDAL FAVOURS SOFT TOYS
FANCY DRESS FOR HIRE & SALE
WINGS, MASKS, MAKE-UP
MAGIC TRICKS & JOKES
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS
AND BOOK MATCHES
CAKES MADE TO ORDER
RUBBER STAMPS SERVICES
FIREWORKS
INT'L MONEY TRANSFER
ADULT PRODUCTS FOR
HEN NIGHT & STAG NIGHT
229 KENTON ROAD,
KENTON, HARROW,
MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333
email: funtasia@shivex.co.uk
www.funtasiaworld.com

British Gutter Systems
Tel: 020 8573 6333/ Fax: 020 8573 2390
Maintenance Free Leak Proof Gutters
Mobile Factory
Our installation team come to your home with our 'Mobile factory' and produce 'Made to Measure' guttering on site. Lengths of upto 70ft are not uncommon
Seamles (Jointless) Gutters | Downpipe | Facia, Soffis
Needs virtually no maintenance. Protects your roof's structure. Never Reapaint or Repair. Saves you time, money and worry. Adds value to your home
Visit Our Show room
Unit 2, Hayes Metro Centre, Springfield Road, hayes, Middlesex UB4 0LE

New Century Glazing Ltd.
...the ULTIMATE NEWBUILD or Complete refurbishment -
Eurocell's maintainence free PVCu WINDOWS and DOORS, FULLY WELDED and INTERNALLY BEADED...
Member of FENSA
Free Estimates
Tel: 020 8848 0189
Unit 5, Halls Business Centre, Pump Lane, Hayes, Middx.

CITY DEVELOPMENT & CONSTRUCTION
The Complete Building Service
New Build
Extensions
Renovations
Conversions
Plumbing
Electrical
Central Heating
Bricklaying
Plastering
Carpentry
Loft Conversions
Fax: 020 8472 8493
020 8470 2740
352-354 Katherine Road London E7 8NW
07768 936 114 or 07831 592 553

Champers Wines CASH & CARRY
Suppliers of Wines, Beers and Spirits
Wide range of product available at very Competitive Prices
For further details contact
Sales on Tel: 020 8961 2889
Fax: 020 8963 0989
Unit 11, Cumberland Avenue, Park Royal, London NW10 7RT
We Accept All Major Credit Cards

EVERGLADE WINDOWS

www.everglade.co.uk
Double glazing styled with excellence
Quality
UPVc & Aluminium Windows
Patio Doors
Conservatories
Doors
10 year Guarantee
Visit Our Showroom
to see the extensive range of products
020 8998 8775

Ellis &Co. Residential Sale & Letting
வீடு வாடகைக்கோ, விற்கவோ, வாங்கவோ மேலும் Mortgage தேவைக்கோ நீங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
Kumar on
(T) 020 8204 3300
(F) 020 8206 1102
(M) 07984 184064
email: kenton@ellisandco.co.uk
272, Streatfield Road, Kenton, Harrow

Style & Quality
Marble & Granite
Marble
Granites
Limestones
Ceramics
Custom Design & Installation
Kitchen Worktops
Vanity Tables
Wall Finish
Free Consultation & Quotes
52 Standard Road, Park Royal, London NW10 6EU
Tel: 020 8965 1441
www.quickgoldltd.co.uk
QG QuickGold Ltd

Smart Signs & Blinds LTD.
SIGNS OF ALL KINDS
AWNINGS & CANOPIES
Suitable for both Home & Commercial Premises
0208 900 2873
07940 541 640

YAASHIK Motors
* MOT - Diesel & Petrol
* Performance Tuning & Parts
* Mail Order
* Seat, Audi Specialist
* Servicing, Clutches, etc.
Tel: 020 8998 8900
Unit 5A, 255 Water Road, Wembley, Middx. HA0 1JW

SIA Gold House
LKS
346 High Street North
Manor Park London E12 6PH
020 8470 8282

Shipping To Sri Lanka & Worldwide
We started shipping - Others followed
We have shipped 165 cars to Colombo in one vessel
For a friendly service Contact
Percy Jayawardena
Perma International
62D Cricklewood Broadway
London NW2 3EP
Tel: 020 8452 6750 Fax: 020 8452 3882
e-mail permainternational@yahoo.co.uk

RASIAH & CO.
Solicitors
* Conveyancing (Residential & Commercial)
* Immigration
* Matrimonial
* Landlord & Tenants
* Police Station Representation
* Legal Aid work undertaken
020 8543 4040
020 8543 2400
180A Merton High Street, London SW19 1AY

MANGALA MOTORS
High Quality at Sensible Prices
* Car/Van Sales
* Full and Iterim service
* MOT & Mechanical Repairs
* Professional Technician
* Fully Guranteed Job
Call On
020 8203 6655
Unit 1, 3 & 4, The Bridges
Aerodrome Road, London NW4 4SS

UXBRIDGE CARPETS & FURNITURE LTD
2 Double, 1 Single, 3 Wandlerbeds, 4 Chairs, 1 Dining table, 1 Cofee table, 3 Piece Sofa
All just for £999 (including delivery)
(T) 020 8561 8633
(M) 07889 936406
1032 & 1034 Uxbridge Road, Hayes, Middx. UB4 0RJ

ALEC WADLOW & CO
THE DOOR, WINDOW & CONSERVATORY SPECIALIST
Local Family Business Supplying and Installing Quality Double Glazing & Conservatories
"We care about your home"
19 Village Way East, Harrow, Middx. HA2 7LX
Tel: 020 8866 3366

DIGITAL WINDOWS (U.K.) LTD
Maintainence Free REHAU PVCU WINDOWS
* Fully Welded & Internally Beaded Doors
* Aluminium Windows, Doors & Conservatories
* Free Estimates
* 10 years Insurance Back Gaurantee
* We are a Member of Fensa
Call us on
(T) 020 8459 2666/7403
2B Church Hill Rd.
Willesden NW2 5EA

லண்டனில் அதிகப்படியான பிரதிகளைப் பதிப்பிக்கும் ஒரே தமிழ்ப் பத்திரிகை
உதயன்

# ஈரோஸின் தாகமும் தமிழீழத் தாயகம்



தோழர் சங்கர் ராஜி
1949 - 2005

விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை இராணுவரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பலப்படுத்த வேண்டும் என்றும் அவர்களே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் எனவும் ஈரோஸ் அமைப்பின் தலைவர்களில் ஒருவரான குகன் சங்கர் ராஜியின் நினைவு நிகழ்வில் தெரிவித்தார். ஈரோஸ் அமைப்பின் மறைந்த தலைவர் சங்கர் ராஜியின் இந்நிகழ்வு லண்டன் ஸ்கூல் ஒப் எக்கொனமிக்ஸில் நடைபெற்றது. ஈரோஸ் இலண்டன் கிளை ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் பேராசிரியர் பிரவு மோகானந் தேசாய் ஜனநாயகமும் பன்மைத்துவமும் என்பது பற்றி நினைவுப் பேருரை நிகழ்த்தினார். நூறு பேர் வரை கலந்து கொண்ட இந்நிகழ்வை ஈரோஸ் ரவி தொகுத்து வழங்கினார். நீண்ட காலத்துக்குப் பின் இலண்டனில் உள்ள ஈரோஸ் அமைப்புக்கு புத்துயிர் ஊட்டும் நிகழ்வாக இது அமைந்தது.

நினைவுப் பேருரையாற்றிய தேசாய் இலங்கைத் தமிழர்கள் அருகில் உள்ள இந்தியாவின் உதவியை நாடாமல் வல்லரசான அமெரிக்காவின் உதவியை நாடுவது பலனளிக்கும் எனத் தெரிவித்தார். பிராந்திய வல்லரசை தமிழர்கள் நம்பக்கூடாது என அவர் குறிப்பிட்டார். இதற்கு சபையோர்பகுதியில் இருந்து மறுப்புத் தெரிவித்த சேனன் வல்லரசுகளின் தயவை நாடிச் செல்வது பிரச்சினைகளுக்குத் தீர்வை ஏற்படுத்தாது என்றர். மேலும் தேசியவாதம் பாசிசத்திலேயே முடிவடையும் எனவும் சேனன் பிறிதொரு சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

உங்களிடம் செய்தி உள்ளதா?
உங்களுக்கு ஏற்பட்ட வித்தியாசமான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறீர்களா?
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
020 8905 7775
உதயன்
குறிப்பு :
உங்கள் தொலைபேசி அழைப்புகள் அனைத்தும் பாதுகாப்பு காரணங்களுக்காக பதிவு செய்யப்படும்.
ஒத்துழைப்புக்கு நன்றி.

# 'சுயாட்சி மட்டும் பிரச்சினைகளைத் தீர்க்காது'

## மோகானந் தேசாய்

சங்கர் ராஜியின் நினைவாக மோகானந் தேசாய் ஆற்றிய நினைவுப் பேருரையில் குறிப்பிட்ட விடயங்கள் உதயன் வாசகர்களுக்கு தொகுத்து வழங்கப்படுகிறது.

காலனி ஆதிக்க காலத்தில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் ஆகிய நாடுகள் ஒன்றாகவே இருந்தன. இவற்றின் வரலாறு ஒரே வரலாறு. காலனித்துவ வரலாறு. ஆனால் காலனித்துவத்துக்கு முன்னர் தனித்தனியான பன்மைத்துவ வரலாறு காணப்பட்டது. தெற்காசிய நாடுகளில் உள்ள முக்கிய பிரச்சினை அந்நாடுகள் தத்தம் நாடுகளில் உள்ள தேசியங்களின் இருப்பை மறுப்பது. இந்தியாவில் பல தேசியங்கள் உள்ளன. ஆனால் நேரு மதசார்பற்ற தேசியம் என அறிவித்தார். அதற்குப் பின் பிஜேபி இந்துத் தேசியம் என அறிவித்தது. ஆனால் இவர்கள் இந்தியா பல தேசியங்களைக் கொண்டிருப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. இதே தன்மை இலங்கையிலும் ஏனைய தெற்காசிய நாடுகளிலும் காணப்படுகிறது. ஆனால் பிரித்தானியாவை எடுத்துக் கொண்டால் பல தேசியங்கள் இருப்பதை அந்நாடு ஏற்றுக் கொண்டுள்ளது.

ஜனநாயகம் என்பது பெரும்பான்மையின் ஆட்சி. ஜின்னாவுடைய பயம் அதுவாகவே இருந்தது. இந்துக்கள் பெரும்பான்மையான இந்தியாவில் முஸ்லீம்கள் புறக்கணிக்கப்படுவார்கள் என்ற பயமே ஜின்னா பாகிஸ்தான் பிரிவினையைக் கோரியதற்குக் காரணம்.

ஒரு தேசமே பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருப்பதால் வெஸ்ற்மினிஸ்ரர் முறைப் பாராளுமன்றத்தில் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இந்தியாவை எடுத்துக் கொண்டால் கடந்த 16 ஆண்டுகள் உறுதியற்ற அரசாங்கமே காணப்பட்டது. அதில் பல தேசங்களின் ஈடுபாடு காணப்பட்டது. நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சியடைந்தது. மறுபக்கத்தில் பாகிஸ்தானில் ஜனநாயகமும் பல்தேசியமும் தோல்வியடைந்தே இருந்தது. மதத்தை மட்டும் தேசத்தின் அடையாளமாகக் கொள்ள முடியாது. பங்களாதேசிகள் மற்றையது முஸ்லீம்கள் என இரட்டை அடையாளம் பங்களாதேசில் வெளிப்பட்டது.

இலங்கையை இந்தியாவாகவோ பாகிஸ்தானாகவோ கொள்ள முடியாது. அது வட அயர்லாந்தைப் போன்றது. இலங்கை பல தேசியங்களைக் கொண்ட நாடு. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள், மதங்கள் அங்கு காணப்படுகிறது. தேசியங்கள் பூகோளரீதியாகப் பிரிக்கப்பட்டும் உள்ளது. தேசம் பூகோளரீதியாகப் பிரிக்கப்பட்டே உருவாக்கப்படுகிறது.

புதிய தேசத்தை உருவாக்குவதால் மட்டும் அங்குள்ள பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. தேசத்துக்கான சுயாட்சி ஒரு தேசத்தை மற்றைய தேசங்களுக்கு மேலான தேசமாக உருவாவதற்கும் வழிவகுக்கும். சுதந்திரமடைவது எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையாது.

வட அயர்லாந்து போல் இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்ட தேசியவாதம் உருவாகியுள்ளது. இலங்கையில் உள்ள தமிழர்கள் ஜின்னா பயந்ததை அனுபவிக்கின்றனர். இலங்கை போன்ற தெற்காசிய நாடுகள் மிகவும் வளமானவை, மிகவும் பிளவுபட்டுள்ளன. அதனால் தெற்காசியா மிகவும் வன்முறை நிறைந்த பகுதியாக உள்ளது. பல்தேசியங்கள் இருப்பதையும் ஜனநாயகத்தையும் அரசுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



தொ.அ செயலர் கிளயா



# சோசலிச மாற்றம் அவசியம் சுனாமி கலந்துரையாடல்

இலங்கையில் இருந்து வந்திருந்த ஐக்கிய சோசலிசக் கட்சி உறுப்பினர் உப்பாலுடனான சந்திப்பு இலண்டனில் இடம்பெற்றது. வோன்ஸ்வேத் ஏசியன் கொம்மியூனிற்றி சென்ரர், ஈஸ்ற்ஹாமில் உள்ள இலண்டன் தமிழ்ச் சங்கம், வெஸ்ற் லண்டன் ரேட் யூனியன் கிளப் ஆகிய இடங்களில் இச்சந்திப்பு இடம்பெற்றது. ஈஸ்ற்ஹாமில் இடம்பெற்ற சந்திப்பில் தமது கட்சித் தோழர்கள் எவ்வாறு உயிர்காப்பு மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர் என்பதை உப்பால் விளக்கினார். இப்பணிகள் ஒரு சோசலிச மாற்றத்தை ஏற்படுத்தாது என்று குறிப்பிட்ட உப்பால் முதலாளித்துவக் கட்டமைப்பு சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கியதை விளக்கினார். நிவாரணங்கள் மக்களைச் சென்றடையாமல் சிலரின் கைகளில் மோசடி செய்யப்படுவதை அவர் விபரித்தார். ஆளும் சந்திரிகா குமாரதுங்காவின் கட்சியே பெரும் மோசடிகளில் ஈடுபட்டதாக அவர் தெரிவித்தார். மேலும் ஜேவிபியினர் சுனாமியைப் பயன்படுத்தி கட்சி அரசியல் செய்ய முற்படுவதாகவும் உப்பால் குற்றம் சாட்டினார். அதிருப்தியுற்ற மக்கள் போராடத் தயாராகி விட்டதையும் அதன் வெளிப்பாடுகளையும் உப்பால் அங்கு விளக்கினார்.

சகோதர அமைப்பான தொழிலாளர் அகிலத்தின் செயலர் கிளயர் பேசும்போது முதலாளித்துவ நாடுகள் சுனாமியை தங்களது நலன்களுக்கு பயன்படுத்துவதாகக் குற்றம் சாட்டினார். பல மில்லியன் இந்தியர்கள் ஒரு டொலருக்கும் குறைவான வருமானத்துடன் வறுமையில் வாடும் போது இந்தியா தனக்கு உதவி தேவையில்லை என்று கூறி இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பி உதவி செய்ய வந்ததைச் சுட்டிக்காட்டினார். அமெரிக்கா ஈராக்கில் ஒன்றரை நாளுக்கு செலவிடும் பணத்தையே அமெரிக்கா சுனாமிக்கு ஒதுக்கி உள்ளதாக கிளயர் சுட்டிக்காட்டினார். மேலும் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும் என்ற தமது கட்சியின் நிலைப்பாட்டையும் கிளயர் வலியுறுத்தினார். சில நாடுகளில் அனர்த்தத்துக்குப் பின்னான கடன்கள் அதிகரிப்பதை அவர் உதாரணங்களுடன் சுட்டிக்காட்டினார்.

இந்தோனேசியாவில் சுகாட்டோ போன்ற சர்வாதிகாரிகள் பட்ட கடனை உழைக்கும் அந்நாட்டு மக்கள் அடைக்க வேண்டிய தேவையில்லை என பார்வையாளர்களில் ஒருவர் சுட்டிக்காட்டினார். கட்சி பேதங்களுக்கு அப்பால் உதவிகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என கவுன்சிலர் போல் சுட்டிக்காட்டினார். ஐக்கிய சோசலிசக் கட்சியின் தமிழ் பிரதிநிதி சேனன் பேசும் போது விடுதலைப் புலிகளும் ஜேவிபியும் மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள் நேரடியாக மக்களைச் சென்றடையாமல் தங்களுக்கு ஊடாகவே அவை வழங்கப்பட வேண்டும் என்று கோருவதாகக் குறிப்பிட்டார். அவர் மேலும் முதலாளித்துவக் கட்டமைப்புகள் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களை மேலும் கீழ்நிலைக்கு தள்ளுவதை சுட்டிக்காட்டினார்.



# பொங்கும் பொழுது 05

மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் ஆண்டு தோறும் நடாத்தப்படும் பொங்கும் பொழுது நிகழ்ச்சி எதிர்வரும் மே மாதம் 29ம் திகதி Woodford Green Essex இல் அமைந்துள்ள Woodford Bridge High School இல் இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் ஸ்ரீமதி சிவசக்தி சிவநேசன் மற்றும் சோமசுந்தர தேசிகர் ஆகியோரின் மாணவர்களின் இசைக்கச்சேரியும் மாலினி தனபாலசிங்கத்தின் வீணை இசையும் எசெக்ஸ் தமிழ் பாடசாலை மாணவர்களின் நாடகமும் இளம் வெண்புறாக்களின் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக தற்போது ஜேர்மனியில் வசிக்கும் லூஸ் மாஸ்டர் ஜசக் இன்பராஜாவின் (படம்) நகைச்சுவை விருந்தும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் ஜசக் இன்பராஜா பிரபல நகைச்சுவை நடிகர் என்பது குறிப்பிடத்தக்கது. சில திரைப்படங்கள் உட்பட பல நூற்றுக் கணக்கான நாடகங்களில் இவர் நடித்துள்ளார்.

# இளம் பெண்கள் மீது பாலியல் சுரண்டல்

ரொறன்ரோவில் ராமலிங்கம் அபயகரன் (47) (படம்) என்ற வர்த்தகர் இரு 14 வயது இளம் பெண்களை பாலியல் சுரண்டலுக்கு உள்ளாக்கியதற்காக பெப்ரவரி 10ல் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு உள்ளார். இது பற்றித் தெரியவருவதாவது, டோனட் கடைகள் வைத்துள்ள ஒருவர் இரு இளம் பெண்களை வேலை பெற்றுத் தருவதாகக் கூறி அணுகி உள்ளார். அப்பெண்கள் வேலையில் சேர உடன்பட்ட பின்னர் இவர் அப்பெண்களை பாலியல் இம்சைக்கு உட்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டு உள்ளது.

அபயகரன் மீது இரு பாலியல் இம்சைக் குற்றங்களும் இரு பாலியல் சுரண்டல் குற்றங்களும் ரொறன்ரோ பொலிசாரால் பதிவு செய்யப்பட்டு உள்ளது. அபயகரன் இன்னும் பலரைத் துன்புறுத்தியிருக்கலாம் என பொலிசார் கருதுகின்றனர். புலன்விசாரணை அதிகாரி பிராங் டிலியோ விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

AA ExPRESS
24 Hours Service
எங்கும் எப்போதும் அழைக்கலாம்
உங்கள் தேவை எங்கள் சேவை
தமிழ் சாரதிகள் உள்ளார்கள்
020 89020123
எங்கள் கம்பனிக்கு முழு அல்லது பகுதிநேர வாகன சாரதிகள் தேவை. வாரம் £500 மேல் கிடைக்கும். PCO Licence needed.
If you don't have, we will help you to get.

B&B SAVE MONEY SAVE TIME
B & B TIMBER & BUILDING MERCHANTS
Free Local Delivery
Open: MON - SAT 8 am to 6 pm
WED only 8 am to 1 pm
Call 020 8574 6691
020 8571 3430
6,7,8 - North Parade, North Road, Southall

LISA TIMBER LTD.
Importers of Hardwood & Parquet Flooring
REAL WOOD FLOORING AT DISCOUNTED PRICE
Call
020 8961 9030
Unit 40, Cumberland Business Park, Cumberland Avenue, Park Royal NW10 7RX

# ஜேர்மன் தேவாலயத்தில் தமிழர்கள் கண்ட பயங்கரம்

ஜேர்மனி ஸ்ருட்காா்ட் நகரில் ஏப்ரல் 3 மாலை இடம்பெற்ற வெறித்தனமான தாக்குதலில் ஒரு பெண் கொல்லப்பட்டதோடு மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர். ஸ்ருட்காட் நகரில் உள்ள மெதடிஸ் கிறிஸ்தவ ஆலயத்திற்குள் வாளுடன் நுழைந்த 25 வயதுடைய தமிழ் இளைஞர் வெறித்தனமாக தாக்குதலை நடத்தி உள்ளார். இத்தாக்குதல் நடைபெற்ற சமயம் 65 பேர் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர்.

## போர்க்களமான பிரார்த்தனை :

உள்ளூர் நேரம் மாலை நான்கு மணியளவில் கூரிய வாளை தன் இஸ்டத்துக்கு சுழற்றியபடி தேவாலயத்துக்குள் ஒரு இளைஞர் புகுந்தார். இவ்விளைஞர் கண்ணில் அகப்பட்டவர்களையெல்லாம் வெட்டிச்சாய்த்தார். தேவாலயம் அல்லோலகல்லோலப்பட்டது. அங்கிருந்தவர்கள் யாருக்கும் என்ன நடப்பது என்பதை ஊகிக்க அவகாசம் இல்லை. கையில் கிடைத்ததை எடுத்து வாள்வீச்சைத் தடுத்தனர். அங்கிருந்த கதிரைகளே அவர்களின் முக்கிய தற்காப்பு ஆயுதமாகியது. இன்னும் சிலர் தளபாடங்களுக்கிடையே பதுங்கிக் கொண்டனர். இத்தடுப்புகளையும் மீறி பலர்மீது வாள் சீறிப் பாய்ந்து அவர்களது உடல்களைப் பதம் பார்த்தது.

சிலுவையில் அறையப்பட்டு இரத்தம் வடிந்து கொண்டிருந்த யேசுநாதரின் முன்னால் அவரது சீடர்கள் இரத்தம் பெருக்கெடுத்தோட சாய்ந்து வீழ்ந்தனர். பாதுகாக்க வேண்டிய பெற்றோர் வாள்வீச்சில் வெட்டப்பட்டு விழ என்ன செய்வதென்றறியாத குழந்தைகள் கதறிக்கொண்டு வீதிக்கு ஓடினர். அவர்கள் அயல் வீடுகளுக்குச் சென்று வீட்டு மணிகளை அடித்து அங்கு தஞ்சமடைந்தனர். மிக மோசமாகப் படுகாயமடைந்த பெண் வெளியே ஓடியபொழுது மயங்கி விழுந்தார்.

செஞ்சிலுவைச் சங்கத்தினர் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். பொலீஸ் அறிக்கையின்படி அப்பெண் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்வதற்கு முன் மரணமாகி விட்டார். இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனோதத்துவ நிபுணர்கள் ஆறுதல் கூறி வருகின்றனர்.

## பொலீஸ் விசாரணை :

தகவல் பெறப்பட்ட சில நிமிடங்களிலேயே சம்பவ இடத்துக்கு பொலிசார் விரைந்தனர். அங்கு கைகளும் கால்களும் சிதறி இரத்தமயமாக இருந்ததாக பொலிஸார் ஒருவர் சம்பவத்தை விபரித்தார். தேவாலயத்தை சுற்றி வளைத்த பொலிசார் ஆயுதத்தை கீழே போடும்படி அவ்விளைஞருக்கு அறிவுறுத்தினர். ஆனால் அவ்விளைஞர் பணியவில்லை. வெறிபிடித்த அந்த இளைஞரை பொலிஸார் தடுக்க முயன்ற போதும் முடியவில்லை. இறுதியில் பொலிசார் கண்ணீர்ப்புகை அடித்து அவ்விளைஞரை மடக்கிப் பிடித்தனர்.

கொலையாளிக்கு துணையாக யாரும் வந்தார்களா என்பதை அறிய தேவாலயத்தில் இருந்தவர்கள் எல்லோரும் பொலிசாரால் சோதனை செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர். விசாரணையின் இறுதியில் தனிமனித தாக்குதல் என்பதை பொலீஸார் உறுதிசெய்தனர். கொலையாளி ஈஸ்டர் பெருநாளுக்கு முன்னரே இப்படிச் செய்யப்போவதாக வெருட்டினார் என்று பொலீஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. பொலீஸ் குற்றவியல் அதிகாரி மைக்கல் கூனரின் கூற்றுப்படி கொலையாளி இதற்கு முன்பு ஒரு நாளும் தேவாலயத்திற்கு சென்றதில்லை என்றும் கொலையாளி ஸ்ருட்காட் நகரத்தைச் சேர்ந்தவர் எனவும் குடும்பப் பிச்சனையே கொலைக்குக் காரணமென்றும் பொலீஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஏனைய தமிழர்கள் அனைவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த மெதடிஸ்ற் சேர்ச்சோடு 2200 மதநம்பிக்கையுள்ளவர்கள் இணைந்துள்ளனர் எனவும் உலகம் முழுவதும் 11 மில்லியன் மக்கள் அங்கத்தவர்களாக இருப்பதாகவும் ஜேர்மனியில் இருந்து இயங்கும் இணையச் சஞ்சிகையான தேனீ இணையத்தளம் செய்தி வெளியிட்டு உள்ளது.

இலண்டனில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் காணப்படும் வன்முறைப் போக்கின் வெளிப்பாடாக இதுவும் கருதப்பட்டதால் இச்செய்தி இலண்டனைச் சார்ந்த பிராதான ஊடகங்களிலும் இடம்பிடித்துக் கொண்டது. அமெரிக்காவில் பள்ளிகளிலும் பொது இடங்களிலும் வழமையாகி விட்ட இவ்வாறான தனிமனித தாக்குதல்கள் முதற்தடவையாக தமிழ் சமூகத்தின் மத்தியிலும் இடம் பெற்றுள்ளது.

# £9,000 வட்டி £58,000 ஆக வளர்ந்து நீதிமன்றம் சென்றது

£9,000 பவுண்களை வட்டிக்குக் கொடுத்தவர் தற்போது £58,000 கேட்டு நீதிமன்றத்துக்கு சென்றுள்ளார். இவ்வழக்கு இல்பேர்ட்டில் நடைபெற்றது. முன்னர் நண்பர்களாக இருந்த இரு தமிழர்கள் தற்போது நீதிமன்றத்தில் மோதிக் கொண்டுள்ளனர். 1999 நவம்பரில் ஆயிரத்துக்கு £35 பவுண் என்ற அடிப்படையில் ஒருவர் வட்டிக்கு தனது நண்பரிடம் இருந்து கடன் பெற்றுள்ளார். வட்டியும் முதலுமாக £20,000 சில ஆண்டுகளில் கொடுக்கப்பட்டது. ஆனால் இடைப்பட்ட சிறிது காலம் வட்டி செலுத்தப்படவில்லை. ஆனால் கடன் கொடுத்தவர் ஆரம்பத்தில் இருந்தே வட்டிக்கணக்கு போட்டு தற்போது £58,000 கேட்டு நீதிமன்றம் சென்றுள்ளார்.

கடன் கொடுத்தவர் தன் வட்டிக் கணக்கை இரு தடவைகள் மாற்றியும் உள்ளார். ஆரம்பத்தில் கடன் வாங்கியவர் தந்த தொகைகளை கடன்கொடுத்தவர் மறுத்தார். ஆனால் வங்கியில் இருந்து பெற்ற காசோலை மாற்றியதற்கான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டதால் கடன் கொடுத்தவர் அவற்றை ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்.

இவ்வழக்கு தமிழ் சமூகத்தில் காணப்படும் நெழிவு சுளிவுகளையும் சட்டத்துக்கு புறம்பான செயற்பாடுகளையும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது. தற்போது கடன் கொடுத்தவர் மற்றையவருடன் ஒரு உடன்பாட்டுக்கு வர முயற்சி செய்கிறார். நீதிபதியின் தீர்ப்பு எழுத்தில் வெளிவரும் போது தமிழ் சமூகத்தின் வட்டி நடைமுறைகளை எப்படிக் கையாள்வது என்பது பற்றிய ஒரு அறிமுகத்தைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உங்களிடம் செய்தி
உள்ளதா?
உங்களுக்கு ஏற்பட்ட
வித்தியாசமான
அனுபவங்களைப்
பகிர்ந்துகொள்ள
விரும்புகிறீர்களா?
அழைக்க வேண்டிய
தொலைபேசி இலக்கம்
020 8905 7775
உதயன்
குறிப்பு :
உங்கள் தொலைபேசி
அழைப்புகள் அனைத்தும்
பாதுகாப்பு காரணங்களுக்காக
பதிவு செய்யப்படும்.
ஒத்துழைப்புக்கு நன்றி.

# வோல்தம்ஸ்ரோ இளைஞர்கள் சமூகப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

தமிழ் சமூகப் பிரதிநிதிகள் வோல்தம்ஸ்ரோ இளைஞர் குழுவை ஏப்ரல் 10ல் சந்தித்தனர். இச்சந்திப்பில் வோல்தம்ஸ்ரோ இளைஞர்களுடன் நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன், கற்பக விநாயகர் ஆலயத் தலைவர் கோபால், உத்தமன், உதயன் நிருபர் ஆகியோர் கலந்து கொண்டனர். இளைஞர் குழுக்களிடையே இடம்பெற்று வரும் மோதல்களை கட்டுப்படுத்தி அவர்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி பிரதான சமூக நிரோட்டத்தில் அவர்களை இணைக்கும் நோக்குடன் இவ்வாறான சந்திப்புகள் தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் இடம்பெற்று வருகிறது.

இச்சந்திப்பின் போது இளைஞர்கள் 15 பேர்வரை கலந்துகொண்டனர். அவர்கள் தமது பிரச்சினைகளையும் அபிப்பிராயங்களையும் தயங்காமல் வெளியிட்டனர். தாங்கள் சமூகநடவடிக்கைகளில் பங்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்று தெரிவித்த இளைஞர்கள், தாங்கள் வன்முறையை விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அது தம்மீது திணிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். தாங்களாகச் சென்று யாரையும் தாக்குவதில்லை என்றும் தங்க்ளைத் தாக்க வரும்போது தற்காத்துக் கொள்ளவே திருப்பித் தாக்குவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். வன்முறைகளைக் கட்டுப்படுத்த யார் முன் வந்தாலும் தாங்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கத் தயார் என அவர்கள் தெரிவித்தனர்.

ஆலயங்கள், தமிழ் சங்கம் மற்றும் சமூக அமைப்புகள் இவ்விளைஞர்கள் விடயத்தில் அக்கறையில்லாமல் இருப்பதை கவுன்சிலர் போல் சுட்டிக்காட்டினார். 2.5 மில்லியன் பவுண்களுக்கு அதிகமாக தமிழ் பொது அமைப்புகளுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் நிதி வழங்கிய போதும் 15 ஆண்டுகளுக்கு முன்னர் நிரப்பிய போம்களைத் தான் அவர்கள் இப்பவும் நிரப்புவதாக அவர் குற்றம்சாட்டினார். சமூகத்தினுடைய தேவை மாறிவிட்டது என்று குறிப்பிட்ட அவர் இளைஞர்களை சமூக நிரோட்டத்தில் கொண்டுவர இப்பொது அமைப்புகள் முன்வரவேண்டும் என அவர் தெரிவித்தார். குரோய்டன் தமிழ் சங்கம் முக்கிய பொறுப்புகளை அப்பகுதியில் உள்ள இளைஞர்களிடம் கையளித்த முன் மாதிரியை உதயன் நிருபர் அங்கு சுட்டிக்காட்டினார்.

அண்மைக்காலமாக வோல்தம்ஸ்ரோ பகுதி தமிழ் இளைஞர்களின் வன்முறை மையங்களில் ஒன்றாக பொலிசாரினால் அடையாளப்படுத்தப்பட்டு இருந்தது. மேலும் கற்பக விநாயகர் ஆலயம் வோல்தம்ஸ்ரோ இளைஞர்களுடன் தொடர்புபடுத்தப்பட்டும் இருந்தது. இது பற்றிக் குறிப்பிட்ட இளைஞர்கள் ஆலயத்துக்கு முன்னுள்ள கார் பார்க்கினுள் ஆலயம் அமைக்கப்படுவதற்கு முன்னரேயே கூடுவதாகத் தெரிவித்தனர். அக்கார் பார்க் ஆலயத்தினது அல்ல கவுன்சிலினுடையது என்று குறிப்பிட்ட கோபால் கடந்த தேர்த் திருவிழாவின் போது கார்ப்பாக்கில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமும் இளைஞர்கள் கார்பார்க்கை பயன்படுத்துவதும் ஆலயத்தை மிகவும் பாதிப்பதாகத் தெரிவித்தார்.

தங்கள் நடை, உடையை வைத்துக் கொண்டு தங்களை ஏறஇறங்கப் பார்த்து ஒதுக்க சிலர் முற்படுவதாக குற்றம்சாட்டிய இளைஞர்கள் புதிய சூழலுக்கு ஏற்ப தாங்கள் நாகரீகமாக ஆடை அணிவதில் என்ன தப்பு என்று கேள்வி எழுப்பினர். உதயன் பத்திரிகை தாங்களைப் பற்றி செய்தி வெளியிட்ட போது தங்களிடம் தொடர்பு கொள்ளாததை அவ்விளைஞர்கள் சுட்டிக்காட்டினர்.

இளைஞர்களையும் சமூக நீரோட்டத்தில் இணைத்துச் செல்வதற்கான ஒரு வழி காணப்பட வேண்டும் என்பது அங்கு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கவுன்சிலர் போல் பல ஆலோசனைகளையும் உதாரணங்களையும் இளைஞர்களுக்கு விளக்கினார்,

அடுத்த ஒக்ரோபர் மாதத்திற்கு முன் இலண்டனில் உள்ள அனைத்து இளைஞர் குழுக்களையும் இணைத்து ஒரு புரிந்துணர்வு சந்திப்பு ஒன்று ஏற்படுத்துவது என்று கவுன்சிலர் போல் தெரிவித்தார். அதற்கிடையே வோல்தம்ஸ்ரோ தமிழ் சங்கத்துடன் தொடர்பு கொண்டு இளைஞர்களை அதில் பங்கெடுக்க வைக்க வேண்டும் என இளைஞர்கள் கேட்டுக் கொண்டனர். அதற்கு தமிழ் சங்கம் உடன்படாத பட்சத்தில் புதிய அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது என்றும் அங்கு முடிவெடுக்கப்பட்டது. இளைஞர்களை பிரதான நீரோட்டத்தில் சேர்க்கும் எந்த நடவடிக்கைக்கும் ஆலயம் உறுதுணையாக இருக்கும் என நிர்வாகத் தலைவர் கோபால் தெரிவித்தார்.

# பண மோசடிகளுக்கு பொலிசார் முன்னுரிமை

வன்முறைக்கும் கிறடிட் காட் மற்றும் பண மோசடிகளுக்கும் தொடர்பு இருப்பதால் பண மோசடிகளைக் கையாள்வதில் பொலிசார் தமது கவனத்தை திசை திருப்பி உள்ளனர். தமிழ் இளைஞர் குழுக்களும் வர்த்தக நிறுவனங்களும் இணைந்து இந்த மோசடிகளில் ஈடுபடுவதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். சில சமயம் பண மோசடியை சட்டபூர்வமானதாகக் காட்டவே வியாபார நிறுவனங்கள் உருவாக் கப்படுவதாகவும் பொலிசார் நம்புகின்றனர்.

ஒப்பிரேசன் என்வர் நடவடிக் கையின் போது தனி ஒரு கணக்கில் இருந்து மட்டும் 22 மில்லியன் பவுண் பெறுமதியான மோசடி இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மோசடிகளில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்ட பல தமிழ் கடைகள், றெஸ்ரோறன்ற் போன்ற வர்த்தக நிலையங்களில் இருந்தும் கிறடிட்காட் மெசின் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. இந்நடவடிக்கை மேலும் தீவிர மாக்கப்பட உள்ளது. கிறடிட்காட் மோசடியில் ஈடுபட்ட சில தமிழ் வர்த்தக உரிமையாளர்கள் பட்டி அணிவிக்கப்பட்டு ஊரடங்கு வாழ்க்கைக்கு உட்படுத்தப்பட்டும் உள்ளனர்.

# ஒப்பிரேசன் என்வரில் 70 பேர் வரை கைது

68 தமிழர்கள் குறிப்பாக இளைஞர்கள் வன்முறை மற் றும் மோசடிகளில் ஈடுபட்ட குற்றங்களுக்காக ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.கடந்த யூலை முதல் மார்ச் வரை இடம்பெற்ற வெவ்வேறு நட வடிக்கைகளில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.மேலும் குற்றச்செயல்களில் பயன் படுத்தப்பட்ட 14 முகவரிகள் இந்த ஒன்பது மாத காலப்பகுதியில் சோதனையிடப்பட்டுள்ளது. இம்முகவரிகளில் இருந்து இரு துப்பாக்கிகள் உட்பட கூரிய ஆயுதங்கள், கிறடிட்காட்கள், இலத்திரனியல் கருவிகள் எனப்பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. மூன்று BMW கார்களும் கைப்பற்றப்பட்டுள்ளது. இக்கார்கள் மோசடிகளிலும் குற்றச்செயல்களிலும் பயன்படுத்தப் பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## முரண்பாடுகளும் மாற்றங்களும்

முரண்பாடுகளும் மாற்றங்களும் என்ற அமைப்பின் சந்திப்பு மே 17ல் ஈஸ்காமில் உள்ள அவ்வமைப்பின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. தமிழ் மக்களின் இளைய சமூகத்தினரிடம் காணப்படும் முரண்பாடுகளை களைவதற்கான நடைமுறைத்திட்டங்கள் பற்றி இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட உள்ளது.

# பிரித்தானியத் தேர்தலில் போட்டியிட்ட பிரதான கட்சிகள்

**அலசுபவர் : சேனன்**

## இனத்துவேசக் கட்சிகள் (BNP,UKIP....) :

தமிழர்கள் மட்டுமல்ல சிறுபாண்மை மக்களின் ஒரு வோட்டுக்கூட இக்கட்சிகளுக்கு விழக்கூடாது. இவை மிகக் கொடூரமான இனத்துவேசக் கட்சிகள். இதன் முக்கிய தலைவர்கள் ஹிட்லரை பூசிப்பவர்கள். மூலைக்கு மூலை ஆசிய மற்றும் அரபிக்காரக்களுக்கு எதிராக கலகம் செய்து திரிபவர்கள். ஆசியர்களின் கடைகளுக்குள் நாய் மலத்தை எறிந்து சந்தோசப்படுபவர்கள். கடந்த தேர்தலில் BNP யை ஒரு தேசியக் கட்சியாக கருதி வோட்டுப் போட்ட நண்பர்கள் தயவு செய்து மீண்டும் அந்த தவறை செய்யாதிருப்பார்களாக. UKIP யினை நேரடியாக மொழிபெயர்த்து UK சுதந்திரக்கட்சி என்ற மயக்கத்தில் வோட்டை இழந்தவர்கள் மீண்டும் மயங்காதிருப்பார்களாக. றொபேட் கில்ரோயின் வெரித்தாஸ் போன்ற கட்சிகளும் துவேசத்தை உயிர்நாடியாக கொண்டு இயங்குபவையே.

## கொன்சவேட்டிவ் கட்சி :

புத்திசாலித்தனமான துவேசிகளினதும் சுரண்டல் அவா கொண்டவர்களினதும் மறைமுக இருப்பிடம் கொன்சவேட்டிவ் கட்சி. துவேசக்கட்சிகள் நேரடியாக பேசுபவற்றை, செய்பவற்றை இக்கட்சி மறைமுகமாக செய்கின்றது. அகதிகளுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் எதிராக தொடர்ந்து அரசியல் செய்து வருகின்றது இக்கட்சி. பிரித்தானியத் தமிழர்கள் போன்ற சிறுபான்மை இனங்களுக்காக அல்லது ஒடுக்கப்படும் மக்களுக்காக கதைத்த வரலாறு இக்கட்சிக்கு கிடையாது..

இருப்பினும் மாயஜாலங்கள் காட்டி சிறுபான்மையினரின் வாக்குகளை கவருவதற்கு இவர்கள் தயங்க மாட்டார்கள். அந்த சுத்துமாத்துக்குள் நாம் சிக்காமல் இருக்க வேண்டுமானால் இந்த வேட்பாளர்களின் பின்னணியைப் பார்த்தாலே போதும். பெரும் பணக்காரர் என்பதைத் தவிர இவர்களின் அரசியல் வரலாற்றில் எந்தப் புனிதமும் இல்லை.

## லிபரல் டெமோகிரட் கட்சி :

சுதந்திரம், மனிதஉரிமைக்காக பேசுவதாக பாசாங்கு செய்யும் சார்ள்ஸ் கென்னடி தனது கட்சி மிக வேகமாக வளர்வதாக பெருமையடித்துக் கொண்டாலும் தேர்தல் அவர்கள் எதிர்பார்ப்பது போல் இருக்கப்போவதில்லை என்பது திண்ணம். இவர்களின் வழுவழுப்புத் தன்மை பெரிய பலவீனம். யாருக்காக கதைக்கிறார்கள் அல்லது எந்த மாற்றத்தைக் கேட்கிறார்கள் என்று யாருக்கும் விழங்குவதில்லை. முன்பு குறிப்பிட்ட இரண்டு முதலாளிக் கட்சிகளிலும் இருந்து மாற்றமில்லாத அரசியல் கொள்கையுடன் தாம் சிறுபான்மையினருக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் போராடுவதாக நம்ப வைக்கப் பார்க்கிறார்கள். இவர்கள் முன்வைக்கும் பொருளாதார மாற்றம் மேலும் கேவலமானது மட்டுமின்றி போலியானதும் கூட இருப்பினும் ஈராக் யுத்தத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்த மில்லியன் கணக்கான இங்கிலாந்து மக்களின் வோட்டுக்களைப் பெறுவதற்கு இவர்கள் துடியாய் துடிக்கிறார்கள். ஈராக் யுத்தத்திற்கு எதிராக கதைத்த ஒரே ஒரு கட்சியாக தங்களைத் தோற்றமைத்துக் கொண்டு முஸ்லீம் மக்களின் வோட்டைக் குறிவைத்து தாக்குவதில் இவர்கள் இறங்கியுள்ளார்கள். இவர்களின் போலி வேஷம் ஆங்காங்கே இவர்களின் மேடைப் பேச்சுக்கள் மூலம் உடைபட்டு வருகிறது. இவர்களின் உண்மைச் சொரூபம் மிக ஏமாற்றம் தருவதாகவே உள்ளது.

## புதிய தொழிலாளர் கட்சி :

இன்று இங்கிலாந்து ஒரு சுதந்திர நாடாக பல்கலாச்சார பல்லின மக்கள் வாழக்கூடிய இடமாக இருக்க முக்கிய காரணம் தொழிலாளர் கட்சி. தொழிலாளர்களால், தொழிற்சங்கங்களால் தொழிலாளர்களின் குரலாக உருவாக்கப்பட்டது இக்கட்சி. ஆரம்ப காலங்களில் இனத்துவேசத்திற்கு எதிராக தொழிலாளர் நலனுக்காக போராடிய பரலாறு கொண்டது இக்கட்சி. முன்னாள் பிரதமர் மார்க்கிரட் தச்சருக்கு தலையிடி வழங்கிய எதிர்க்கட்சியாக இருந்த போதும் தட்சர் காலத்திலும் தொடர்ந்து தோற்கடிக்கப்பட்டமை இக்கட்சியின் அடிப்படையையே மாற்றிவிட்டது.

தற்போதைய பிரதமர் ரொனி பிளேயரும் அவரது குஞ்சு குருமன்களும் கட்சியை கைப்பற்றிய கையுடன் கட்சியின் அரசியல் நோக்கையே தலைகீழாக மாற்றிவிட்டார்கள். பழமையுடன் அறுத்துக் கொண்டு புதிய வேகத்தை ஏற்படுத்துவதாக அறிவித்துக் கொண்டு இக்கட்சியின் வரலாற்று ரீதியான தொழிலாளர் தொடர்பை அறுத்து எறிந்தார்கள். கட்சியின் பெயரையே மாற்றி புதிய தொழிலாளர் கட்சி என்று அறிவித்துக் கொண்டார்கள். வறிய மக்கள் மற்றும் பாட்டாளிகளின் ஆதரவில் இயங்கிய, அரசியல் செய்த உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டது மட்டுமின்றி கட்சியின் விதிமுறைகள் திருத்தி எழுதப்பட்டது. இன்றைக்கு கென்சவேட்டிவ் கட்சிக்கு எவ்விதத்திலும் குறைவில்லாத கட்சியாக இக்கட்சி வளர்ந்துவிட்டது.

பிரித்தானிய காலனியாதிக்க பழைய வரலாற்றைப் பற்றி நாமெல்லாம் பெருமைப்பட வேண்டும் என்று கோர்டன் பிறவுண் ஒரு பக்கம் அறிக்கை விட மனித உரிமை மீறும் சட்டங்களை பாராளுமன்ற கூட்டத்தில் நிறைவேற்றுவதில் மும்மரமாய் இருக்கிறார் ரொனி பிளேயர். உள்நாட்டு அமைச்சர் அதிகாரங்களை தன்வயப்படுத்துவதில் அக்கறையுடன் இயங்குகிறார். முன்னாள் உள்நாட்டு அமைச்சர் டேவிட் பிளங்கேற் எல்லாரும் வீட்டில் ஆங்கிலம் பேச வேண்டும் என்று அறிவித்தது பலருக்கும் ஞாபகமிருக்கலாம்.

இன்றைக்கு பிரித்தானியம் பற்றியும் ஆங்கிலேயர்களாக இருத்தல் பற்றியும் அவர்கள் வாய் வலிக்க கத்துகிறார்கள். ஆனால் இவை எமக்கு சம்பந்தப்படாத விடயங்களாக இருக்கின்றன. தமிழன் என்ற அடையாளத்தை உடைத்து உலக மனிதனாக வேண்டிய வாசலில் நாம் இருக்கின்றோம். ஒவ்வொரு இனமும் அவ்வாறு தான். இப்படியிருக்க நீங்கள் ஒரு ஆங்கிலேயனாக மாற முடியுமா? உங்களை ஆங்கிலேயன் என்று கூறிக்கொள்ள உங்களால் முடியுமா?

பலர் பிரித்தானிய பிரஜைகளாக ஆக விரும்புவதற்கு முக்கிய காரணமே இலங்கைக்குச் சென்று உறவினர், நண்பர்களை பார்த்து வருவதற்குத் தான். பிரித்தானியன் என்று அடையாளப்படுவதற்கு இன்று நாம் நாட்டின் தலைவர் இங்கிலாந்து ராணிக்கு சத்தியப் பிரமாணம் எடுக்க வேண்டும். அல்கைடா போன்ற பயங்கரவாத குழுக்களில் சேர்பவர்கள் தலைவருக்கு உண்மையாக இருப்பதாக சத்தியப் பிரமாணம் எடுப்பது எமக்குத் தெரியும். இங்கிலாந்து ஒரு சுதந்திர நாடாக, பல்கலாச்சார நாடாக அறியப்படும் ஒரு ஜனநாயக நாடு என்றால் ஏன் நாம் ஒரு தனி நபருக்கு சத்தியப் பிரமாணம் எடுக்க வேண்டும்? இந்தியாவில் இருந்து களவாடப்பட்ட கோகினூர் வைரத்தை முடியுள் பொருத்தி வைத்திருக்கும் இங்கிலாந்து அரசிக்கு அரச குடும்பத்தில் பிறந்த பெண்மணி என்ற ஒரு பிறப்பால் வந்த தகுதி தவிர வேறு ஏதாவது தகுதி உண்டா?இப்படி ஒரு மோட்டுத் தனமான சட்டத்தை கொண்டு வந்தது தொழிலாளர் கட்சியின் முன்னாள் ஹோம் செக்ரட்டரி டேவிட் பிளங்கேற்.

இது மட்டுமல்ல சிறுகச்சிறுக அவர்கள் மனித உரிமையை பேச்சுச் சுதந்திரத்தை பறித்துக் கொண்டிருக்கிறர்கள்.
தேர்தல் தருணத்தில் புத்தாடை அணிந்து அவர்கள் புன் சிரிப்புடன் உங்கள் வாசல்படி வரக்கூடும். எத்தனையோ ஆயிரம் முஸ்லீம் மக்களின் இரத்தக்கறை அவர் தம் கைகளில் இருந்து இன்னும் காயவில்லை. அவற்றை கழுவிவிட்டு வரும்படி திருப்பி அனுப்புங்கள். சட்டத்துக்கு புறம்பாக கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்புக்கு மாறாக மில்லியன் கணக்கான மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் யுத்த தாகம் கொண்டு இந்த அரசாங்கம் பல்லாயிரம் முஸ்லீம்களின் உயிர்களை வேட்டையாடியது மறந்தா போய்விடும்?

தேர்தலின் பிறகு அரச உத்தியோகத்தில் இருக்கும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலையை விட்டுத் துரத்த கோர்டண் பிறவுண் உறுதிபூண்டுள்ளார். 40 வருடங்களுக்கு மேல் உழை உழை என்று உழைத்து ஓய்ந்த பின்பும் ஒரு மதிப்பான ஓய்வூதியம் எடுக்க வழியின்றி முதியவர்களை வறுமைக்கிடங்கில் தள்ள திட்டமும் சட்டமும் கொண்டுவந்துள்ளார்கள். இங்கு செய்யும் அநியாயம் போதா தென்று ஆபிரிக்கா, சீனா தொழிலாளர்களை வதைக்கும் சட்டத்தையும் இந்த அரசாங்கம் தீட்டியுள்ளது. அண்மையில் HSBC வங்கி பில்லியன் கணக்கில் லாபமெடுத்ததை அறிவித்தது ஞாபகமிருக்கும். அனைத்தும் சீனா தொழிலாளர்களை சுரண்டிச் சூறையாடப்பட்ட பணம். ஒவ்வொரு நிமிடத்துக்கு நிமிடம் இலாபமெடுக்கும் BP பெற்றோல் நிலையத்தில் வேலை செய்யும் தமிழனுக்கு மணித்தியாலத்துக்கு £5.50 கூட கொடுப்பதில்லை.

இந்தக் கதை இவ்வாறு இருக்க இந்த முதலைகளுக்கு அரச சலுகை வழங்கி அவர்களது இலாபத்தை அதிகரிக்க இந்த அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது. என் போன்ற சாதாரண உழைக்கும் மனிதன் தன் சக்திக்கும் மேலாக வருமானவரி கட்டிக் கொண்டிருக்க மில்லியன் பவுண் செலவில் ஓய்வு உலாப் போகும் முதலாளிக்கு வருமான வரியை குறைக்கிறது இவ்வரசு.

# பிரித்தானியத் தேர்தலும் அகதிகள் பிரச்சினையும்

போராட்டத்தின் மூலமாக நாடு கடந்தவர்கள் நாம். எம் போராட்டச் சக்தியை நாம் இழந்து விடக்கூடாது. அகதிகளுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் எதிராக இவ்வரசாங்கம் செய்யும் அநியாயம் சொல்லி மாளாது. பொருளாதாரத்தை நல்லபடி நகர்த்த எமக்கு கள்ளத் தொழிலாளர்கள், அடிமட்ட சம்பளத்திற்கு வேலை' செய்பவர்கள் தேவை என்று உள்நாட்டு அமைச்சின் பல்வேறு பெருந்தலைகள் அறிக்கை விட்டுள்ளனர்.

அகதிகள் மட்டும் வருடத்துக்கு 100 மில்லியனுக்கும் அதிகமான வருமானவரி கட்டி வருகிறார்கள். அது மட்டுமல்ல மிகக்குறைந்த சம்பளத்தில் அதி உயர் தொழில்நுட்ப வேலைகளை இவர்கள் செய்கிறார்கள். அரசாங்கம் அகதிகளுக்காக செலவு செய்யும் பணத்தைப் போல் பல மடங்கு வருவாயை இவர்கள் பிரித்தானியப் பொருளாதாரத்துக்கு கொண்டு வருகிறார்கள். வெளிநாட்டவர்களால் இங்கிலாந்து பொருளாதாரத்துக்கு வரும் வருமானம் அளப்பரியது. இதனால் தான் எமக்கு அகதிகள் வேண்டும், இந்த சட்டபூர்வமற்ற வெளிநாட்டவர்களும் வேண்டும் என்று டேவிட் பிளங்கேற் அறிக்கை விடவேண்டியிருந்தது. அதன் அர்த்தம் அடக்கி வாசிக்கப்பட்டு மழுங்கடிக்கப்பட்டுவிட்டது. இந்த உண்மைகளை குழி தோண்டிப் புதைத்துவிட்டு அகதிகளுக்கு எதிராகவும் வெளிநாட்டவர்களுக்கு எதிராகவும் இக்கட்சிகள் போர் தொடுக்கின்றன.

அவர்கள் சொல்லும் கதைகளைக் கேட்டால் நீங்கள் விழுந்து விழுந்து சிரிப்பீர்கள். அகதிகளுக்கு இலவசமாக வீடு கார் வழங்கப்படுகிறது. அகதிகளுக்கு மாதா மாதம் பணம் வழங்குவதால் அவர்கள் வேலை செய்யாது தெருவில் போய்வரும் வெள்ளையின பெண்களை கேலி கிண்டல் செய்து திரிகிறார்கள். அகதிகளால் கல்வித் தராதரம் சீரழிகின்றது. ஆஸ்பத்திரிகள், சுகாதார சேவை முதலான சமூக சேவைப்பிரிவுகளின் தராதரம் பறிக்கப்படுகின்றது. அகதிகளால் வன்முறை அதிகரிக்கின்றது. இது போன்ற கீழ்த்தரமான பிரச்சாரங்களை புன்னகையுடன் பொறுத்துக் கொண்டு நாம் இருக்க எமது இமிகிரேஷன் சிஸ்ரத்தை மேலும் மேலும் இறுக்குவோம் என்று உறுதி வழங்குகிறார் பிரதமர் பிளேயர்.

சற்றே சிந்தித்துப் பாருங்கள். இந்த நாட்டில் மட்டுமல்ல எந்த நாட்டிலும் இருக்க எமக்கு உரிமை உண்டு. பூமிப்பந்தை கோடுகள் போட்டு நாம் பிரித்திருந்தாலும் மனித இனம் அனைத்துக்கும் அது சொந்தம். போதாக்குறைக்கு இங்கிலாந்து பேரரச வரலாறு ஒடுக்குமுறை வரலாறு. ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக எங்களைச் சுரண்டிச் சுரண்டி இவர்கள் தங்கள் நாட்டில் பணக்காரர்களையும் அரச பரம்பரையையும் வளர்த்தவர்கள். எத்தனையோ வகையான விலங்கின வகைகளை, காடுகளை மட்டுமின்றி மனித இனங்களையும் இவர்கள் அழித்தவர்கள். அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஆபிரிக்கா என்று கடலோடிச் சென்ற இடங்களிலெல்லாம் இரத்தக்கறை படிந்துள்ளது. இன்று ஆப்கானிஸ்தான், ஈராக் என்று போய் நின்று தம் அதிகாரத்தை நிலைநாட்டுகிறார்கள். அதைப்பற்றி

(தொடர்ச்சி 4ம் பக்கம் )

MAHARAJA
Indian Meat & Poultry
WHOLESALERS & RETAILERS OF FRESH MEAT & POULTRY
SUPPLIERS TO THE TRADE & RESTAURANT
WE ALSO SELL
BOILER CHICKEN GROUSE, QUAILS, (BHATERA),
DEER, PIGEON, RABBIT, SPRING LAMB, AND
WHOLE MUTTON AT LOW PRICES
Tel: 020 8813 7700
776 Uxbridge Road, Hayes, mlddx. UB4 ORS

ATN Jewellery
தரம், சேவை, நாணயம்
அனைத்தும் இங்கே தங்கம்
மங்கையர் மணங்கவர்
நகைகளோ மற்றும்
குறையாத தங்கம்
(T) 020 8521 9767
37, Palmerston Road,
Walthamstow,
London E17 6PR

J K SHAH
Chartered Certified Accountants
& Registered Auditors.
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park
London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

SPL Offer 5 GARMENTS Drycleaned £9.99 only
Bring this Advertisement in and get your
WASHING DONE FOR HALF PRICE
MONDAY - FRIDAY ONLY
OPEN 8am - 10pm TUE & THUR
Rest of the days 8am - 8 pm
Mob: 07984644259
at junction of East Lane/Watford Rd. 14 Court Parade
also at Northolt
12 Manderville parade (A312) next to KFC Part of Salsha Ltd.
Laundry, Dry Cleaning & Ironing Centre

Creative Curtains (LONDON) Ltd.
Made to Measure Service
for
Curtains & Blinds
Contact Dee Dee
Tel: 020 8574 2156
Mobile: 07780 572 429
15 Witley Ind. Est. Witley Gardens,
Southall UB2 4EZ

# குருக்களின் சிற்றின்ப லீலைகளுக்கு 12 ஆண்டுகள்

எழுதுபவர் : அரவிந்தன், ரி கொன்ஸ்ரன்ரைன்

சிவகந்தகிரி ஆலயத்தின் குருக்கள் ராமநாதன் சோமநாதனுக்கு (41) 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. பெப்ரவரி 18ல் இவரது தண்டனை ஆரம்பித்தது. புவனேஸ்வரி (29) (பெயர் மாற்றப்பட்டு உள்ளது) என்ற தமிழ் பெண்ணை யூலை 2002இலும் நவம்பர் 2003இலும் ராமநாதன் சோமநாதன் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கி உள்ளார். இரு பாலியல் பலாத்கார குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்பட்டு இத்தண்டனை வழங்கப்பட்டு உள்ளது.

நிதிபதி சாய்மன் ப்ராட் முன்னிலையில் இடம்பெற்ற இவ்வழக்கில் 6 ஆண்களும் 6 பெண்களும் கொண்ட யூரிகள் 5 மணிநேரத்தில் சோமநாதனை குற்றவாளியாகக் கண்டனர். அரச தரப்பில் புவனேஸ்வரிக்காக செல்வி கில்லியன் எத்தேட்டன் வாதிட்டார்.

வழக்கின் பின்னணி

## போன பிறப்பில் என் மனைவி :

புதிய பிளாற் ஒன்றை வாங்கத் தீர்மானித்த புவனேஸ்வரி தனது சாதகக் குறிப்பைக் கொண்டு குருக்களிடம் சென்றுள்ளார். குருக்கள் சம்பந்தமில்லாமல் புவனேஸ்வரியின் தனிப்பட்ட சொந்த விடயங்களை விசாரித்து உள்ளார். அதனால் அவஸ்தைப்பட்ட புவனேஸ்வரி அழுதுவிட்டார். புவனேஸ்வரியின் குழந்தைப் பருவம் நன்றாக அமையவில்லை என்று குறிப்பிட்ட குருக்கள் இதெல்லாம் இனி சரியாகிவிடும் என்று கூறியுள்ளார்.

மேலும் புவனேஸ்வரிக்கு அழகான கண்கள், அவர் கணவனைப் பிரிந்தது நல்லது, போன பிறவியில் தாங்கள் ஒன்றாக வாழ்ந்தோம், புவனேஸ்வரி தன்னை திருமணம் செய்திருந்தார், தாங்கள் ஒருவரை ஒருவர் காதலித்தோம் என்று கூறிய குருக்கள் புவனேஸ்வரி போன பிறவியில் தற்கொலை செய்துகொண்டதாகவும் ஆனாலும் கடவுளாகப் பார்த்து புவனேஸ்வரியை தன்னிடம் அனுப்பியதாகவும் குருக்கள் கூறி உள்ளார். குருக்களின் எல்லை மீறிய பேச்சை நிறுத்த தான் வந்த விடயத்தை சொல்லி புதிய பிளாற்றில் கூட்டுப் பிரார்த்தனைக்கு ஒழுங்கு செய்தார்.

யூலை 11 2002ல் பிளாற்றுக்குச் சென்ற குருக்கள் புவனேஸ்வரியை தனக்கு அருகில் அமரச் செய்து விட்டு உரையாடினார். புவனேஸ்வரியை அணைக்கவும் முத்தமிடவும் குருக்கள் முற்பட்டுள்ளார்.

புவனேஸ்வரி அதற்கு தெளிவாக மறுத்த போதும் குருக்கள் விடவில்லை. புவனேஸ்வரியை கையில் இறுக்கிப் பிடித்தபடி தனக்கு புவனேஸ்வரியில் உரிமை இருப்பதாகவும் புவனேஸ்வரி போன பிறப்பில் தனது மனைவி என்றும் அவரை காதலிப்பதாகவும் குருக்கள் கூறி உள்ளார். புவனேஸ்வரி உடன்பட மறுத்த போது அது தெய்வ குற்றம் என்றும் கடவுளை கோபப்படுத்தும் என்றும் குருக்கள் கூறி பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கி உள்ளார். புவனேஸ்வரி கெஞ்சி மன்றாடிய போதும் குருக்கள் விடவில்லை. தனது இச்சையைத் தீர்த்துக்கொண்ட குருக்கள் உனது வாழ்க்கையில் நீ அதிஸ்டசாலியாக இருப்பாய் எனத் தெரிவித்து உள்ளார். அதன் பின்னர் எழுந்து எதுவும் நடக்காதது போல் சோபாவில் போய் உட்கார்ந்தார் குருக்கள்.


## மீண்டும் தாவிய குருக்கள் :

நவம்பர் 2003ல் மீண்டும் புவனெஸ்வரியின் வீட்டுக்கு வந்த குருக்கள் இன்னுமொரு தடவை பாலியல் வல்லுறவு கொண்டுள்ளார். இதனால் கர்ப்பமடைந்த புவனேஸ்வரி கருக்கலைப்புச் செய்து கொண்டுள்ளார். மேலும் இக்காலகட்டத்தில் புவனேஸ்வரி தற்கொலைக்கு முயற்சித்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

குருக்களின் சாட்சியம் :

தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்த குருக்கள் புவனேஸ்வரி தன்மீது ஆர்வம் கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டார். புவனேஸ்வரி தன்னை பாலியல் உறவுக்குத் தூண்டியதாக கூறிய குருக்கள் போன பிறப்பு காதல் கதையெல்லாம் புவனேஸ்வரியே கூறியதாகவும் தெரிவித்தார். புவனெஸ்வரி கர்ப்பமடைந்தது எதுவும் தனக்குத் தெரியாது எனவும் குருக்கள் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

பூஜையில் சோமநாதக் குருக்கள்



## சாட்சிகள் :

புவனேஸ்வரியைத் தவிர வேறு பெண்களும் இக்குருக்களின் பாலியல் சேட்டைகளுக்கு உள்ளாகியதாகவும் தாங்கள் மற்றையவர்களின் அவமதிப்புக்கு உள்ளாக நேரும் என்பதால் அவர்கள் சாட்சியளிக்க முன்வரவில்லை என்றும் அரசதரப்பு வழக்கறிஞர் குறிப்பிட்டார். ஆனால் ஆலயத்தின் 3 உறுப்பினர்கள் சாட்சியங்களை வழங்கி உள்ளனர். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பாதிக்கப்பட்ட ஒரு பெண் முன்வந்து குருக்களுக்கு எதிராகச் சாட்சியமளித்து உள்ளார்.

மேலும் ரூற்றிங் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் நிர்வாகத் தலைவர் சீவரத்தினம் பொலிஸ் தரப்பில் குருக்களுக்கு எதிராக சாட்சியமளித்து உள்ளார். ஆறு ஆண்டுகளுக்கு முன் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இக்குருக்கள் வேலை செய்து உள்ளார். அங்கு வரும் பெண்களுடன் குருக்கள் பழகும் முறையில் சந்தேகம் ஏற்பட்டதனால் குருக்களின் வேலை ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவில்லை என சீவரத்தினம் தனது சாட்சியத்தில் தெரிவித்தார். இச்சாட்சியங்கள் குருக்களின் பாலியல் நடவடிக்கைகளையும் பெண்களுடன் அவருடைய பழக்கவழக்கங்களையும் அம்பலப்படுத்தியது.

## பொலிஸ் பாராட்டு :

இவ்வழக்கில் புவனேஸ்வரியின் மனத் தைரியத்தை பொலிசார் பாராட்டினர். இவ்வழக்கு புவனேஸ்வரிக்கும் சாட்சியமளித்தவர்களுக்கும் கடினமானது என்று தெரிவித்த பொலிசார் இவர்கள் சமூகத்தால் தனிமைப்படுத்தப்படும் அபாயம் இருப்பதை சுட்டிக்காட்டி உள்ளனர். சமயத்தின் போர்வைக்குள் இருந்து கொண்டு பெண்களை இரையாக்கி உள்ளதாக இவ்வழக்கை புலன் விசாரணை செய்த குரோய்டன் பொலிஸ் அதிகாரி றொப் பக்கெல் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இவ்வழக்கின் தீர்ப்பு இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உற்சாகமளிக்கும் என்று தெரிவித்தார்.

## குருக்களின் மனைவி :

இவ்வழக்கின் போது குற்றம்சாட்டப்பட்ட குருக்களின் மனைவியும் நீதிமன்றம் வந்திருந்தார். தனது பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் பற்றியே அத்தாய் வேதனைப்பட்டார். தங்கள் தந்தை இவ்வாறான வழக்கில் சம்பந்தப்பட்டு உள்ளார் என்பது அக்குழந்தைகளின் நண்பர்களுக்கு தெரியவந்தால் அது அக்குழந்தைகளைப் பாதிக்குமே என அவர் மனவருத்தப்பட்டார். ஒருவர் தவறாக ஒன்றைச் செய்தால் அது முழுக்குடும்பத்தையும் பாதிக்கும். எங்களுடைய கலாச்சாரத்தில் நாங்கள் தவறாக நடந்துகொண்டால் அது எங்களின் பிள்ளைகளையும் அவர்களின் பிள்ளைகளையும் பரம்பரைக்கும் தொடரும். தவறுவிட்டால் தண்டனையைப் பெற வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும்.

## கற்பழிப்புக்கு வக்காளத்து வாங்கும் இராசலிங்கம் :

சிவகந்தகிரி ஆலயம் வெஸ்டன் ஜீவலர்ஸ் உரிமையாளர் சிவசுந்தரத்தின் சொத்தாக இருந்தது. ஆனால் பாலியல் வல்லுறவு பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து ஆலயம் கோபி என்பவருக்கு விற்கப்பட்டதாக சிவசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்திருந்தார். (இதழ் 37, ஏப் 2004, பக் 7) தற்போது ஆலய உரிமையாளரின் செயலாளர் இராசலிங்கம் இத்தீர்ப்புப் பற்றி குறிப்பிடும் போது ஆலயத்துக்கு வரும் பெண்கள் ஐயர்மாரை மயக்க வருவது போல் கருத்து கூறுகிறார். இந்தத் தீர்ப்பில் அப்படி ஒன்றும் அதிசயம் இல்லை. பல வழக்குகளில் பெண்கள் தங்கள் பூசை செய்யும் ஐயர்மாரைப் பற்றி கதைகளைக் கட்டி அவர்களுக்கு பிரச்சினைகளை உண்டு பண்ணுகின்றனர் என்று கூறுகிறார் இராசலிங்கம்.

அவர் மேலும் தெரிவிக்கையில் குருக்கள் தவறாக குற்றம்சாட்டப்பட்டு இருக்கிறார். இந்தப் பெண் தனிப்பட்ட முறையில் உள்ள கோபத்தை குருக்களுக்கு எதிராக காட்டி உள்ளதாகவே சனங்கள் எல்லொரும் நினைக்கின்றனர். இந்த வழக்கு நீதிமன்றத்துக்கு சென்றிருக்கவே தேவையில்லை. சட்டவியல் எங்களுக்கு தவறிழைத்துவிட்டது. அவர்கள் சரியான முறையில் இதனை விசாரித்து இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## ஆலயத்திற்குள் நுழையும் பெண்கள் கவனத்துக்கு!!!

தெற்கு இலண்டன் ஆலயங்களில் பெண்கள் கவனத்துக்கு!!! என்று ஆடை ஒழுக்கவிதியை அறிமுகப்படுத்த வேண்டும் என்கிறார் கற்பழித்த குருக்களுக்கு குரல்கொடுக்கும் சிவகந்தகிரி ஆலய உறுப்பினர் இராசலிங்கம். சில பெண்கள் கால்தெரிய ஆடை அணிந்து வருவதாகவும் சிலர் தவறான முறையில் நடந்துகொள்வதாகவும் இராசலிங்கம் ஆலயத்துக்கு வரும் பெண்கள் பற்றி குற்றம்சுமத்துகிறார். தங்கள் ஆலயத்தில் இது தொடர்பாக தற்போது சில விதிமுறைகளைக் கொண்டுவர உள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார். புவனேஸ்வரியும் கோயிலுக்கு வரலாம் என்று குறிப்பிடும் இராசலிங்கம் அவர் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

Thompson & Co.
Solicitors
Legal Aid for
* Immigration
* Employment
* Criminal Law
* Also Property
& Family Law
Tel: 020 8767 5005
48A Tooting High Street
(Opposite Broadway Station)
London SW17 0RG
Email: mail@thompsonlaw.co.uk

K.Ravi Solicitors
Solicitors & Administrators of Oaths
* Immigration
* Conveyancing
Both Residential & Commercial
* Welfare Matters
* Civil Litigation
* Landlord & Tenant Disputes
Call 020 8866 7800
Suite 2, First Floor (above Abbey National),
410-420 Rayners Lane, Pinner, Middx. HA5 5DY

SRIHARANS SOLICITORS
AUTHORISED TO ADMINISTER OATH
Professional service for freedom and justice under the Human Rights Act of UK and with European Convention of Human Rights
(P) 020 8843 9977
020 8843 9974 (3 lines)
223 The Broadway
Southall, Middx.

IN TROUBLE WITH THE POLICE
24 Hr. POLICE STATION ATTENDANCE
FREE INITIAL INTERVIEW
ANY CASE CONSIDERED
Mehra & Co.
Solicitors
367 High Road Wembley
020 8902 1900
Mobile 07956 528 927
07956 463 665

To Know your Birth Star
contact 020 8905 7775,
020 8952 5677

MARKANDAN & CO SOLICITORS
We specialise in
○ குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
○ விவாக விண்ணப்பங்கள்
○ அகதி விண்ணப்பங்கள்
○ 10 வருட அல்லது 7 வருட வதிவிட நிலைமை விண்ணப்பங்கள்
○ பிரித்தானிய பிரஜாவுரிமை
○ வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்
○ வீடு/மனை/வியாபார ஸ்தலங்கள் வாங்க விற்க குத்தகைக்கு விடுதல் சம்பந்தமான விடயங்கள்
○ விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் - No Win - No Fee அடிப்படையில்
○ பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்கான ஆங்கில மொழித் தேர்ச்சி தகுதிச் சான்றிதழ்
01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானியா அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந் நாட்டில் திருமணம் புரியவிரும்பின் நீங்கள் பிரித்தானியா உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
M
TEL : 0208 514 8188/07946010022
THAMIL HOUSE, 720 Romford Road, Manor Park, London, E12 6BT

Graphical Impact
Signs ~ Designs ~ Graphics
www.graphicalimpact.com
61 Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel 020 8925 2333 Fax 020 8925 2332

# லண்டனில் வெளிவரும் பத்திரிகைகள் : எதிரொலி

### எழுதுபவர் : வி அருட்செல்வன் (ரூற்றிங்)

லண்டனில் வெளிவரும் தமிழ் பத்திரிகைகள், சஞ்சிகைகள் குறித்து ஆய்வு ஒன்று அண்மையில் இடம்பெற்றது. ஆளுக்காள் முதுகு சொறிந்து ஆளுக்காள் வரிசையாக இருந்து பேன் பார்க்கும் நிகழ்ச்சிகளை தவிர்த்து ஏதோ வித்தியாசமான கண்ணோட்டத்தில் இந்நிகழ்ச்சி அமைந்திருக்கும் என எண்ணி ப்பெரவரி 15 அன்று தீபம் தொலைக்காட்சியின் எதிரொலி நிகழ்ச்சியைப் பார்க்க ஆவலாக அமர்ந்தேன்.

பத்திரிகை ஆசிரியர், எழுத்தாளர் பழம் சாப்பிட்டு கொட்டை போட்டவர் என்ற ஆலாத்திகளுடன் Subject Specialist ஆக மகாலிங்கசிவம் அவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டார். வந்ததும் வராததுமாக இங்கு எல்லோரும் பத்திரிகை நடத்துகிறார்கள், கண்டவர்கள் எல்லாம் எழுதுகிறார்கள், எழுதுவதற்கு அல்லது பத்திரிகை நடத்துவதற்கு எல்லாம் ஒரு தகுதி வேண்டும், ஆளுமை வேண்டும், படிப்பறிவு வேண்டும் என்று அடுக்கிக் கொண்டே போனார் மகாலிங்கசிவம் (மாலி) அவர்கள். இந்நிகழ்ச்சியை தீபத்தில் தொகுத்து வழங்கிய உதயகுமார் கண்ணன் அவர்கள், மாலி அவர்கள் ஏதோ பெரிய தத்துவத்தையே அவிட்டுவிட்டதைப் போல் மிகவும் சொக்கிப் போய்விட்டார். மலி அவர்கள் வழமை போல் தன்னைவிட்டால் இந்த தமிழ் உலகத்தில் பத்திரிகைகளை தரமாக கொண்டுவரவே முடியாது என்ற தோரணையில் இழுத்துவிட்டார்.

இதில் விடயம் என்னவென்றால் மாலி அவர்கள் லண்டனில் தொடங்கிய பத்திரிகைகள் எல்லாம் ஒரு வருடம் கூட நின்று பிடிக்கவில்லை. அதற்கும் மேலாக மாலி அவர்கள் கடந்த 5 வருடமாக ஏதும் பத்திரிகைகளை வெளிவிடவும் இல்லை ஏதும் பத்திரிகைகளுக்கு எழுதியதாகவும் தெரியவில்லை. ஏதோ மு நித்தியானந்தன் (தீபம் செய்திப் பொறுப்பாளர்) அவர்களுக்கு நண்பர் என்ற ரீதியில் நித்தியானந்தனின் சிபாரிசில் அவர் சம்பந்தப்பட்ட தொலைக்காட்சியிலும் புத்தக வெளியீடுகளிலும் வந்து போகிறார்.

மாலி அவர்கள் ஆங்காங்கே வந்து போய் கருத்து சொல்வதில் எமக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் லண்டனில் இரவு பகலாக கஷ்டப்பட்டு முதலாளிகளினதும் சட்டத்தரணிகளினதும் காலைப்பிடித்து கையைப்பிடித்து (சில வேளைகளில் காக்காய் பிடித்து) தமக்கு எதுவித லாபமுமில்லாமல் வெளியீடுகளை வெளிக்கொண்டு வரும் பல தமிழ் பத்திரிகையாளர்களையும் எழுத்தாளர்களையும் அவர் கொச்சைப்படுத்தி இருக்கக்கூடாது. நாளிகை, அஞ்சல், தமிழோசை என்று மாலி தொடங்கிவிட்டு மூடிய வெளியீடுகள் பல இருக்கின்றன. இவை எல்லாம் இழுத்து மூடப்படுவதற்குரிய காரணம் குறுகிய மனப்பாண்மையும் மேலோங்கிய தன்மையுமே. எனக்குத் தான் எல்லாம் தெரியும், நான் ஈழநாட்டில் பட்டம் விட்டவன், அமிர்தலிங்கத்திற்கு சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொடுத்தவன் என்ற அவியல் எல்லாம் யதார்த்தமாக பயன் அளிக்காது.

ஒரு பத்திரிகையை வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்றால் பலருடன் இணைந்து பணிபுரியும் தன்மையும், மற்றவர்களின் ஆற்றல்களை மதிக்கும் மன முதிர்ச்சியும் வேண்டும். லண்டனில் முதன்முதல் ஆரம்பமான தமிழன் பத்திரிகையில் ஒரு இதழில் மட்டும் புதினம் ராஜகோபாலுடன் மாலி இணைந்து நின்றார். இரண்டாவது இதழ் வெளிவர முன்பே மாலி வெளியேறிவிட்டார். பின்னர் ராஜகோபால் புதினம் பத்திரிகையை தொடங்கினார். ஏட்டிக்குப் போட்டியாக மாலி அவர்கள் அஞ்சல் என்ற பத்திரிகையை தொடங்கினார். ஒரு தமிழ்க் கடையில் ஒருவர் சென்று தம்பி புதினம் எப்போது வரும் என்று கேட்டார். அதற்கு கடைக்காரர் அண்ண ஏறக்குறைய சராசரியாக மாதத்திற்கொரு முறை வெளிவரும் என்றிருக்கிறார். கடைக்கு வந்தவரோ விட்டபாடில்லை. தம்பி அஞ்சல் பத்திரிகை எப்போது வரும் என்று கேட்க கடைக்காரர் சொன்னாராம். புதினம் வந்தால் பின்னர் அஞ்சல் வரும் என்று.

தீபம் நிகழ்ச்சிகளை தயாரிக்கும் போது சற்று அவதானமும் சில ஆய்வுகளும் செய்ய வேண்டும். இன்று லண்டனில் தமிழ் ரைம்ஸ் 25 ஆண்டுகளுக்கு மேலாக வெளிவருகின்றது. புதினம் 15 வருடங்களாக தொடர்ச்சியாக வெளிவருகிறது. உதயன் பத்திரிகையும் தேசம் சஞ்சிகையும் 8 வருடங்களாக வெளிவருகின்றது. வடலி நான் அறிய 8 வருடமாக வெளிவருகிறது. புதிதாக வெளிவரும் ஒருபேப்பர் ஒரு வருடத்திற்கு குறைவாக இருந்தாலும் தொடர்ச்சியாக வெளிவருகின்றது. சமீபத்தில் கொஞ்சக் காலமாக நிருபம் வெளிவந்தது. இப்படியெல்லாம் ஊரில் எத்தனையோ விடயங்கள் நடக்க 5 வருடத்திற்கு முன் காலமான பத்திரிகைகளை கொண்டு வந்து சேலைன் ஏற்றுவதில் என்னைய்யா பிரயோசனம் இருக்கின்றது.

பத்திரிகை நடத்துவதற்கு இப்போது பலதரப்பட்ட அறிவும் அனுபவமும் தேவைப்படுகின்றது. இதைவிட சந்தைப்படுத்தல், சட்டம், கம்பியூட்டர், Accounts என அடுக்கிக் கோண்டே போகலாம். எழுதத்தெரிந்த ஒருவர் தனியாக ஒரு மூலையில் இருந்து பத்திரிகை அடிக்கலாம் என்ற காலம் மாறிப்போய்விட்டது. இன்று பலதரப்பட்ட அனுபவசாலிகளின் தொடர்பும் ஈடுபாடும் இருந்தால் மட்டுமே பத்திரிகைளை வெற்றிகரமாக நடத்த முடியும். எழுத்துத்திறமை மட்டும் இருந்தால் மொட்டைக் கடிதமும் நோட்டீசும் தான் அடிக்கலாம்.

இந்நிகழ்ச்சியில் இந்நாட்டில் கடந்த 20 ஆண்டுகளாக தொடர்ச்சியாக சோர்வு இன்றி பத்திரிகை நடத்திவரும் ராஜகோபால் (புதினம் ஆசிரியர்) போன்ற அனுபவசாலியையும் புதிதாக பத்திரிகைத்துறையில் ஈடுபடும் ஒருவரையும் (ஒரு பேப்பர்) அழைத்து ஆய்வை மேற்கொண்டிருக்கலாம்.

( தொடர்ச்சி 15ம் பக்கத்தில் )

# அம்மன் ஆலயத் தேர்தல்

ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய செயற்குழுவுக்கான தேர்தல் மே 15க்கு ஒத்திவைக்கப்பட்டு உள்ளது. மார்ச் 27ல் இடம்பெற இருந்த தேர்தல் ஏப்ரல் 10க்கு என திகதி அறிவிக்கப்பட்டது. வாக்காளர் பட்டியலை தயாரிப்பதில் வேட்பாளர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினையே தேர்தல் பிற்போடப்படுவதற்குக் காரணம். இத்தேர்தலில் ஆலயத்தின் தற்போதைய செயற்குழுத் தலைவர் கருணலிங்கத்துக்கு எதிராக யோகநாதன் என்பவரை எதிரணியினர் நிறுத்தி உள்ளனர். 6 இடங்களுக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளது. வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதில் பிரச்சினை கிளப்பிய எதிரணி வேட்பாளர்கள், நீதிமன்றம் சென்றனர். நீதிமன்றத்தில் இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் வாக்காளர் பட்டியல் ஒன்று தயாரிக்க ஒத்துக் கொள்ளப்பட்டு உள்ளது.

ஆலயத்தின் ஆண்டுச் சந்தா 36 பவுண்களை செலுத்திய உறுப்பினர்களே வாக்களிக்க முடியும் என எதிரணி தெரிவிக்கின்றது. அவ்வாறு சந்தா செலுத்தியவர்கள் 125 பேர்வரையே இருப்பார்கள். ஆனால் பல்வேறு காரணங்களாலும் முழுமையான சந்தாவை செலுத்தாமல் ஒரு சிறுபகுதி சந்தாவைச் செலுத்தி உள்ளவர்களின் எண்ணிக்கை 600க்கும் அதிகமாக உள்ளது. மேலும் முழுமையாக சந்தா செலுத்திய சிறு தொகையான ஆரம்ப கால உறுப்பினர்கள் தற்போதைய கருணைலிங்கத்தின் நிர்வாகத்துக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்பதால் அவர்களை மட்டுமே வாக்களிக்க அனுமதிப்பதன் மூலம் நிர்வாகத்தைக் கைப்பற்ற எதிரணி தீவிரமாக இயங்குகிறது.

ஆனால் கருணைலிங்கத்துக்கு புதிய உறுப்பினர்களிடம் மிகுந்த ஆதரவு காணப்படுகிறது. நிர்வாகத்தை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள புதிய உறுப்பினர்களை வாக்களிக்க வைக்க வேண்டிய கட்டாயத்தில் கருணைலிங்கம் உள்ளார்.
அங்கத்தவர்கள் சுனாமிக்கு வாரி வழங்கி இருந்ததால் அவர்களிடம் மீண்டும் பணத்தைக் கேட்டு அழுத்தம் கொடுப்பது அழகல்ல என்றும் அதனால் சந்தாவில் ஒரு பகுதியைச் செலுத்தியவர்களையும் வாக்களிக்க அனுமதிப்பது என தற்போதைய நிர்வாகம் முடிவு செய்தது. எதிரணியில் போட்டியிடும் யோகநாதன், ராமச்சந்திரன் ஆகியோர் செயற்குழுவின் அந்த முடிவை எதிர்த்து நீதிமன்றம் சென்றிருந்தனர்.

மே மாதம் இடம்பெறும் தேர்தலிலும் கருணைலிங்கத்தின பலம் உறுதியாகவே தென்படுகிறது. தாயகத்துக்கு வாரி வழங்கும் ஆலயமாக ஈலிங் அம்மன் ஆலயம் திகழ்வதுடன் தாயகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அவ்வாலயம் தனது பெயரைப் பதித்து உள்ளது. மேலும் எதிரணியில் நிற்பவர்கள் செயற்திட்டங்கள் எதையும் முன் வைக்காமல் வெறும் குற்றச்சாட்டுகளை முன் வைத்தே தேர்தலில் இறங்கி உள்ளனர். எதிரணியினர் கடந்த தேர்தல்களில் விட்டதை இத்தடவை பிடிக்க வேண்டும் என்பதில் தீவி ரமாக உள்ளனர். தேர்தல் முடிவுகள் அடுத்த உதயன் இதழில் வெளிவரும்.

# தீர்ப்புக்குப் பின் பாலியல் வல்லுறவுக்குட்பட்ட பெண் பேசுகிறார்

குரொய்டன் கிறவுண் கோட்டில் குருக்களின் குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவர் குரொய்டன் உள்ளூர் பத்திரிகை - த அட்வடைசர்க்கு அளித்த பேட்டியின் சாரம்சம் இங்கே தரப்படுகிறது.

(தொலைபேசியில் அழுதவாறு அமைதியாக ... ) நான் அதிகம் பேச விரும்பவில்லை. கடந்த இரு ஆண்டுகளாக நான் சிறையில் இருந்தது போலவே உணர்ந்தேன். இப்போது எனக்கு விடுதலை கிடைத்துவிட்டது. ஆனால் நான் எங்கு சேர வேண்டுமோ அதாவது எனது சமூகத்திடம் போய்ச் சேருவதற்கு எனக்கு சுதந்திரமில்லை. எனக்குச் சொந்தமானவர்களே எனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துள்ளார்கள். இப்போது குருக்களின் குற்றம் நிரூபிக்கப்பட்டு உள்ளது. அவர்கள் குருக்களுக்காக வருந்துகிறார்கள்.
அவர்கள் என்னை தரக் குறைவாகவே பார்க்கிறார்கள். நாங்கள் தான் குற்றம் இழைத்தது போல் சமூகம் எங்களைப் பார்க்க வைத்துள்ளது. எங்கள் வாயை மூடிக்கொண்டிருக்கும் படி சமூகம் எங்களை ஆக்கி உள்ளது.

நான் விவாகரத்து செய்தவள். அதனால் எனது சமூகத்துக்கு ஏற்கனவே என்னைப் பிடிக்கவில்லை. அவர்கள் விவாகரத்தானவர்களை இரண்டாம் தரப் பிரஜையாகவே பார்க்கிறார்கள். எனக்கு எந்த ஆதரவும் கிடைக்காது என்று அந்தக் குருக்களுக்குத் தெரியும் அதனால் தான் நான் இலேசான இலக்காக இருந்திருக்கிறேன்.

சிறிதுகாலம் நான் கோயிலுக்குப் போவதை நிறுத்தினேன். நடந்ததை மறந்து எனது வாழ்க்கையை வாழ எண்ணினேன். ஆனால் நான் மீண்டும் கோயிலுக்கு வராவிட்டால் சனங்கள் சந்தேகப்படுவார்கள் என்று குருக்கள் என்னைப் பயமுறுத்தினார். குருக்கள் என்னை எப்போதும் சிரிக்கும் படி கேட்பார். நான் திரும்பியும் கோயிலுக்கு வந்தால் சனங்கள் நான் கற்பழிக்கப்பட்டிருக்க மாட்டேன் என நினைப்பார்கள்.
குருக்கள் எனக்கு போன் செய்யத் தொடங்கினார். நான் எனது நம்பரை மாற்றினேன். ஆனால் குருக்கள் அதனை கண்டுபிடித்துவிட்டார்.
இரண்டாம் தரம் பாலியல் வல்லுற வுக்குட்பின் நான் கர்ப்பமடைந்தேன். அதனால் கருக்கலைப்புச் செய்யத் தீர்மானித்தேன். இருந்தும் பொலிசாரிடம் சென்று முறையிடும் தைரியம் 18 மாதங்களின் பின்னரே எனக்கு வந்தது. அதுவும் எனது வாழ்க்கையை நரகமாக்கும் குருக்களுக்கு எதிராக இன்ஜங்சன் எடுக்கவே பொலிசாரிடம் சென்றேன். ஆனால் பொலிசார் காரணத்தைக் கேட்டு அறிந்ததும் என்னை குற்றத்தை பதிவு செய்ய சம்மதிக்க வைத்தனர்.

குருக்கள் என்னுடன் நிற்கப் போவதில்லை எனக்குத் தெரியும் அவர் மற்றைய பெண்களையும் கற்பழிப்பார். என்னை யாரும் காப்பாற்றவில்லை. ஆனால் குறைந்தபட்சம் கோயிலுக்குப் போகும் மற்றப் பெண்களை நான் காப்பாற்றி உள்ளேன்.

அவருக்கு இளம் பெண்களில் ஆர்வம். 24 - 25 வயது திருமணமாகாத பெண்கள். அவர்களுக்கு ஒரு எதிர்காலம் இருக்கிறது. அவர்களுக்காக நான் ஏதாவது செய்ய வேண்டும். அதனால் தான் நான் பொலிசார் குற்றத்தை பதிய சம்மதித்தேன். இது எனது வாழ்க்கையை சீரழிக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் ஏதாவது செய்தாக வேண்டும். நான் இதற்காக மனம் வருந்தப் போவதில்லை.

நான் அமைதியாக இருக்கவே விரும்பினேன். ஆனால் அந்தக் குருக்கள் என்னை என்பாட்டில் இருக்க விடவில்லை. அவருக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டார். நான் ஒன்றும் செய்யப் போவதில்லை என்று அவருக்குத் தெரியும். ஏன் அவரால் என்னை என்பாட்டில் இருக்கவிட முடியவில்லை.

இது இங்கிலாந்தில் நடந்ததில் எனக்கு மகிழ்ச்சி. இது எங்கள் நாட்டில் நடந்து இருந்தால் எனக்கு நிற்பதற்கே சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. இந்த நீதிமன்றம் முழுவதும் எங்களது சனங்கள் இருந்திருந்தால் நான் எங்கும் போயிருக்க முடியாது.

நான் இதற்கூடாக போக முடியும் என்று எண்ணவில்லை. ஆனால் போய்விட்டேன். இதுவரை குருக்கள் எனது முழு வாழ்க்கையையும் கட்டுப்படுத்தினார். ஆனால் இப்போது அதனை நான் எனது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொண்டேன். எனக்கு நீதி கிடைத்துள்ளது. தீர்ப்பு கிடைத்தபோது எனக்கு ஏற்பட்ட உணர்வை சொல்லத் தெரியவில்லை. அந்தக் கடவுளுக்கே நன்றி கூறுகிறேன். சனங்கள் இப்போது என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்குப் பிரச்சினையில்லை.

என்று கூறி தனது வாழ்க்கையின் மிகக் கடினமான வரலாற்றை கூறி முடித்தார் புவனேஸ்வரி. சமூகத்தில் பெண்கள்மீது மட்டும் சுமத்தப்படும் ஒழுக்கவியலும் கட்டுப்பாடும் அவர்கள் பாதிக்கப்பட்ட நிலையிலும் கூட சமூகம் அவர்களைக் குற்றவாளியாகக் காணுகின்ற ஒரு போக்கை புவனேஸ்வரியின் வார்த்தைகள் தெளிவாகக் காட்டுகிறது.



தண்டனை பெற்ற
சோமநாதக் குருக்கள்

# லண்டன் தமிழ் நிலைய நிகழ்வு சோபையிழந்தது

இலண்டன் தமிழ் நிலையத்தின் கலாச்சார மாலை ஏப்ரல் 9ல் லோகன் மண்டபத்தில் இடம்பெற்றது. வழமை போல் இம்முறையும் மாணவர்கள் பங்கு கொண்ட பல்வேறு நுண்கலை நிகழ்வுகள் இடம்பெற்றது. நடனம், இசை, கும்மி, கோலாட்டம், பேச்சு, திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி நாடகம் என்பன பள்ளி மாணவர்களால் அரங்கேற்றப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றும் வகையில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆண்டுதோறும் சிறப்பாக இடம்பெறும் கலாச்சாரமாலை வழமைக்கு மாறாக இம்முறை சோபையிழந்து இருந்தது. பார்வையாளர்களின் வரவிலும் வீழ்ச்சி காணப்பட்டது. இதற்கு பல்வேறு காரணிகள் கூறப்படுகிறது. குறிப்பாக நிலையத்தின் நிர்வாகத்துக்கும் நிகழ்ச்சியின் வெற்றிக்கும் காரணமான முக்கிய ஒருவர் நிகழ்வில் கலந்து கொள்ளாதது நிகழ்ச்சி ஒழுங்கமைப்பை மிகவும் பாதித்திருந்தது. பாடசாலையின் அதிபர் டொக்டர் இ நித்தியானந்தன் முக்கிய பங்கெடுத்தலில் இருந்து விலகி இருந்ததாக தெரியவருகிறது.

மேலும் குறிப்பாக பாடசாலையின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த சீவரத்தினம் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை. அண்மையில் தமிழ் நிலையத்துக்குள் சிவயோகம் தலைவர் சீவரத்தினத்தின் வரவும் ஈழபதீஸ்வரர் ஆலயத்தை பலவந்தமாகக் கைப்பற்றியதில் சீவரத்தினத்தின் தொடர்பும் இலண்டன் தமிழ் சமூகத்திடையே ஒரு அதிர்வலையை ஏற்படுத்தி இருந்தது. இதன் தாக்கம் தமிழ் நிலையத்தின் கலாச்சார மாலையில் வெளிப்பட்டதாகக் கூறுகிறார் நிகழ்வுக்குச் சென்றிருந்த தர்மலிங்கம் சிவானந்தன்.

# பிரித்தானியத் தமிழருக்கு கனடாவில் விருது

கனேடிய மண்ணில் வெளிவந்துகொண்டிருக்கும் தமிழர் தகவல் மாத சஞ்சிகையின் பதினான்காவது ஆண்டு பூர்த்தி வைபவம் பெப்ரவரி 13ல் இடம்பெற்றது. வழமை போலவே இம்முறையும் தமிழர் தகவல் ஆண்டு மலர் வெளியீடு, தமிழர் தகவல் வருடாந்த விருது வழங்கும் வைபவத்துடன் இடம்பெற்றிருந்தது. சமூகப்பணி, கல்வி - ஆய்வுப்பணி, தொழில்துறைசார் பணி, கலைப்பணி ஆகியவைகளுக்காக கனடாவில் வாழும் எட்டு பிரமுகர்கள் தமிழர் தகவல் வருடாந்த விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். கல்வித் திறமை, கலைத்துறை, தொண்டர்சேவை, விளையாட்டு, தேசிய இளைஞர் சேவை, ஆகியவைகளுக்காக அடையாளம் காணப்பெற்றுள்ள நான்கு மாணவ மணிகள், தமிழர் தகவல் மாணவர் விருதுகளைப் பெற்றனர்.



நீண்டகால சமூக பொதுப் பணிகளுக்காகவும் கலை இலக்கிய பங்களிப்புகளுக்காகவும் தொழில்துறைசார் மகத்துவத்துக்காகவும் புகழிடநாடுகளில் வாழும் இரு பிரமுகர்கள் தமிழர் தகவல் சிறப்பு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். லண்டனில் வாழும் நூலகவியலாளர் என் செல்வராஜா, நூலகவியல் வெளியீட்டுத்துறை மற்றும் பிரசுரப் பணிகளுக்கான விருதினைப் பெற்றார்.

(படத்தில் நூலகவியலாளர் செல்வராஜா தனது விருதினைப் பெற்றுக் கொள்கிறார்.)

தமிழர் தகவல் விருதுபெற்ற பதினான்கு பிரமுகர்களுக்கும் பட்டயத்துடன், தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டன. இத்துடன் இந்நிகழ்வின் சிறப்பம்சம் என்னவென்றால், ஒரு சிறுபான்மை இனத்தின் விருதுவழங்கலில் கனடிய அரசின் பிரதிநிதிகளும் பங்குகொண்டு தாமும் அந்த விருதாளர்களை அங்கீகரித்து கனடிய அரசின் சார்பில் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தமையாகும். அந்த வகையில் 14வது ஆண்டு விருது வழங்கப்பட்டவர்களுக்கு, கனடாவின் National Democratic Party யின் தலைவர் Jack Layton அவர்களும், மாகாண அரசின் ரொரன்ரோ மத்தி - ரோஸ்டேல் பிரதிநிதி ஜோர்ஜ் ஸ்மித்தர்மான் எம்.பீ அவர்களும், டொன் வலி கிழக்கின் பாராளுமன்ற உறுப்பினரான ஜஸ்மின் ரட்டன்சி அவர்களும் தத்தமது அரசுகளின் சார்பில் சான்றிதழ்களையும் வழங்கி விருதாளர்களை கௌரவப்படுத்தினார்கள்.

## ஈர விழிகள் :

சுனாமி அனர்த்தத்தை வெளிப்படுத்தும் பாடல்களின் இசைத்தட்டு வெளியீட்டு விழா ஏப்ரல் 30ல் லூசியம் சிவன் கோவில் மண்டபத்தில் மாலை ஏழு மணிக்கு இடம்பெறவுள்ளது. ஆனந்தப்பா கந்தப்பு தயாரித்துள்ள இவ்விசைப் பாடல்களை சம்பத் இசைக் கோர்ப்புச் செய்துள்ளார். இந்நிகழ்வில் மு நித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

## அரசனின் புத்தாடை :




அரசனின் புத்தாடை என்ற சிறுவர் நாடகம் வெம்பிளி கொப்லண்ட் மண்டபத்தில் ஏப்ரல் 23ல் மேடையேற உள்ளது. பிறன்ற் தமிழ்சங்கத்தின் புத்தாண்டு விழா நிகழ்விலேயே இம்மேடையேற்றம் நிகழவுள்ளது. தமிழ் அவைக்காற்றுக் கழகத்தின் நாடகப்பள்ளி மாணவர்கள் நடிக்கும் இந்நாடகத்தினை க பாலேந்திரா நெறியாள்கை செய்துள்ளார். சிறுவர்களுக்கு சுயசிந்தனையின் முக்கியத்துவத்தை உணர்த்த நகைச்சுவை அம்சங்களுடன் இச்சிறுவர் நாடகம் தயாரிக்கப்பட்டு உள்ளது. இந்நாடகத்துக்கு பல முன்னணி இசைக் கலைஞர்கள் இசை வழங்குகின்றனர்.



## சிறுகதைத் தொகுதி வெளியீடு :

பூபாளராகங்கள் 2004 சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா பெப்ரவரி 26ல் நடைபெற்றது. பூபாளராகங்கள் விழாக்குழுவும் தினக்குரல் பத்திரிகையும் இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற சிறுகதைகள் தொகுத்து வழங்கப்பட்டது. கொம்மாந்துறை கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் சங்க நிகழ்வாக இடம்பெறும் பூபாளராகங்கள் இலண்டனில் மிகவும் பேசப்பட்ட ஒரு நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் வரும் நாட்கள் :



மு புஸ்பராஜனின் (படம்) மீண்டும் வரும் நாட்கள் கவிதைத் தொகுதி வெளியீடு மு நித்தியானந்தனின் தலைமையில் ஏப்ரல் 16ல் இடம்பெற்றது. யமுனா ராஜேந்திரன், நளாயினி இந்திரன், க கிருஷ்ணராஜா, ஏ செபஸ்தியன் ஆகியோர் நூல் விமர்சனம் செய்தனர். அண்மையில் உருவான விம்பம் அமைப்பு இந்நூல் வெளியீட்டு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

## கலாச்சார மாலை :

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர்களின் கலாச்சார மாலையும் விருந்தோம்பலும் ஏப்ரல் 16 வெம்பிளியில் நடைபெற்றது. பரதநாட்டியம், வாத்திய விருந்து, இன்னிசைக் கச்சேரி என பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றது. கல்லூரியின் முன்னாள் அதிபர் கெ சந்திரசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார்.

# லண்டனில் மலையகம் கலந்துரையாடல்

மலையகத் தொழிலாளர்கள் பற்றிய கலந்துரையாடல் மார்ச் 24ல் கெண்டிஸ் ரவுனில் இடம்பெற்றது. சவுத் ஏசியன் சொலிடாரிட்டி குறூப் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் அரசியல் ஆர்வலரும் தோட்டத் தொழில்துறை ஊடகவியலாளருமான பி முத்துலிங்கம் கலந்து கொண்டார். இவர் இலங்கையில் உள்ள சமூக அபிவிருத்திக்கான நிலையத்துடன் இணைந்து பணியாற்றுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிய அபிவிருத்திவங்கி தேயிலைத் தொழிலாளர்களுக்கு புதிய தொழில் கட்டமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்த உள்ளது. இக்கட்டமைப்பானது தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போதுள்ள கொஞ்சநஞ்ச தொழிற்சங்க உரிமைகளையும் பறித்து அவர்களை மேலும் சுரண்டுவதற்கு வழிவகுப்பதாக முத்துலிங்கம் குறிப்பிட்டார். இப்புதிய திட்டம் நடைமுறைக்கு வந்தால் தொழிலாளர் சட்டங்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளும் இல்லாமல் போய்விடும் என முத்துலிங்கம் அச்சம் தெரிவித்தார்.

## வாணி பைன் ஆர்ட்ஸ் :

லண்டன் வாணி நுண்கலைக் குழு பல்வேறு நுண்கலை மேடை நிகழ்வுகளை செய்து வருகின்றது. தமிழ் சமூகத்துடன் மட்டும் மட்டுப்படுத்தாமல் பெரும்பான்மைச் சமூகத்துக்குமாக இந்நிகழ்வுகள் மேடையேற்றப்படுகிறது. தமிழகத்தில் இருந்து தேர்ச்சி பெற்ற கலைஞர்களை தனியாகவும் குழுவாகவும் வரவழைத்து இந்நிகழ்வுகள் நடத்தப்படுகிறது. அவ்வாறு வரும் கலைஞர்களைக் கொண்டு இங்கு நுண்கலைப் பயிற்சிப்பட்டறைகளும் மேற்கொள்ளப்படுகிறது. மேலதிக விபரங்களை அவர்களுடைய இணையத் தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். (www.vanifinearts.com)

## லண்டனில் வெளிவரும் பத்திரிகைகள் : எதிரொலி

(14ம் பக்கத் தொடர்ச்சி )

அல்லது இவர்களுடன் மாலியையும் இணைத்து 20 வருடமாக பத்திரிகை நடாத்தி வருபவர், ஒரு வருடமாக பத்திரிகை நடத்தும் புதியவர், 6 வருடத்திற்கு முன் பத்திரிகை நடாத்தியவர் என மூவரையும் இணைத்து முக்கோணத்தில் இந்நிகழ்ச்சியை நடத்தி இருக்கலாம். மாலி அவர்களும் பாவம் நல்ல மனுசன் தான். பத்திரிகைத் துறையில இருந்து ஓய்வுபெற்றாலும் நல்ல சுறுசுறுப்பும் ஆர்வமும் அவருக்கு உண்டு.

தீபம் தொலைக்காட்சி இன்று ஈழத் தமிழர்களின் முன்னணித் தொலைக்காட்சி. எவ்வித அரசியல், மத வேறுபாடும் இன்றி தனித்துவமாக நின்று நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது. எதிரொலி போன்ற தரமான நிகழ்ச்சிகள் மேலும் மெருகூட்டப்பட வேண்டும். தமிழ் தொலைக்காட்சியின் வளர்ச்சியில் ஆர்வமுடையவன் என்ற வகையில் இவ்விமர்சனத்தை முன்வைத்துள்ளேன்.

# ஒரே மேடையில் கருவின் மூன்று படைப்புகள்



கருணாணந்தராஜாவின் மூன்று படைப்புகள் ஏப்ரல் 9ல் ஈலிங் ககனதுர்க்கை அம்மன் ஆலயத்தில் வெளியிடப்பட்டது.

வள்ளுவன்காதல், ஈழத்தாயின் சபதம், குயில் பாட்டின் தத்துவங்கள் ஆகிய மூன்று நூல்களே அங்கு வெளியிடப்பட்டது. மரபுக் கவிஞரான கருணாணந்தராஜா அகதிகள் நடவடிக்கைக் குழுவின் இணைப்பாளராக கடந்த சில ஆண்டுகளாகப் பணியபற்றி வருகிறார். கவிதை படைப்பதுடன் இரகசிய சிநேகம் படத்தில் இவர் முக்கிய பாத்திரமேற்று நடித்தது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு பேராசிரியர் கோபன் மகாதேவா தலைமைதாங்கினார். மூன்று நூல்களும் மூன்று குழுக்களாக ஆய்வு செய்யப்பட்டது. விமர்சகர்கள் கருணாணந்தராஜாவின் படைப்புகளைப் பாராட்டினர். (படம் : பேராசிரியர் கோபன் மகாதேவா, நூலாசிரியர் கரு, விமர்சகர் கீர்த்தி )

# Community's best friend UDHAYAN


## wood floor showroom

21 North Parade, Mollison Way, Edgware, Middlesex HA8 5QH
Tel: 020 8951 4395/4495 Fax: 020 8951 4251

HERE ARE SOME OF OUR SPECIAL OFFERS FOR 2005

An Unbeatable Price On Engineered Wood

COME AND SEE FOR YOURSELF

வியாபாரம் பெருக்க
விளம்பரம் செய்யுங்கள்.
அதனை உதயனில் செய்யுங்கள்.

## LONDON CELLULAR - 020 8459 6914

500 Minutes
Anytime - Any Network
100 Texts Messages
3 months Free Insurance
LG U8138 Phone Free
Free Accessories
99p
per month
1st 6 months

100 High Road, Willesden Green, London NW10

## AIR SAVERS TRAVEL

0208 540 2226

| | | | |
|---|---|---|---|
| Colombo | £320 | Madras | £400 |
| Toronto | £250 | Australia | £475 |
| Bombay | £315 | Singapore | £360 |
| Kuala Lum | £370 | New York | £135 |
| Trichy | £415 | Bangalore | £415 |

*Conditions Apply
All Major Credit Cards Accepted

## SAMS Accounting Services Ltd.

* Audit & Accountancy
* Prepare Monthly Management Accounts
* Tax Planning & Refund
* Specialists in Solicitor Accounting
* SAGE Line 50/Payroll

Call Mrs. Sumathi Jankan on
020 8509 8484
077 1557 6989

Email: info@samsaccounting.co.uk
92a Forest Road, Walthamstow, London E17 6JQ

## FREEHOLD CASH AND CARRY FOR SALE

The relocation of a well established London Cash and Carry to larger premises, could make available for sale the freehold of their existing 40,000 sq ft warehouse to the right party.
For further details please send, in confidence, your name, address and contact details, to either:
FAX: 0208 3572592
or e-mail: businessforsale@hotmail.com

0208905 7775



## TRAVEL (UK) LTD

Worldwide Travel Agents
485 Yeading Lane, Northolt, Middlesex UB5 6LN London (U.K)
Tel: 020 8841 8842
Fax: 020 8842 1079
Web: www.traveluk.ltd.uk
Email: sales@traveluk.ltd.uk

## KOtech

PC COMPONENTS
AT LOW LOW PRICES
PC's Built To Order
TEL: 08700 27 11 99
www.KOtech.co.uk
KOtech LTD
Unit 3,
Trinity Estate
Silverdale Rd.
Hayes UB3 3BN

## இறையருள் அரசி அன்னை காயத்ரி



உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பிணி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள்

020 8952 7775

வேதனைகள் தீர்க்க வல்லவர், குறைகளை போக்கி வல்லவர் இறையருள் அரசி அன்னை காயத்ரி.

## ABRA WHOLESALES LTD.

Unit 9P, Kynoch Road, Eley Estate, Edmonton N18 3BH

POUND/DISCOUNT TRADE SPECIALIST

Ph: 020 8887 9303 Fax: 020 8887 9304
sales@abrawholesales.co.uk

* Toiletries
* Household Goods
* Stationery
* Gifts & Toys
* Silk Flowers
* Mobile Phone Accessories
* Medicines
* Soft Drinks
* Greeting Cards
* Video, DVD & CDs
* Electricals

We have increased our range of products by 500 to over 6000 and our selling area to 21,000 sq. ft.

Opening Times
Mon - Fri
9am - 7 pm
Sat & Sun
9.30am - 3.30pm
Bank Holidays
9.30am - 3.30pm




Open 7 days a week

## HARTEX

ESTABLISHED 1969

THE GREAT OUT DOORS

- COMBAT
- PULLOVERS
- MAP CASES
- THERMAL UNDERWEAR
- RAINWEAR
- COMPRESSORS BAGS
- BODY WARMERS
- SHORTS
- CLOTHING
- BOOTS
- COOKWARE
- MONEY BELTS
- HIKING BOOTS
- HAMMOCKS
- CUTLERY SETS
- PLATES
- WEBBING
- GLOVES
- HEADWEAR
- HIKING BOOTS



Competitive prices

55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9BS
TEL: 01895 634244



321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX, HA2 8JA
TEL: 020 8864 3333

OPEN 7 DAYS

தீராத உங்களின் மன வேதனைகள் தீர்ந்திட, உங்களின் வாழ்க்கையில் என்றும் வெற்றி கண்டிட தரிசியுங்கள் அன்னையை 020 8905 7775, 020 8952 7775

## dotcom SOLICITORS

QUALITY AND PROFESSIONAL ADVICE TEL : 020 88809000

- PERSONAL INJURY*
- MEDICAL NEGLIGENCE*
- COMMERCIAL LITIGATION
- WILLS AND PROBATE
- CONVEYANCING (from £300.00 - excluding VAT & Disbursements)
- LICENCING - Personal / Premises / Conversation and/or Variation
- ALL EMPLOYMENT MATTERS
- ALL IMMIGRATION MATTERS

W55 GROVE BUSINESS CENTRE, 560 ?568 HIGH ROAD TOTTENHAM, LONDON N17 9TA [ email :advice@dotcomsolicitors.com ]
[www.dotcomsolicitors.com] {* No Win No Fee} < WE ALSO SUE SOLICITORS AND OTHER PROFESSIONALS > Ask for Mr. Ram